# பெண்மை.காம் மின் இதழ்

## புதுமையைத் தேடி...



# தீபாவளி சிறப்பு பக்கங்கள்

வளம் தரும் வரலக்ஷ்மி விரதம்

கௌரி விரதம்

நலம் தரும் நவராத்திரி

பக்ரீத் பண்டிகை



திருப்பாவை மற்றும் திருவெம்பாவை விரதம்

Christmas

ஜெயம் தரும் கிருஷ்ண ஜெயந்தி

# உன்னை சரணடைந்தேன்...

## Symbolism of Lord Ganesha

kirthika99@karkuzhali




## பஞ்ச பூத ஸ்தலங்கள் - *rudhraa@Rudhra*



**Jambhukeshwar represents Water.**

**Jambukeshwarar Temple, Thiruvanaikaval, Tamil Nadu.**



**Arunachaleshwar represents Fire.**

**Annamalaiyar Temple,**
**Thiruvannamalai, Tamil Nadu.**



**Ekambareswarar represents Earth.**

**Ekambareswarar Temple**
**Kanchipuram, Tamilnadu**




**Kalahastheeswara represents Air.**

**Srikalahasti temple,**
**Srikalahasti, Andhra Pradesh.**

**Natarajar represents Sky.**

**Natarajar Temple,**
**Chidambaram, Tamil Nadu.**



MY ANGADI .com

Traditional Tanjore Paintings Collection





Call us @ 83441-43220

Traditional Paintings @ www.MyAngadi.com

Free shipping across India.

International Shipping also Available.

Buy Now

# புரட்டாசி சனி விரதம்

kirthika99



**செல்வம், ஆயுள், ஆரோக்கியம் ஆகிய முப்பலனையும் தருகிறது சனிக்கிழமை விரதம்.**

நவக்கிரகங்களில் சனிபகவானை ஆயுள்காரகன் என்பர். அவரது ஆதிக்கத்தைப் பொறுத்தே ஆயுள்காலம் அமையும். ஆனால், அந்த கிரகத்தைக் கட்டுப்படுத்துவராக இருப்பவர் பெருமாள்.

சனிக்கு அதிபதி அவரே. எனவே, சனிக்கிழமைகள் பெருமாளுக்கு உகந்தது ஆயிற்று. இந்த விரதத்தை அனுஷ்டிக்க பெரிய அளவுக்கு காசு, பணம் தேவையில்லை. உண்மையான பக்தியே இந்த விரதத்திற்குரிய தேவையான பொருள்.

இதை, ஒரு சம்பவம் மூலம் தெரிந்து கொள்ளலாம். தசாவதாரங்கள் எடுத்த பின்பும், குறிப்பாக, கண்ணனாக அவதரித்து, கீதையை உபதேசித்து, வாழ்வின் உண்மை நிலையை எடுத்துரைத்த பிறகும், உலகில் பாவங்கள் குறையவில்லை. எனவே, பாவச்சுமை தாங்காத பூமாதேவிக்கு அனுக்கிரகம் செய்ய, சீனிவாசன் எனும் பெயரில் பெருமாள் அவதாரம் எடுத்து. திருப்பதி மலையில் தங்கினார்.

இவ்வூரின் அருகிலுள்ள கிராமத்தில், பீமன் என்ற மண்பாண்டத் தொழிலாளி வசித்தார். இவர், சீனிவாசனின் தீவிர பக்தர். ஆயுள் முழுவதும் சனிக்கிழமை விரதம் இருப்பதாக இவர் உறுதியேற்றுக் கொண்டார். ஆனால், இதற்கு பலனாக, “மிக உயர்ந்த செல்வம்...' வேண்டும் என, அவர் பெருமாளிடம் வேண்டுதல் வைத்தார். அது என்ன தெரியுமா? பெருமாளின் திருவடியிலேயே நிரந்தரமாக வசிக்க வேண்டும் என்பது தான்.

இவர் தினமும் மண்பாண்டம் செய்வார் அல்லவா... பாண்டம் செய்து முடித்த பிறகு, கையில் ஒட்டிக் கொண்டிருக்கும் மண்ணை வீணாக்க மாட்டார். அந்த மண்ணைக் கொண்டு சிறு, சிறு பூக்கள் செய்வார். திருப்பதி பெருமாளை மனதில் எண்ணி, தன் முன் இருந்த மண் சிலைக்கு, ”ஏடுகுண்டல வாடா, வெங்கட்ரமணா, கோவிந்தா, பத்மநாபா, சீனிவாசா...' என்றெல்லாம் பெருமாளின் திருநாமங்களைச் சொல்லி, திருப்பதி பெருமாளின் திருவடியிலேயே அந்த மண் பூக்களை தூவுவதாக பாவனை செய்து, தூவி பிரார்த்திப்பார்.

அப்போது, திருப்பதி திருமலையை ஆட்சி செய்து வந்தான் தொண்டைமான் எனும் மன்னன். அவன் ஒருநாள் ஏழுமலையான் சன்னிதிக்குச் சென்றான். பெருமாளுக்கு தூவுவதற்காக அவன் தங்கப் பூக்களை உபயமாக அளித்திருந்தான். அங்கு போய் பார்த்த போது, மண்பூக்களாகக் கிடந்தன. தங்கப் பூக்களை அர்ச்சகர்கள் அபகரித்துக் கொண்டனரோ என சந்தேகப்பட்டான். எனவே, காவலர்களை நியமித்து, அர்ச்சகர்களைக் கண்காணிக்க உத்தரவிட்டான்.

Penmai.com

மறுநாள் அவன் சன்னிதிக்கு வந்தான். அப்போதும், மண்பூக்களே பெருமாளின் திருவடியில் கிடந்தன. குழம்பிப் போன அவனது கனவில், சீனிவாசன் தோன்றினார். “மன்னா... பீமன் என்ற குயவன், என்னை மிகுந்த பக்தியுடன் மண் பூக்ககளால் அர்ச்சித்து வருகிறான்; அவற்றை நான் ஏற்றேன். அதனால், உன் தங்கப்பூக்களும், மண்பூக்களாக மாறிக் கிடக்கின்றன...' என்றார்.

மறுநாளே, பீமனைப் பார்க்க சென்றான் மன்னன் . அவர், பெருமாளின் மண்சிலைக்கு மண் பூக்களைத் தூவிக் கொண்டிருந்தார். “எதற்காக மண் பூக்களால் அர்ச்சிக்கிறாய்; தோட்டத்துப் பூக்கள் கூட கிடைக்கவில்லையா?' என்றான்.

“அரசே... நான் பரம ஏழை. இந்த வேலையை விட்டு, விட்டு பூப்பறிக்க நேரத்தை செலவிட்டால், பாண்டம் செய்யும் நேரம் குறையும். குடும்பம் மேலும் வறுமையில் தவிக்கும். அதனால் தான், என்னிடம் என்ன இருக்கிறதோ, அதனால் பூ செய்து அர்ச்சிக்கிறேன். மேலும், கல்வியறிவற்ற எனக்கு பூஜை முறையும் தெரியாது. ஆயுள் முழுவதும் சனிக்கிழமை விரதம் இருந்து, அவரது திருவடியை அடைய வேண்டும் என்பதே என் நோக்கம்...' என்றார்.

## Spiritual Notebook - October & November

15th Oct - Amavasai
18th Oct - Chathurthi Vratham
20th Oct - Sashti Vratham
16th - 24th Oct - Navarathiri
23rd Oct - Maha Navami saraswathi Pooja
24th Oct Vijaya Dhasami
26th Oct - Bakrid
27th Oct - Sani Pradosham
29th Oct - Pournami
2nd Nov - Sankatakara Chathurthi
5th Nov - Sashti Virathám

Penmai.com

## தமிழ் மந்திரம்

அல்லல் போம் வல்வினை போம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லை போம் போகாத் துயரம் போம்
நல்ல் குணம் அதிகம் ஆம் அருணைக் கோபுரத்துள்
வீற்றிருக்கும் செல்வக் கணபதியைக் கைத்தொழுத்க்கால.



# Short & Important informations about Gods & Goddess

**- Angu Aparna**



Other Names : Narayanan, Adinath
Spouse : Lakshmi
Living Place : Vaikundam
Vahanam : Garudan
Mula Mantra : Om Namo Bhagwate Vasudevaya
Gayatri Mantra : Om Narayanaya Vidmahee
Vasudevaya Dheemahi
Tanno Vishnu Prachodayaat



Other Names : Gopal, Keshavan, Kannan
Spouse : Rukmini
Mula Mantra : Om Kleem Krishnaya Namah
Gayatri Mantra : Om Daamodharayae Vidmahee
Rukmani Vallabhaye Dheemahee
Tanno Krishna Prachodayaath



Other Names : Anchaneyar, Maruthi, Anjaniputra
Mula Mantra : Om Shri Hanumate Namah
Gayatri Mantra : Om Narayanaya Vidmahee
Vasudevaya Dheemahi
Tanno Vishnu Prachodayaat



Other Names : Ramachandran, Purushottaman
Spouse : Sita
Mula Mantra : Om Sri Ramaya Namah
Gayatri Mantra : Om Dasarathaye Vidmahe
Sitavallabhaya Dheemahi
Tanno Ramah Prachodayat

Penmai.com

Other Names : Vaagdevi, Kalaimagal, Kalaivaani
Spouse : Lord Brahma
Vahanam : Swan
Mula Mantra : Om Aim Saraswatyai Namah
Gayatri Mantra : Om Saraswatye Cha Vidmahe
Brahmaputriye Cha Dheemahi
Tanno Saraswati Prachodayat





Other Names : Padma, Sridevi, Aiswarya
Spouse : Lord Vishnu
Living Place : Vaikundam
Vahanam : Owl
Mula Mantra : Om Sri Maha Lakshmyai Namah
Gayatri Mantra : Om Mahadevyai Cha Vidmahe
Vishnu Patnayai Cha Dheemahi
Tanno Lakshmih Prachodyaat



Other Names : Ambigai, Shakti, Bhagwati, Devi
Spouse : Shivan
Living Place : Trikoota Mountain
Vahanam : Lion
Mula Mantra : Om Sri Durgaya Namah
Gayatri Mantra : Om Girijaye Cha Vidmahe
Shiva Priyaye Cha Dheemahi
Tanno Durga Prachodayat



Other Names : Shankaran, Sivan
Spouse : Parvati
Living Place : Mount Kailash
Vahanam : Nandi
Mula Mantra : Om Namah Shivaye
Gayatri Mantra : Om Panchvakraye Vidmahe
Mahadevaye Dheemahi
Tanno Rudra Prachodayat

Penmai.com



Other Names : Suriyan, Aadavan
Spouse : Chayadevi
Mula Mantra : Om Suryaye Namah
Gayatri Mantra : Om Bhaskaraye Vidmahe
Divakraraye Dheemahi
Tanno Suryah Prachodayat



Other Names : Ganapati, Vinayaka, Pillaiyar
Spouse : Riddhi, Buddhi, Siddhi
Living Place : Mouse
Mula Mantra : Om Gan Ganpatye Namah
Gayatri Mantra : Om Ekadantaya Vidmahe
Vakkratundaya Dheemahi
Tanno Danti Prachodayat



Other Names : Bhadrakali, Rudrani
Living Place : Cremation Grounds
Mula Mantra : Om Kreem Kalikaye Namah
Gayatri Mantra : Om Aadhyaayai Vidmahe
Parmeshwaryai Dheemahi
Tanno Kaalee Prachodayaat

*"God grant me the serenity to accept the people I cannot change, the courage to change the one I can, and the wisdom to know it's me."*
*- Parasakthi*

# உன்னை சரணடைந்தேன்...



## The scientific explanation for visiting temple regularly

Sumathisrini

There are hundreds of temples all over India in different size, shape and locations but not all of them are considered to be in the Vedic way.

Generally, the temples are located in a place where earth's magnetic waves pass through. In simple terms, these temples are located strategically at a place where the positive energy is abundantly available from the magnetic wave distribution of north/ south pole thrust.

Because of its location, where high magnetic values are available, the Main Idol is placed in the center, and also because they place a copper plate written with some Vedic scripts, which is buried, beneath the Main Idol's placement known as "Garbhagriha" or Moolasthan, the copper absorbs the earths magnetic waves and radiates to the surroundings. Thus a person who regularly visits a temple and makes clockwise pradakshina of the Main Idol's placement, automatically receives the beamed magnetic waves which get absorbed by his body. This is very slow and a regular visit will make him absorb more energy, known as positive energy.

In addition, the Sanctum Sanctorum is completely enclosed on three sides. The effect of all energies is very high in here. The lamp that is lit radiates the heat and light energy.

The ringing of the bells and the chanting of prayers gives sound energy. The fragrance from the flowers, the burning of camphor give out chemical energy. The effect of all these energies is activated by the positive energy that comes out of the idol. This is in addition to the north/south pole magnetic energy that is



absorbed by the copper plate and utensils that are kept in the Moolasthan.

Penmai.com

The water used for the Pooja is mixed with Cardamom, Benzoine, Holy Basil (Tulsi), Clove, etc is the "Theertham". This water becomes more energized because it receives the positiveness of all these energies combined. When persons go to the temple for Deepaaraadhana, and when the doors open up, the positive energy gushes out onto the persons who are there.

The water that is sprinkled onto the people passes on the energy to all. That is the reason why, men are not allowed to wear shirts to the temple and ladies have to wear more ornaments because it is through these jewels (metal) that positive energy is absorbed in ladies. It is proved that Theertham is a very good blood purifier, as it is highly energized.
In addition, temples offer holy water (about three spoons). This water is mainly a source of magneto therapy as they place the copper water vessel at the Garbhagriha. It also contains cardamom, clove, saffron, etc to add taste and Tulsi (holy Basil) leaves are put into the water to increase its medicinal value! The clove essence protects one from tooth decay, the saffron & Tulsi leave essence protects one from common cold and cough, cardamom and benzoine known as Pachha Karpuram, acts as a mouth refreshing agents. This way, one's health too is protected, by regularly visiting Temples!!!



## தமிழ் மந்திரம்

பாலும் தெளிதேனும் பாக்கும் பருப்பும்
இவை நான்கும் கலந்துன்க்கு நான் தருவேன்
கோலஞ்செய் துங்க கரிமுகத்து
தூமணியே நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா.

### Spiritual Notebook - November Month - Rudhraa

11th - Dhanvantri Jayanti, Pradosham Vratam
12th - Hanuman Jayanti, Sivarathri
13th - Deepavali Festival, Lakshmi Puja, Amavasya
14th - Skanda Sashti Vratam begins
15th - Chitragupta Puja
16th - Sabarimala Temple opens, Karthigai Masam begins
17th - Chadhurthi
19th - Skanda Sashti Vratam ends
24th - Tulsi Vivah, Ekadasi 25th - Pradosham
25th - Moharam
27th - Krithigai
28th - Karthika Deepam Festival, Pournami



Online Tamil Book Store / Cds DVDs







ஆன்மீகப் புத்தகங்கள் | பூஜை & விரத முறைகள் | புராணக் கதைகள் & இதிகாசப் புத்தகங்கள்

Buy Now

Free shipping across India for purchase above Rs. 500*

@ one place
www.MyAngadi.com



# தீபாவளி சிறப்பு பக்கங்கள்

**Stories behind Diwali - Rudhraa**

There are few more days ahead for celebrating the Diwali in our houses. Diwali is the "Festival of Lights", It is the glorious occasion, which is celebrated by everyone in our Nation by lighting tiny diyas in and around the house. Like other festivals, Diwali also has some stories behind its celebration.

Here, is the to share my knowledge of the stories and legends behind Diwali...

**Diwali - The day of Lord Shri Rama**
One of the most famous legend behind the celebrations of Diwali is Lord Shri Ram.

All knows about the story of Ramayanam. Ravanan, the king of Lanka kidnapped Sita Devi, Shri Ram's wife during their vanavasam. Lord Rama was defeated Ravana and their brothers in the war and finally sita was released from his custody. After 14 years of vanavas, on the arrival of Lord Ram along with his wife Sita and his brother Lakshmana, people of Ayodhya celebrated the day and decorated their homes and the city of Ayodhyaa by lighting small lamps all over, to give a warm and pleasant welcome to their beloved prince Shri Ram and Sita Devi and His brother Lakshman.

**Diwali and Goddess Lakshmi**
On the auspicious day of 'Amavasyaa' in the Month of Karthighai, Lakshmi - The Goddess of wealth and prosperity was appeared during the churning of the ocean, which is known as 'Samudra Manthan', by the "Arakkar" (demons) on one side and 'Devarkal' on the other side. So, The worship of Goddess Lakshmi by doing pooja for lakshmi on the day of Diwali became a tradition



**Diwali - The day of Lord Krishna**
Accordind to our South Indian myths and beliefs, Diwali is the day to celebrate the dead of demon Narakasuran.

Narakasuran was the ruler of Pragjyotishpur and he troubled women, Gods

Penmai.com

(devar) and saints during his ruling. He had done wars with devars, and soon after the victory over Lord Indran during a war, Narakasur snatched away the Goddess Aditi who is the mother of devars. Goddess Aditi was the ruler of Suraloka as well as she is a relative of Satyabhama who is the wife of Lord Krishna.
Narakasur also imprisoned sixteen thousand daughters of Gods and saints.

Gods and saints were appealed to lord krishna. Finally With the help of Lord Krishna, Satyabhama defeated with Narakasur and released all the women from his Custody and restored the Mother Goddess Aditi.

**Diwali - The day of Pandavas**
The Great Idhihas 'Mahabharata' has an another interesting story related to the Diwali ie 'Kartik Amavasyaa'.

According to the Mahabharata story, 'The Pandavas'- Five brothers Yudhishthhira, Bhima, Arjuna, Nakula and Sahadeva, were sentenced to thirteen years banish by "The Kauravas" (Duryodhana and his ninety nine brothers), due to their loss in the game of dice.

The Pandavas expended thirteen years in the forest and they returned to their kingdom on the day of 'Kartik Amavasyaa' which is known as Diwali.

The people of Pandavas kingdom were so excited on the return of Pandavas to their kingdom. In order to welcome the Pandavas, People of the kingdom, celebrated the day by lighting the earthen lamps all over in their city.

**Diwali and Vikramaditya**
There is an another legend behind Diwali celebrations is one of the greatest King - Vikramaditya.

The Mythological stories says that it was the day when the king Vikramaditya was coroneted. The people of his kingdom praised him and celebrated the day by lighting small lamps all over their house as well as in the cities.

Penmai.com



# கேதார கௌரி விரதம் - Kausalya



**விரத முறை மற்றும் கதை:**

விரதங்களிலே சிறப்பான இடத்தினைப் பெறும் விரதம் கேதார கௌரி விரதம். திருக்கைலாய மலையிலே பரமசிவன், பார்வதி சமேதராக வீற்றிருந்த வேளை. விநாயகனும் முருகனும்கூட இருந்தனர். முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் கூடியிருந்தனர். நாரதர் இசை மீட்டினார். நந்தி மத்தளம் கொட்ட, ஊர்வசி, மேனகை, திலோத்தமை ஆகியோரின் நடனம் அமர்க்களமாக நடந்தேறியது.

அப்போது அங்கு வந்த பிருங்கி முனிவர் விகடக்கூத்து ஆடி அங்கிருந்தவர்களை மகிழ்ச்சி அடையச் செய்தார். பிறகு உமாதேவியை விட்டுவிட்டு சிவபெருமானை மட்டும் சுற்றி வந்து வணங்கினர். கோபமுற்ற உமாதேவி தன்னை பிருங்கி முனிவரின் உடலிலிருந்த சக்தியை எடுத்துக் கொண்டார். அதனால் சபையிலே சோர்ந்து வீழ்ந்தார் அம்முனிவர். சிவபெருமான் பிருங்கி முனிவரிடம் தடியொன்றைக் கொடுத்து அதனை ஊன்றுகோலாகக் கொண்டு நடக்க வழி செய்தார். மீண்டும் உமாதேவிக்கு ஆத்திரம் ஏற்பட்டது. உடனே சிவபெருமானிடம் கோபித்துக்கொண்டு பூவுலகுக்கு வந்து, ஒரு வில்வ மரத்தடியில் வீற்றிருந்தார். தேவியின் வருகையால் அந்த வனமே புதுப்பொலிவு பெற்றது. அங்கு வசித்த கௌதம முனிவர் இத்திடீர் மாற்றம் ஏன் என அறிய முனைந்தார். உமாதேவியைக் கண்டவுடன் விஷயமங்களைத் தெரிந்து கொண்டார்.

புரட்டாசி மாதம் சுக்கில பட்ச தசமி தொடங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்சம் தீபாவளி அமாவாசை வரையுள்ள கேதாரீஸ்வரர் விரத மகிமை பற்றி விளக்கினார். உமை அம்மையும் விரதம் மேற்கொண்டு அர்த்தநாரீஸ்வரர் வடிவமானார்.

ஆண்-பெண் சமத்துவம் அறியப்படாத காலத்தில் உமாதேவி பெண்ணுக்கு சம உரிமை கேட்டு வாதாடி அவ்வுரிமையை பெற்றுத்தந்திருக்கிறார். ஆணின் உடலின் பாதியும் பெண்ணின் உடலின் பாதியும் அறுவைசிகிச்சை வாயிலாகப் பொருத்தலாம் என்ற நவீன விஞ்ஞான விந்தையும் இந்நிகழ்வு காட்டுகிறது. எதிர்காலத்தில் விஞ்ஞானத்தில் ரோபோக்களைப்போல அர்த்தநாரீஸ்வரர்கள் உருவாக்கப்பட்டால் ஆச்சர்யமேதுமில்லை!

கேதார கௌரி விரதம் 21 நாட்கள் கடைபிடிக்கப்படுகிறது. 2012 அக்டோபர் 25-ம் நாள் (ஞாயிற்றுக்கிழமை) தொடங்கி, நவம்பர் மாதம் 13-ம் நாள் தீபாவளித் திருநாள் அன்று முடிவுறுகிறது.

- வீட்டில் / பூஜையறையில் / வில்வ மரத்தடியில் / ஆலயங்களில் இவ்விரதத்தை மேற்கொள்ளலாம்.
- எள்ளுருண்டை, மஞ்சளுருண்டை, அதிரசம், வாழைப்பழம், தேங்காய், பாக்கு, வெற்றிலை ஆகியவற்றை நிவேதனமாக்கி, ஒருவேளை உணவாக உண்டு 20 நாள் நோன்பிருப்பது பழங்கால வழக்கம்.
- 21 நாட்களும் விரதம் மேற்கொள்ள முடியாதோர் 9 அல்லது 7 அல்லது குறைந்தபட்சம் 3 நாட்கள் விரதம் அனுஷ்டிக்கலாம்.
- கௌரி கேதார விரதத்தை 21 ஆண்டுகள் அனுஷ்டிக்க வேண்டும் என்பது சாஸ்திரம். இயலாதோர் ஏழு ஆண்டுகளாவது கடைபிடிக்க வேண்டும்.

கௌரி கேதார விரதம் கடைபிடிப்பதால் அருளும் பொருளும் சேரும், அன்பு, அடக்கம், அமைதி உண்டாகும் மரணத்தையும் துச்சமாக மதிக்கின்ற சக்தி சேரும். கல்வியறிவு, பதவி பட்டம், பரிசு, பதக்கம் என பல வளமும் சேரும். வெற்றிகள் தொடரும். குழந்தை பாக்யம் உண்டாகும். மனை, வீடு, வாகனம் வந்து சேரும்.

சக்தியெனும் உமையாள் நமக்குக் காட்டிய வழியில் கௌரி கேதார விரதம் இருந்து வளமான வாழ்வு பெறுவோமாக!

## லட்சுமி குபேர பூஜை - Angu Aparna



தீபாவளிக்கு மறுநாள் லட்சுமி குபேர பூஜை செய்வது. இந்த பூஜை செய்வதால் வறுமை நீங்கி வளம் பெருகும். திருமகள் திருவருளால் செல்வம் நிறையும். பிணி, மூப்பு, துன்பம் தொலையும்.

### பூஜை செய்யும் முறை

"சுக்லாம் பரதரம்' சொல்லி கணபதியை வணங்கியபின், லட்சுமி, துர்க்கா, சரஸ்வதிக்கு குங்குமத்தினால் அர்ச்சனை செய்து, பின் குபேர ஸ்துதி கூறி குபேரனை வணங்க வேண்டும். லட்சுமியும் குபேரனும் செல்வத்தின் அதிபதிகள்.

### லக்ஷ்மி குபேர ஸ்துதி

"ஓம் குபேராய நம; ஓம் மகாலட்சுமியே நம' என 108 முறை சொல்லி லக்ஷ்மி குபேர பூஜை செய்ய வேண்டும்.

## தீபாவளி பூஜை பொருட்கள்

தீபாவளி அன்று எல்லா தேவதைகளும், நாம் பூஜை செய்ய உபோயோகிக்கும் எல்லா பண்டிகைப் பொருட்களில் வாசம் செய்வர் என்பது முன்னோர் வழியாக அறியப்பட்ட செய்தி.

எண்ணெயில் லட்சுமியும், அரப்புத் தூளில் கலைவாணியும், சந்தனத்தில் பூமாதேவியும், குங்குமத்தில் கௌரி தேவியும் , மலரில் மோகினியும், தண்ணீரில் கங்கா தேவியும், புத்தாடையில் விஷ்ணுவும், பட்சணத்தில் அமிர்தமும், தீபத்தில் பரமாத்மாவும் உறைவதாக புராணங்கள் கூறுகின்றன.

## தீபாவளி நீர் நிரப்பும் பண்டிகை

அக்காலத்தில் நம் முன்னோர்கள் தீபாவளிக்கு முதல் நாளை நீர் நிரப்பும் பண்டிகை என்பர். தீபாவளிக்கு முந்தைய தினம் ஒரு பெரிய அண்டாவை சுத்தம் செய்து பொட்டிட்டு அந்த பாத்திரம் முழுதும் சுத்தமான நீரை நிரப்புவார்கள். பின் அந்த நீரில் அரசு, பலா, ஆல், அத்தி, மாவிலங்கை ஆகிய ஐந்து வகை மரப்பட்டைகளை ஊற வைப்பார்கள்.

பின் ஊற வைத்த அந்த நீரை பின்னிரவு 3.00 மணிக்கே சுடவைத்து விடுவார்கள். அந்த வெந்நீரில்தான் தீபாவளி அன்று காலை கங்கா ஸ்நானம் செய்வார்கள்.

இவ்வாறு கங்கா ஸ்நானம் செய்தவர்களுக்கு நரக படலம், அகால மரணம், கோர மரணம், ரோகம் ஏற்படாது என்பது மரபு.

## யம தீபம் என்பது என்ன? எப்பொழுது, எதற்காக இந்த தீபம் ஏற்றப்பட வேண்டும்?

தீபாவளிக்கு முதல் நாள் இரவு யமதீபம் ஏற்ற வேண்டும். பெரிய அகல்விளக்கு ஒன்றில், முழுதுமாக எண்ணை ஊற்றி திரியிட்டு தீபம் ஏற்ற வேண்டும்.

உங்கள் வீட்டு மொட்டைமாடி அல்லது மேற்கூரையில், மிக உயரமாக எவ்வளவு உயரம் வைக்க முடியுமோ அவ்வளவு உயரத்தில் யமதீபத்தை தென் திசை நோக்கி வைக்க வேண்டும். இதனால் யமபயம்/மரண பயம் நீங்கும்.

**கதை:**
சூரியனின் பிள்ளை யமன், பெண் யமுனா. இருவரும் பாசப்பிணைப்புடன் உள்ளவர்கள். ஒருசமயம் யமுனா தன் சகோதரன் யமனை தன் வீட்டுக்கு

அழைத்து விருந்து படைத்தாள்.

தன் சகோதரியைக் காண வந்த யமன் ஏகப்பட்ட துணிமணிகள், நகைகள், பட்சணங்களை சீர்வரிசையாகக் கொண்டு வந்து கொடுத்தான்.

யமுனா தன் அண்ணனுக்கு தன் கையாலேயே பலவித பட்சணம் தயாரித்து சாப்பிட வைத்தாள். இதனால் மனம் மகிழ்ந்த யமன் தங்கையை "தீர்க்க சுமங்கலி பவ' என வாழ்த்தினான்.

இதனால் தன் சகோதரனால் தன் கணவனுக்கு ஆபத்தில்லை என்று ஆனந்தப்பட்டாள். இப்படி பாசமுடன் பழகும் உடன்பிறப்புகளுக்கு யமபயம் இருக்காது.

இப்படியாக வரலாறு கூறுகிறது.

அது முதல் சகோதரிகளுக்கு தீபாவளி பணம் கொடுக்கும் பழக்கம் உருவானது. யமத்வீதியா நன்னாளில் சகோதரனை சந்தோஷப்படுத்தும் சகோதரிகளுக்கு விதவைக் கோலம் உண்டாகாது என்பது மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

## தீபாவளி மருந்து செய்யும் முறை - Sumathisrini

தீபாவளி என்றாலே வீட்டுக்கு வீடு விருந்துதான். அன்று ஒரு நாள் எல்லா 'டயட்'டையும் விட்டுவிட்டு விதவிதமான பலகாரங்களை நண்பர்களோடும், உறவினர்களோடும் பகிர்ந்து மகிழ்ச்சியாகக் கொண்டாடும் நாள். பலகாரங்களுடன் தீபாவளி மருந்தும் அவசியம் இருக்கும். இங்கே தீபாவளி மருந்து செய்வதற்கான குறிப்பு இதோ.



**தேவையானவை:**
இஞ்சி - 50 கிராம் - (பொடிப்பொடியாக நறுக்கியது)
ஜீரகம் – 2 தேக்கரண்டி
மிளகு - 11/2 (ஒன்றரை) தேக்கரண்டி
தனியா - ஒரு தேக்கரண்டி
ஏலக்காய் - 4
வெல்லம் - 200 கிராம்
நெய் - 50 கிராம்

**செய்முறை:**
இஞ்சி, மிளகு, தனியா, ஜீரகம் இவை எல்லாவற்றையும் ஒன்றாக மிக்சியில் போட்டு, சிறிதளவு தண்ணீர் விட்டு நைசாக அரைத்துக்கொள்ளவும். விழுது கெட்டியாக இருந்தால் இன்னும் சிறிதளவு தண்ணீரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இதனுடன் வெல்லத்தைப் பொடியாக்கி சேர்த்து அடுப்பில் மெலிதாக எரியவிட்டு, கட்டியாகாமல் கிளறவும். இஞ்சி விழுது முழுவதும் வெந்து சிரப் அளவு பக்குவம் வந்தவுடன், அடுப்பைத் தொடர்ந்து மெலிதாக எரியவிட்டு நெய்யைச் சிறிது சிறிதாக ஊற்றிக் கிளறவும்.

இந்தக்கலவை கருப்பு நிறத்துடன் கெட்டியாக ஆனவுடன் ஏலக்காய்ப் பொடியைத்தூவி மீதமிருக்கும் நெய்யையும் விட்டு அடுப்பிலிருந்து இறக்கிவிடவும். இப்போது தீபாவளி மருந்து தயார். தேக்கரண்டியால் எடுக்குமளவிற்குப் பக்குவமாக இருக்கும்.

Penmai.com

# உன்னை சரணடைந்தேன்...

**'ஓம்' என்னும் ப்ரணவம் vijigermany@Viji**

எந்த ஒரு ஒலிக்கும் காரணமாக இருப்பது ப்ரணவம் எனப்படும். படைப்பு அனைத்தும் 'ஓம்' என்ற சொல்லில் அடங்கும். 'ஓம்' படைப்பின் ரகசியம் ஆகும்.



'ஓம்' என்பதை பிரித்தால்
அ + உ + ம் என்று பிரிக்கலாம்.
அ என்பது படைத்தல் / பிரம்மா / இறந்தகாலம்.
உ என்பது காத்தல் / விஷ்ணு / நிகழ்காலம்
ம் என்பது அழித்தல் / சிவன் / எதிர்காலம்

இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் மூன்று தொழிலுக்கு உட்பட்டு இருக்கும். அதாவது உலகத்தில் தோன்றிய அனைத்தும் ஒருநாள் மறைந்தே ஆகவேண்டும் என்பது நியதி. அதனை விளக்குவதே 'ஓம்' என்னும் ப்ரணவம்.

இந்த பிரபஞ்சமும் 'ஓம்' என்பதில் அடங்கும். 'அ'வில் தோன்றி 'உ'வில் இருந்து (வாழ்ந்து) 'ம்'ல் முடியும் (மறையும்). அதனால தான் நமது ரிஷிகள் 'ஓம்' என்னும் பிரணவமே மொத்த பிரபஞ்சமாக இருக்கிறது என்று கண்டார்கள்.

நாம் சாதாரணமாக எந்த ஒரு சத்தத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் இந்த மூன்று தொழில்கள் வருவதை அறியலாம். மூன்று தொழில்கள் என்பது பிரணவமே. பிரம்மத்தின் நாதம் ப்ரணவம். பிரபஞ்சத்தின் இயக்கத்தை சப்தத்தில் குறிப்பது தான் 'ஓம்'.



'ஓம்' என்கிற ப்ரணவ மந்திரம் இல்லாமல் எந்த ஒரு மந்திரமும் இல்லை. ஓம்-ன் சிறப்பை நமது வேதங்களும் புராணங்களும் கூறியிருக்கின்றன.

கந்தபுராணத்தில் பிரம்மன் ( படைப்புக் கடவுள்) பிரணவ மந்திரத்தையும் அதன் பொருளையும் மறந்தான். அதனால் கந்தன் அவனைச் சிறையில் அடைத்தான். பிரம்மன் சிறைப்பட்டதால் படைப்புத் தொழில் நடைபெறவில்லை. ஈஸ்வரன் பிரம்மனை விடுவிக்கக் கோரி கந்தனிடம் கேட்டான். கந்தன் ப்ரணவ மந்திரத்தின் பொருளைக் கேட்டான். ஈஸ்வரன் நீயே சொல் என்று கூற, கந்தனே தந்தையாகிய ஈஸ்வரனுக்குத் தகப்பன் சாமியாகி, ப்ரணவ மந்திரத்தின் பொருளை உபதேசித்தான்.
இது 'ஓம்' என்னும் ப்ரணவ மந்திரத்தின் பொருளையும் அதன் சிறப்பையும் விளக்கும் ஒரு சிறு நிகழ்வு ஆகும்.

**Spiritual Notebook - Rudhraa**

**December**

11th - Pradosh Vratam
13th - Amavasya
16th - Margazhi Matham begins in Tamil Calenda
18th - Sashti Vrat – Muruga Sashti Fasting
24th - Vaikunta Ekadasi Vratam
25th - Christmas, Pradosh Vratam, Karthig
26th - Sabarimala Mandala Pooja
27th - Pournami Vratam
28th - Thiruvathira Festival and Aaruthra Darisanam.

**January**

1st - New year

Penmai.com



மார்கழி மாதம் திருவெம்பாவைக்கு முந்திய பத்து நாட்கள் பெண்களால் கைக்கொள்ளப்படும் விரதம் இது. "பாவைநோன்பு", " கார்த்யாயனிவிரதம்” என்று அழைக்கப்படும் சிவ விரதமாகவும், வைணவ விரதமாகவும் இது போற்றப்படும்.

மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் கன்னிப்பெண்கள் அதிகாலையில் எழுந்து ஒருவரையொருவர் துயிலெழுப்பி கூட்டமாகச் சென்று பொய்கையில் நீராடி இறைவன் புகழ் பாடி வழிபடுவதை திருவெம்பாவைப் பாடல்களில் குறிப்பிடுகின்றார். இதனைச் சங்க நூல்கள் "தைந்நீராடல்" என்றும் "அம்பா ஆடல்" என்றும் கூறுகின்றது.

வைணவப் பெண்களும் ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி நீர்த்துறையில் நீராடி கண்ணனைப் போல உருவம் செய்து கண்ணனே கணவனாக வர வேண்டுமென்று வேண்டி, நெய், பால் உண்ணாது, மையிட்டெழுதாது, மலரிட்டு முடியாது, தீய சொற்களைக் கூறாது, ஐயமும் பிச்சையுமிட்டு இவ்விரதத்தை மார்கழி முப்பது நாட்களும் மேற்கொண்டனர் என்று "திருப்பாவை" கிருஷ்ண பாகவதத்திற்கு இயையக் கூறுகின்றது.

திருவெம்பாவையில் கன்னிப் பெண்கள் சிவனடியார்களே தமக்குக் கணவராக வர வேண்டுமென்றும் நாடு மலிய மழை பெய்ய வேண்டும் என்றும் விரும்புவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

திருவெம்பாவை விரதத்தை, சைவ சமயத்தவர்கள் மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நாளிற்கு ஒன்பது நாட்கள் முதல் "நோன்பை" ஆரம்பித்து பத்தாவது நாள் திருவாதிரை அன்று நிறைவு செய்வார்கள். ஆனால் வைணவ சமயத்தவர்கள் மார்கழி மாதம் முழுவதும் நோன்பு இருந்து வணங்குவார்கள்.



மார்கழி மாதம் தஷிண அயனத்தின் இறுதி மாதமாகும்.

மார்கழி மாதத்தில் தில்லைச் சிதம்பரத்தில் கோவில் கொண்டருளிய நடராஜப் பெருமானைத் தரிசிக்க தேவர்கள் ஒன்று கூடுவதாக ஐதீகம் உண்டு. தேவர்களுக்கு இம்மாதம் அதிகாலைப் பொழுதாகும். இக்காலத்தில் (வைகறையில்) சுவாமி தரிசனம் செய்வது உத்தமமாகக் கருதப்படுகின்றது. அக்காலத்தைப் பிரம்மமுகூர்த்தம் என்றும் அழைப்பர்.

மார்கழி மாதத்து திருவாதிரை நட்சத்திரத்தில் சிவ பெருமானைக் குறித்து கடைப்பிடிக்கப்படும் விரதம் இதுவாகும். சைவர்களுக்கு மார்கழி மாதம் திருவாதிரை, திருவெம்பாவை நோன்பினாலும், விநாயகர் சஷ்டி விரதத்தாலும் பெருமை பெறுகின்றது. சைவர்களுக்கு மட்டுமல்லாமல் வைஷ்ணவர்களுக்கும் இம்மாதம்

Penmai.com

சிறப்புக்குரியதாகும். சுவர்க்க வாயிலில் ஏகாதசி விரதம் இம்மாத்திலேயே கடைப்பிடிக்கப் பெறுகின்றது.

மார்கழி மாதத்தில், பெண்கள் நோற்கும் விரதங்களில் முக்கியமானது மார்கழி நோன்பாகும். மார்கழியில் நோற்பதால் "மார்கழிநோன்பு" என்றும், கன்னிப்பெண்களாலும், "பாவை" அமைத்து நோற்கப்படுவதாலும் "பாவைநோன்பு" என்றும் அழைக்கப் பெறுகின்றது.

சைவ கன்னியர்கள்; பனி நிறைந்த மார்கழி மாதத்தில் பொழுது புலர்வதன் முன் எழுந்து, மற்ற தோழியர்களையும் (பெண்களையும்) எழுப்பி, "கண்ணைத் துயின்று அவமே காலத்தைப்போக்காதே" என அழைத்து ஆற்றங்கரைச் சென்று, "சீதப்புனல் ஆடி சிற்றம்பலம்பாடி" ஆலயம் சென்று "விண்ணுக்கொரு மருந்தை வேதவிருப்பொருளைக் கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துள்ளம் உருகி உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம் அன்னவரே எம் கணவர் ஆக" அருள் தருவாய் என வேண்டுவர்.

வைணவ கன்னியர்களும் பொழுது புலர்வதன் முன் எழுந்து தமது தோழியர்களை அழைத்து ஆற்றங்கரைச் சென்று, சீதப்புனல் ஆடி அங்குள்ள மணலினால் "பாவை" போன்ற உருவம் செய்து, மலர்கள் சூட்டி, அப்பாவையை கௌரி தேவியாக ஆவாகணம் செய்து பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் அடி பாடித் துதித்து பின் ஆலயம் சென்று வழிபட்டுகின்றனர்.

மணிவாசகப் பெருமான் பாடியருளிய திருவெம்பாவையும், ஆண்டாள் அருளிய திருப்பாவையும் மார்கழி நோன்பை அடிப்படையாகக் கொண்டவை. மார்கழிநோன்பு, சங்ககாலம் முதலே தமிழரிடம் இருந்து வரும் நோன்பாகும் என்பது பரிபாடல், நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்னும் சங்க கால நூல்களால் அறியலாம்.

மணமாகாத பெண்கள் இந்த நோன்பை நோற்கின்றனர். "அம்பா ஆடல்" என்பதற்குத் "தாயுடன் ஆடுதல்" என்று பொருள். பாவை போல ஒரு பெண் பிள்ளையின் – தாய் கடவுளின் வடிவை அமைத்து வணங்கி வழிப்பட்டுப் பின் நீராடுவர். பாவை நோன்பு நோற்பவர் விரும்பத்தக்க சிறந்த கணவனைப்



பெறுவர் என்பது நம்பிக்கை. இது நாட்டில் மழை பெய்ய நோற்கும் நோன்பு என்று கூட கொண்டனர். கற்பே மழைத் தரும் என்று நம்பிய தமிழுலகம் இக்கன்னியர் நோன்பை மழைக்கென நோற்கும் நோன்பாகவும் கருதினர். பின்னர் இந்த இரண்டையும் வேறு என பிரிப்பதும் வழக்கமாகி விட்டது. பெண்கள் அழகைப் பெற விரும்பினால் செய்யும் நோன்பு ஒன்றை விஷ்ணு தருமோத்த புராணம் கூறுகிறது. இந்த நோன்பு மார்கழி மாதத்தில் நடைபெறும் என்றும் அப்போது அவியுணவே கொள்ளுதல் வேண்டும் என்றும் அந்தப் புராணம் கூறுகிறது. அம்பா ஆடல் என்பதற்கும் உலகத்தாயின் வடிவைப் பாவையாக அமைத்து வழிபடுவது என்று பொருள் கூறலாம். .



வைணவப் பெண்கள் கண்ணனின் நெறி வாழும் ஆடவரையே கணவனாகப் பெறவும், சைவ மங்கையர் சிவ நெறியில் தோய்ந்த உள்ளம் உடைய ஆடவரையே கணவராகப் பெறவும் வேண்டிச் சிறப்பாக இந்நோன்பை மேற்கொள்கின்றனர்.



மாணிக்க வாசகர் சிவ பெருமான் மீது பாடியருளிய 'திருவெம்பாவை' யும் பன்னிரண்டும், ஆழ்வார்களில் ஒரே பெண்மணியானவரான ஆண்டாள் பாடியருளிய பாவைப்பாட்டாகிய 'திருப்பாவை' யும், பாவைப் பாட்டுக்களில் சிறந்தவையாகும். கன்னிப் பெண்கள் தோழியரை நீராட வரும்படி அழைக்கும் போதும், தோழியருடன் நீராடும் போதும் இப்பாவைப் பாடல்களை பாடி ஆடுகின்றனர்.

அம்பாள் ஆலயங்களிலும், சிவன் ஆலயங்களிலும் அதிகாலையில் மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருப்பள்ளியெழிச்சி 10 பாடல்களும், திருவெம்பாவை 20 பாடல்களும் பாடப்பெறுகின்றன. வைணவ ஆலயங்களில் ஆண்டாள் பாடியருளிய திருப்பாவை 30 பாடல்களும் பாடப் பெறுகின்றன.

## தமிழ் மந்திரம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயன் திருநீறே.




# CHRISTMAS



Christmas is named after Christ. This is the birthday of Lord Jesus, the Saviour Christ, the Yogi of the East. He was born in a stable at Bethlehem, of Mary and Joseph. Mary and Joseph made the stable a home for Christ King, the Prince of Peace. The birth of Jesus is celebrated all over the world as the sacred Christmas.

Lord Jesus was an embodiment of mercy, love and humility. He was an apostle of non-violence and peace. His body was crucified, but his voice has been speaking through the centuries.
The message of Christmas is the message of universal love. It is the message of ineffable divine glory and splendour. The message of Christmas is the message of peace and goodwill among all nations.

Christmas is more than a day of rejoicing and festivity. It is a day for realizing the Christ-consciousness or cosmic consciousness. It is a day for remembering the noble deeds of Lord Jesus and his sacred life of pristine purity. Christmas comes and Christmas goes, but let the spirit of Christmas be ever with you all.



Merry-making is not Christmas at all. Christmas does not consist in ringing bells and singing songs, exchanging mutual gifts and sending Christmas cards, and in enjoying rich repasts and heavy dinners and eating cakes.

Christmas is a state of spiritual awakening. To realize the Kingdom of Heaven within yourself, to hold communion with the Lord in the chambers of your heart, to regain your lost divinity, to attain Christ-consciousness or cosmic consciousness, to love all, to include all in the warm embrace of your love is real Christmas.

Realize the spirit of Christ. Walk in the footprints of Christ. Dive deep into the heart of Jesus. Ever seek to express, in your daily life, love, joy and peace. Imbibe Christ's message of love and sacrifice. Manifest the latent Christ within you. Follow the Sermon on the Mount. Attain God-consciousness. Live in the spirit of Christ's teachings. Annihilate this little self-arrogating personality and melt yourself in Christ or the Universal Soul. This is real Christmas.

Those who are endowed with



purity of heart, humility, universal love, generosity and nobility - they only can attain the Kingdom of God or supreme peace and immortality.



The spirit or heart of Christ is seriously lacking in the vast majority of persons. The love of Christ is badly wanted. Christmas without love, mercy and purity is nothing.

Real Christmas never comes and goes. It is eternal. Feel the spirit of Christmas not only on one day, but throughout the year. Every day is a Christmas day for a real follower of Christ, for a thirsting aspirant.

# CHRISTMAS RECIPES

**- Nishahameetha**

## Christmas Triangles



### Ingredients

50g - puffed rice cereal, 100g - milk powder, 100g - desiccated coconut, 125 - icing sugar, 80g - green cherries, chopped, 80g - red cherries, chopped, 50g - Kismis, 250g - white vegetables shortening

### Procedure

- In a large bowl, mix puffed rice, milk powder, coconut, icing sugar, cherries and sultanas. Make a well in the center.
- Melt the shortening and add to the well in the rice mixture.
- Mix with a wooden spoon. Spoon into a shallow 28x18cm tin with foil and smooth down the surface.
- Chill for 30 minutes. Remove the foil and cut into small triangle to serve.



## Christmas Fudge

### Ingredients

1 cup sugar, 1 cup plain flour, 1 cup chocolate syrup, 1/2 cup butter, 3 eggs whites, 1 tsp vanilla essence, 1/2 tsp salt, 1/2 cup chopped nuts

### Method

- Beat butter and Sugar till light. Add eggs and beat well till fluffy. Add chocolate syrup and vanilla essence.
- Mix it well. Mix flour and salt and beat well. Preheat oven and 350F. Pour the mixture in baking dish.
- Garnish with nuts. Bake for 25 mins. (till toothpick comes out clean when put in the center). Cool it in refrigerate before serving.

Penmai.com

MY ANGADI .com

Traditional Tanjore Paintings Collection



Call us @ 83441-43220

Free shipping across India.

International Shipping also Available.

Traditional Paintings @ www.MyAngadi.com

Buy Now

# உன்னைச் சரணடைந்தேன்...

...Parasakthi

## பொங்கலோ பொங்கல்

பொங்கல் திருநாள் தமிழர் திருநாள். தமிழர் தம் வாழ்வின் தொன்மையான சுவடுகளை கொண்ட ஒரு பண்டிகையாகும். உழவர்கள் தங்கள் அறுவடைகளை முடித்து அந்த போகம் சிறப்புற நிகழ்ந்ததற்கு சூரியனுக்கு பொங்கல் படைத்து கொண்டாடும் உழவர்களின் திருநாளே பொங்கல்.

சூரியனுக்கும், நிலத்திற்கும் வளப்பம் சேர்க்கும் வான்பொருட்கள் அனைத்திற்குமான படைப்பு வழிபாட்டு நாளாகவே பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது. நிலம் என்பது வேறு எந்த பண்பாட்டிலும் இல்லாத அளவிற்கு தமிழர் பண்பாட்டில் அதி முக்கியத்துவம் பெற்ற ஒன்று. பண்பாட்டையே 5 நிலப்பகுதிகள் கொண்ட திணை ஒழுக்கங்களாக வகுத்திருப்பது தமிழர் பண்பாட்டில் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

கிராமிய வாழ்வின், அனைத்து பண்பாட்டுத் தன்மைகளோடும் சிறப்புறக் கொண்டாடும் இந்தப் பொங்கல் பண்டிகையை, நகரவாசிகளும் தமக்கு உணவு அளிக்கும் உழவர்களுக்கு நன்றி செலுத்தும் நாளாகக் கொண்டாடுகின்றனர்.

சங்ககாலத்தில், வேளாண் காலத்தில் நல்ல மழை பெய்யவும், பயிர்கள் செழிக்கவும் பெண்கள் விரதத்தைக் கடைப்பிடித்தார்கள். தை முதல் நாளில் இந்த விரதத்தை முடிப்பார்கள். உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல். உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து, தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்து வழிபட்டனர்.

**போகிப் பண்டிகை:**
'பழையன கழித்து, புதியன புகவிடும்' நன்னாளே போகித் திருநாள் ஆகும். தமிழ் ஆண்டின் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று, அதாவது பொங்கல் திருநாளின் முதல்நாள் கொண்டாடப்படுகிறது. போகியன்று, வீட்டின் கூரையில் பூலாப்பூ செருகப்படும். அன்றைய தினம், வீட்டில் தேங்கிப் போயிருக்கும் குப்பைகள், தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தி வீடு சுத்தமாக்கப்படும். வீடு மட்டுமல்ல, மனதில் இருக்கும் தீய எண்ணங்களும், தவறான எண்ணங்களும் நீக்கப்படவேண்டும் என்பது இப்பண்டிகையின் உள்ளார்ந்த தத்துவமாகும். பழந்துயரங்களை அழிப்பதால் இப்பண்டிகையைப் "போக்கி" என்றனர். அந்தச் சொல் நாளடைவில் மருவி "போகி" என்றாகிவிட்டது. போகிப் பண்டிகையின் போது போளி, வடை, பாயசம் போன்றவை இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படும்.



**இரண்டாம் நாள் தைப்பொங்கல்:**
தைத் திங்களின் முதல் நாள், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள். அது உழவர் கொண்டாட்டத் திருநாள்.



பொங்கல் திருநாள் தமிழர் திருநாள். தமிழர் தம் வாழ்வின் தொன்மையான சுவடுகளை கொண்ட ஒரு பண்டிகையாகும். உழவர்கள் தங்கள் அறுவடைகளை முடித்து அந்த போகம் சிறப்புற நிகழ்ந்ததற்கு சூரியனுக்கு பொங்கல் படைத்து கொண்டாடும் உழவர்களின் திருநாளே பொங்கல்.

சூரியனுக்கும், நிலத்திற்கும் வளப்பம் சேர்க்கும் வான்பொருட்கள் அனைத்திற்குமான படைப்பு வழிபாட்டு நாளாகவே பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது. நிலம் என்பது வேறு எந்த பண்பாட்டிலும் இல்லாத அளவிற்கு தமிழர் பண்பாட்டில் அதி முக்கியத்துவம் பெற்ற ஒன்று. பண்பாட்டையே 5 நிலப்பகுதிகள் கொண்ட திணை ஒழுக்கங்களாக வகுத்திருப்பது தமிழர் பண்பாட்டில் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

கிராமிய வாழ்வின், அனைத்து பண்பாட்டுத் தன்மைகளோடும் சிறப்புறக் கொண்டாடும் இந்தப் பொங்கல் பண்டிகையை, நகரவாசிகளும் தமக்கு உணவு அளிக்கும் உழவர்களுக்கு நன்றி செலுத்தும் நாளாகக் கொண்டாடுகின்றனர்.

சங்ககாலத்தில், வேளாண் காலத்தில் நல்ல மழை பெய்யவும், பயிர்கள் செழிக்கவும் பெண்கள் விரதத்தைக் கடைப்பிடித்தார்கள். தை முதல் நாளில் இந்த விரதத்தை முடிப்பார்கள். உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல். உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து, தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்து வழிபட்டனர்.

**போகிப் பண்டிகை:**
'பழையன கழித்து, புதியன புகவிடும்' நன்னாளே போகித் திருநாள் ஆகும். தமிழ் ஆண்டின் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று, அதாவது பொங்கல் திருநாளின் முதல்நாள் கொண்டாடப்படுகிறது. போகியன்று, வீட்டின் கூரையில் பூலாப்பூ செருகப்படும். அன்றைய தினம், வீட்டில் தேங்கிப் போயிருக்கும் குப்பைகள், தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தி வீடு சுத்தமாக்கப்படும். வீடு மட்டுமல்ல, மனதில் இருக்கும் தீய எண்ணங்களும், தவறான எண்ணங்களும் நீக்கப்படவேண்டும் என்பது இப்பண்டிகையின் உள்ளார்ந்த தத்துவமாகும். பழந்துயரங்களை அழிப்பதால் இப்பண்டிகையைப் "போக்கி" என்றனர். அந்தச் சொல் நாளடைவில் மருவி "போகி" என்றாகிவிட்டது. போகிப் பண்டிகையின் போது போளி, வடை, பாயசம் போன்றவை இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படும்.



**இரண்டாம் நாள் தைப்பொங்கல்:**
தைத் திங்களின் முதல் நாள்,

Penmai.com

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள். அது உழவர் கொண்டாட்டத் திருநாள். பொங்கலன்று அதிகாலை எழுந்து குளித்து, வீட்டு முற்றத்தில் கோலம் இட்டு, சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து, தலை வாழையிலையில் நிறைகுடம் வைத்து விளக்கேற்றி கதிரவனை வணங்கி, பொங்கலிடத் தொடங்குவர். புதிய பானைக்கு புதிய மஞ்சள் காப்பு கட்டி, பாலிட்டு பொங்கல் வைப்பர். பால் பொங்கி வரும் வேளையில் குடும்பத் தலைவன், மனைவி மக்களுடன் கூடி நின்று "பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!" என்று உரக்கக் கூவி அரிசியை இருகைகளாலும் அள்ளிப் பானையில் இடுவர். தனது முதற் பயனை கதிரவனுக்குப் படைத்துப் பின் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் கொடுத்த பின்பே தான் நுகர்வான். இது தமிழரின் தொன்று தொட்டு வந்த பண்பாடு ஆகும்.

**மாட்டுப் பொங்கல்**

மாட்டுப் பொங்கல் என்பது தைப்பொங்கல் நாளின் மறுநாள் கொண்டாடப்படும் ஒரு

...Deepa bala

## மஞ்சள் குலை வாங்குவது ஏன்?

மங்கலப்பொருள்களில் மகாலட்சுமியின் அம்சமாகத் திகழும் மஞ்சள் மகிமை மிக்கது. மஞ்சள் இருக்கும் இடத்தில் திருமகள் வாசம் செய்கிறாள். அதனால் தான் சுமங்கலிப்பெண்கள் மஞ்சளை உடலில் பூசிக்கொள்கிறார்கள். புத்தாடை அணியும்போது அதில் மஞ்சள் தடவி அணிகிறோம். எந்த சுபநிகழ்ச்சி என்றாலும் அழைப்பிதழில் மஞ்சள் தடவிக் கொடுக்கிறோம். திருமண வைபவங்களில் மஞ்சள் இடித்தல் என்று கூட ஒரு சடங்கு இருந்தது. முனைமுறியாத அரிசியிலான அட்சதை தயாரிக்கும் போது மஞ்சள் சேர்த்துத் தான் தயாரிப்பர். எந்த பூஜை என்றாலும் மஞ்சளால் செய்த பிள்ளையாரை வணங்குவதும் நம் வழக்கம். சுமங்கலிகள் வீடுகளுக்கு வந்து செல்லும்போது அவர்களுக்கு மஞ்சள், குங்குமம் கொடுத்து வழியனுப்புவதும் மங்கலத்தின் அடையாளம் தான். இப்படி மகிமை மிக்க மஞ்சள்கிழங்குச் செடியினை பொங்கல் நன்னாளில் புதுப்பானையில் கட்டி அடுப்பில் ஏற்றுவர். அந்த மஞ்சளைப் பத்திரப்படுத்தி மறுநாள் காலையில்" மஞ்சள் கீறுதல் ' என்னும் சடங்காகச்செய்வர். வீட்டில் இருக்கும் பெரியவர்கள் அந்த மஞ்சள் கிழங்கினைக் கீறி சிறியவர்களின் நெற்றியில் இட்டு ஆசியளிப்பர். வீட்டில் உள்ள அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று வாழவேண்டும் என்பதே இச்சடங்கின் நோக்கம்.



...Sumathisrini

**Q) மார்கழி மாதத்தில் வாசலில், கோலத்தின் மேல் சாணத்தில், பரங்கிப் பூ வைப்பது ஏன்?**

A) மார்கழி மாதத்தில், வீட்டு வாசலில் கோலம் போட்டு, அதன் நடுவில் சாணம் வைத்து, அதில் பரங்கிப் பூவை வைப்பது, தமிழகத்தில் வழக்கம். மஞ்சள் வண்ணத்தில் பரங்கிப் பூ இருப்பதால், அதை வைக்கும் இல்லங்களில், மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும் என்பது ஐதீகம். பூ மலர்ந்திருப்பது போல், வீட்டில் உள்ளவர்களும், மகிழ்ச்சியுடன் இருப்பர். மாட்டுச் சாணம் கிருமி நாசினி என்பதால், வீட்டில் இருப்போருக்கு ஆரோக்கியம் தரும்.

கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் கோலம் போட்டு பூ வைத்து வழிபட்டால், நல்ல வாழ்க்கை அமையும் என்பது நம்பிக்கை.



## தமிழ் மந்திரம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நல் நெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

**Spiritual Notebook - Rudhraa**

**ஜனவரி**

11 - ஹனுமன் ஜெயந்தி
13 - போகிப் பண்டிகை
14 - தைப்பொங்கல், மகரஜோதி தரிசனம்
15 - மாட்டுப்பொங்கல், திருவள்ளுவர் தினம்
16 - சஷ்டி விரதம்
24 - மிலாடி நபி, பிரதோஷம்
26 - பௌர்ணமி
27 - தைப்பூசம்
22 - ஏகாதசி

**பிப்ரவரி**

9 - தை அமாவாசை

Penmai.com

# உன்னைச் சரணடைந்தேன்...

## மகா சிவராத்திரி

...Sumathisrini



ஒவ்வொரு மாதமும் தேய்பிறை சதுர்த்தசி எந்த நாளில் வருகிறதோ, அது "சிவராத்திரி' இரவு ஆகும். இதை, 'மாத சிவராத்திரி' என்பர். மாசி மாதத்தில் தேய்பிறை காலத்தில் வரும் சதுர்த்தசி நாளையே நாம் மகா சிவராத்திரியாக சிறப்பிக்கிறோம்.

மகா சிவராத்திரியைப் பற்றி ஏராளமான கதைகள் புராணத்தில் உள்ளன. அவற்றை கேட்பதும், படிப்பதும் கூட புண்ணியம் தரும். பிரம்மோத்திர காண்டத்தில் கூறப்பட்டுள்ள ஒரு கதை இது.

சண்டன் என்று ஒரு வேடன் இருந்தான். அவன் ஒரு அப்பாவி. அவனுக்கு சண்டிகா என்ற மனைவி இருந்தாள். அவன் தொழில் காட்டில் வேட்டையாடுவது. காட்டில் அலையும் விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடிப் பிடித்து அவற்றை விற்று ஜீவனம் செய்து வந்தான். ஒரு நாள் அடர்ந்த காட்டிற்குள் விலங்குகளைத் தேடி அலைந்து கொண்டிருந்த போது, வானுயர்ந்த ஒரு பெரிய வில்வ மரத்தினடியில் அன்றலர்ந்த பூவாய், அழகிய சிவலிங்கம் ஒன்று புதியதாகத் தோன்றி இருப்பதைக் கண்டான். அது ஒரு சுயம்பு லிங்கம்.

சிவலிங்கத்தைக் கண்டதும் அவனுக்கு மெய்சிலிர்த்தது. அவனுள் அன்பும், பக்தியும் பெருகிக் கரைபுரண்டோடியது. தீயைக் கண்ட மெழுகு போல் மனமுருகினான். வைத்த கண் வாங்காமல் மெய் மறந்து சிவலிங்கத்தையேப் பார்த்துக் கொண்டிருந்தான். பார்க்க பார்க்க பரவசமானான். அவனையுமறியாமல் அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகி வழிந்தது. அவன் உள்ளம் பெறற்கரியப் பெருஞ்செல்வத்தைப் பெற்றது போல் குதூகலத்தால் குதித்து கூத்தாடியது. தன்னை மறந்தான், தன் நிலை மறந்தான்.

தானேத் தோன்றிய சிவலிங்கத்திற்கு பூஜை எப்படி செய்ய வேண்டும்? இறைவனை எப்படி வணங்க வேண்டும்? என்னென்ன உபசாரங்கள் செய்ய வேண்டும்? என்னவெல்லாம் படைக்க வேண்டும் என்ற விவரமெல்லாம் அவனுக்குத் தெரியாது. எதுவுமே தெரியாத ஒரு அப்பாவி வேடன் அவன். அப்போது அங்கே சிங்ககேது என்ற மன்னன் வந்தான். வேட்டையாட கானகம் வந்தவன், தன் பரிவாரங்களைப் பிரிந்து, வழி தெரியாமல் அலைந்து கொண்டிருந்தவன் வேடன் சண்டன் இருக்குமிடம் வர நேர்த்தது. கானகத்தை நன்கறிந்த வேடனைக் கண்ட மன்னனுக்கு மிகுந்த சந்தோஷமேற்பட்டது. வேடனைக் கொண்டு கானக வழியைக் கண்டுபிடித்து விடலாம் என நம்பினான்.

மன்னன் சிங்ககேது வந்ததைக் கூட அறியாமல் சிவலிங்கத்தையேப் பார்த்துக் கொண்டிருந்த சண்டனைப் பார்த்து “வேடா, இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? வழி தவறி வந்து விட்டேன், காட்டை விட்டு வெளியேற வேண்டும்... வழி காட்டு” என்று கேட்க, மன்னன் குரல் கேட்டு சண்டன் உணர்வு வரப்பெற்றான். “அரசே, என்னை மன்னியுங்கள், பாராமுகமாய் இருந்து விட்டேன். என்னுடன் வாருங்கள் வழிகாட்டுகிறேன்” என்றான். தொடர்ந்து, “மகாராஜா இங்கே இருக்கும் சிவலிங்கத்தை எப்படி பூஜிக்க வேண்டும் என்பதை எனக்கு விளக்கமாய் கூறுங்கள்” என்று மிகுந்த பணிவுடன் மன்னனிடம் கேட்டான் சண்டன். உடனே மன்னன் பரிகாசமாய் “வேடனே, உன் தோல் பையில் இருக்கும் தண்ணீரைக்

கொண்டு வந்து சிவலிங்கத்தின் மீது ஊற்று. சுடலையில் வெந்த சாம்பலைக் கொண்டு வந்து சிவலிங்கத்துக்குப் பூசு. கைக்கு கிடைக்கும் பூக்களையெல்லாம் கொண்டு வந்து சிவலிங்கத்தின் மேல் வை. நீ உண்ணும் உணவைக் கொணடு வந்து நிவேதனமாக வை. விளக்கேற்றி வை. இரு கரங்கள் கூப்பி கும்பிடு போடு" என்று அலட்சியத்தோடு கூறினான். மன்னன் சொன்ன விவரங்களையெல்லாம் சண்டன் கவனமாகக் கேட்டுக் கொண்டான். மன்னன் சிங்ககேது கூறியதையெல்லாம் அப்படியே மனதில் பதித்துக் கொண்டான் சண்டன். தோற்பையில் தண்ணீர் கொண்டுவந்து சிவலிங்கத்தின்மீது ஊற்றினான். சுடலையைத் தேடிச் சென்று, கை நிறைய வெந்த சாம்பலை அள்ளிக்கொண்டு வந்து சிவ லிங்கத்தின்மீது பூசினான். கைக்குக் கிடைத்த காட்டுப் பூக்களையெல்லாம் கொண்டுவந்து சிவலிங்கத்தின்மீது வைத்தான். தான் உண்ணும் உணவையே நிவேதனமாகப் படைத்தான். விளக்கேற்றி வழிபட்டான். இதனையே உறுதியாகக் கொண்டு தினமும் பூஜை செய்து வந்தான். இரவும் பகலும் அவன் நினைவில் சிவலிங்கமே நிறைந்திருந்தது. ஒரு நாள் சுடலையின் வெந்த சாம்பல் அகப்படாமல் போயிற்று. சிவபூஜை தடைப்பட்டது. இதனால் சண்டன் மிகுந்த கவலையுடன் இருந்தான். உண்ணாமல் உறங்காமல் உற்சாகமின்றிக் காணப்பட்டான். அவனுக்கு எதுவுமே சொல்லத் தோன்றவில்லை. இதனை அவனது கற்புடைய மனைவி சண்டிகா அறிந்து மனம் மிக நொந்தாள். கணவனை நோக்கி, அன்பரே, நீங்கள் சிவபூஜையைத் தொடர்ந்து செய்ய ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. நாம் குடியிருக்கும் இந்தக் குடிசையைக் கொளுத்தினால், நான் அதில் விழுந்து வெந்து சாம்பலாவேன். அந்த சாம்பலை எடுத்துக்கொண்டு போய் சிவலிங்கத்திற்குப் பூசுங்கள். உங்கள் விருப்பப்படியே பூஜையும் இனிதே நடக்கும் என்றாள் சண்டிகா. கள்ளங்கபடமில்லாத சண்டனும் அப்படியே செய்து முடித்தான். பூஜை முடிவில் வழக்கப்படி நிர்மால்யம் கொண்டு போனான். அன்று சிவராத்திரி என்று அவனுக்குத் தெரியாது. மெய் மறந்து வழிபட்ட நிலையில், அவன் செய்த புண்ணியத்தால், இறைவன் அவன் முன் தோன்றி அருள்பாலித்தார். அவன் மனைவி சண்டிகாவை உயிர்ப்பித்தார். குடிசையும் முன்பு இருந்தது போலாயிற்று. வேடன் சண்டன் ஞானம் வரப்பெற்றவனாய் இறைவனைப் போற்றினான். சிவகணங்கள் எதிர்கொள்ள கயிலையை அடைந்தான். எதுவும் தெரியாமலும், தன்னை அறியாமலும் செய்யும் சிவராத்திரி வழிபாடு கூட பலன் தரும். இப்படி அறியாமல் செய்த பூஜைக்கே பலனுண்டு என்றால் சிவராத்திரியை அறிந்தே பூஜை செய்பவர்களுக்கும், ஆலயம் சென்று முறையே வழிபாடு செய்பவர்களுக்கும் எத்தகைய புண்ணியம் வந்து சேரும் என்பதை எண்ணி பாருங்கள்.

செல்வம் தரும் சிவராத்திரி: மகாபாரதம் சாந்தி பர்வத்தில் சிவராத்திரியின் மகத்துவம் கூறப்பட்டுள்ளது. அம்பு படுக்கையில் கிடந்த பீஷ்மர், சிவராத்திரி விரத மகிமையை பாண்டவர்களுக்கு சொன்னார். இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த மன்னர் சித்திரபானு. அஷ்டவக்கிர முனிவர் ஒரு சிவராத்திரி நாளில் மன்னனைச் சந்திக்க வந்தார். விரதமிருந்த மன்னன் முனிவரிடம், ஐயனே! நான் சுஸ்வரன் என்னும் வேடனாக முற்பிறவியில் வாழ்ந்தேன். வேட்டையாடி மாமிசத்தை விற்பது என் தொழில். ஒருநாள், பகலில் மிருகம் ஏதும் சிக்கவில்லை. இரவான பிறகு மான் ஒன்றைக் கொன்றேன். காட்டிலேயே தங்கிவிட்டேன். மிருகங்களிடமிருந்து தப்ப ஒரு மரத்தில் ஏறிக் கொண்டேன். பசிமயக்கத்தால் தூக்கம் வரவில்லை. இலைகளைப் பறித்து கீழே போட்டபடி இருந்தேன். பொழுது புலர்ந்து விட்டது. அந்த நாள் சிவராத்திரி என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை. மரணம் ஏற்பட்டு என் உயிர் நீங்கிய பின், இரு சிவதூதர்கள் என்னை அழைத்துச் செல்ல வந்தனர். நீ வேட்டையாடச் சென்ற நாள் சிவராத்திரி. அன்று நீ ஏறியது வில்வமரம். மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருந்தது. நீ வில்வ இலைகளைப் பறித்துப் போட்டபடி இருந்தாய். உறங்கவும் இல்லை. அறியாமல் செய்தாலும், சிவராத்திரியன்று லிங்கத்துக்கு வில்வார்ச்சனையால் உனக்கு நற்கதி கிடைத்தது என்றனர். அதனால், நாடாளும் மன்னனாக சித்திரபானு என்ற பெயரில் இப்பிறவியில் பிறக்கும் பேறு பெற்றேன் என்றார். பக்தியுடன் சிவராத்திரி விரதம் இருப்பவர்கள், எத்தனை பிறவி எடுத்தாலும் பணக்காரர்களாக இருப்பர். அவர்களது சந்ததியும் செல்வவளத்துடன் திகழும்.

சிவராத்திரி விரதமுறை: சிவராத்திரி நாளில் உணவேதும் உண்ணாமல் சிவ சிந்தைனையுடன் இருக்கவேண்டும், முடியாதவர்கள் பால், பழம் அருந்தியும் விரதம் மேற்கொள்ளலாம். கோவிலுக்கு சென்று இறைவனை தரிசித்து அறியாமல் செய்த பாவங்களைப் போக்கி அருளுமாறு பிரார்த்திக்க வேண்டும். இரவு முழுவதும் விழித்திருந்து ஓம் நமசிவாய மந்திரங்களை ஜபிக்கவேண்டும்.

சிவராத்திரி விரத மகிமை: விரதங்கள் பலவும் அதனைக் கடைப்பிடிப்போர்க்கு மட்டுமே பலன் தரும். மகாசிவராத்திரியன்று விரதம் இருப்பவர்களுக்கு நற்கதி கிடைப்பதுடன் சொர்க்கலோக பாக்கியமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. ஒருவர் தொடர்ந்து 24 வருடங்கள் சிவராத்திரி விரதம் இருந்துவந்தால் அவர் சிவகதியை அடைவதுடன், அவரது 21 தலைமுறைகளும் நற்கதி அடைந்து முக்தியை அடைவார்கள் என்பது ஐதீகம். அசுவமேத யாகம் செய்த பலனும் கிடைக்கும்.

எனவே சிந்தை மகிழ சிவபுராணம் ஓதி சிவன் அருளால் அவன் தாள் பணிந்து பிறவி பெரும் பிணித் தீர்ப்போம்.

**தென்னாடுடைய சிவனே போற்றி!**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!!**

# மாசி மகம்

...Sumathisrini

**மாசி மகம்** என்பது மாசி மாத பௌர்ணமியுடன் கூடிவரும் மக நட்சத்திர நாளில் இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு சிறப்பான நாளாகும். அன்றைய தினம் **'கடலாடும் விழா'** என்று கொண்டாடப்படுகிறது. **அம்பிகை** மாசி மக நட்சத்திரத்தில் அவதரித்தால் மாசிமகம் பெருமை பெறுகின்றது.

பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து துன்பக்கடலில் மாய்ந்தழுந்தும் ஆன்மாவானது இறைவனது அருட்கடலாகிய இன்பவெள்ளத்தில் அமிழ்ந்து திளைக்கச் செய்யும் நன் நாளே மாசிமகக் கடலாடு தீர்த்தமாகும். தீர்த்தமாட இயலாதவர்கள் விரதமிருந்து கோயிலுக்குச் சென்று இந்நாளைக் கொண்டாடுவர்.

**பக்தனுக்காய் கடல்நீரை இரைத்த பெருமாள்!**
மக நட்சத்திரம் திருமாலுக்கும் உகந்த நாள். நீர் நிலை உள்ள இடங்களில் தீர்த்தவாரி உற்சவம் நடைபெறுவது வழக்கம். இப்படி தீர்த்தவாரிக்குப் பெயர் பெற்ற 108 திவ்யதேசங்களில் ஒன்று தான் மகாபலிபுரம். இங்கு மாசி மகத்தன்று நீராடினால் அது ராமேஸ்வரத்தில் நீராடிய பலனைத் தரும். இதற்குக் காரணமானவர் புண்டரீக மகரிஷிதான். திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள பெருமாளின் காலடியில் அன்றலர்ந்த தாமரை மலரை வைத்து வணங்க வேண்டும் என்ற ஆவலில் இவர் மாமல்லை கடற்கரையில் மலரை வைத்துவிட்டு, பாற்கடலுக்கு வழி ஏற்பாடு செய்ய முயற்சித்தார். அதற்காக கடல்நீரை தொடர்ந்து இரைத்துக் கொண்டிருந்தார். இவரின் விடா முயற்சியையும், தளராத பக்தியையும் கண்ட திருமால் ஒரு முதியவராக உருக்கொண்டு முனிவரிடம் வந்து, எனக்கு பசியும்



களைப்புமாக உள்ளது. ஊருக்குள் சென்று உணவு வாங்கி வாருங்கள். அதுவரை நானே கடல் நீரை உமக்காக இறைக்கிறேன் என்று அனுப்பினார். முனிவரும் உணவு வாங்கி வந்து பார்த்தபோது கடல் உள்வாங்கி இருந்தது. முதியவரைக் காணோம். அப்போது ஒரு குரல் கேட்டது. முனிவர் அவ்விடத்தைப் பார்க்க, தான் வைத்த மலரை பாதங்களில் வைத்துக்கொண்டு திருமால் தரையில் பள்ளி கொண்டு ரிஷிக்கு காட்சி தந்தார். ஸ்ரீமன் நாராயணனே தன் திருக்கரத்தால் நீர் இறைத்த இந்த அர்த்தசேது கடலில் மகத்தன்று நீராடுவது பெரும் புண்ணியம்.

**மாசிமகச் சிறப்பு**

மாசி மாதம் முழுவதுமே புண்ணிய நீராடிட ஏற்ற புனித மாதமாகும். இம்மாதம் தவிர வேறு எப்போதெல்லாம் புனித நீராடலாம் என புராணங்கள் சொல்கின்றன. அவை: அமாவாசை, பவுர்ணமி, மாதப்பிறப்பு, இரண்டு அயன காலங்கள், வெள்ளிக்கிழமை, கார்த்திகை, சிவராத்திரி, மாசிமகம், மகாமகம் நாட்கள். மகாமகத் திருவிழாவை முதலில் துவக்கி வைத்தவர், பிரம்மதேவன். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாசி மகத்தன்று கும்பகோணம் மகாமகக் குளத்தில் புனித நதிகள் யாவும் வந்து கலப்பதாகவும், அன்று புனித நீராடினால் புண்ணியப்பேறுகள் நம்மை வந்து சேரும் என்றும் மகாபுராணம் சொல்கிறது. அத்தினமே மகாமகம். மாசி மாதத்தில் மாசி மகப் பெருவிழா பத்துத் தினங்கள் வரை நடைபெறும். அசுவினி நட்சத்திரம் கூடிய நன்நாளில் கொடி ஏற்றஞ் செய்து எட்டாவது நாளில் தேரோட்டமும், பத்தாம் நாளான மகம் நட்சத்திரம் கூடிய பௌர்ணமி நாளில் பஞ்சமூர்த்திகளும் புறப்பட்டு மகாமக தீர்த்தக் குளத்தில் தீர்த்தவாரி நடக்கும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாசி மகம் நாளில் குரு, சிம்ம ராசியிலும் சூரியன், கும்ப ராசியிலும் வரும். அந்நாளே மகாமகப் பெருவிழா. ராமர், ராவணனை வதம் செய்வதற்காக சிவனருள் பெற வேண்டி, அகத்திய முனிவரின் ஆலோசனையை நாடினார். அம்முனிவர், கும்பகோணம் வந்து சில காலம் தங்கி இத்தலத்திலுள்ள காசி விஸ்வேசுவரரை வழிபட்டால் உருத்திராம்சம் பெறலாம் எனக்கூறினார். அதன்படி ராமர் இங்கு வந்து விஸ்வேசுவரரை வழிபட்டு, தன் உடலில் உருத்திர அம்சம் ஆரோகணிக்கப் பெற்றார். அதன் காரணமாக இவ்விடமும் காரோணம் எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர். இதன் பழைய பெயர், **திருக்குடந்தைக் காரோணம்**. மகாமகக் குளத்தின் வடகரையில் உள்ளது இக்கோயில்.

**மாசிமகத்தில் விளக்கு ஏற்றுங்க**

ஸ்ரீரங்கத்திற்கு எவ்வளவு சிறப்புண்டோ அத்தனையும் கொண்ட சிறப்பான திவ்யதேசம் திருக்கோஷ்டியூர். மந்திர உபதேசம் பெற வேண்டி ராமானுஜர், திருக்கோஷ்ட்டியூர் நம்பியை 18 முறை தேடி வந்தது இங்கு தான். உலக மக்கள் அனைவருக்கும் '**ஓம் நமோ நாராயணாய**' என்ற எட்டெழுத்து மந்திரத்தை ராமானுஜர் உபதேசித்ததால் (ஓம் என்பது ஓரெழுத்து) திருமந்திரம் விளைந்த திவ்யதேசம் என்ற பெருமை இதற்குண்டு. பேரழகு கொண்டவர் என்பதால் இங்கிருக்கும் பெருமாளுக்கு சௌம்யநாராயணர் என்பது திருநாமம். பொதுவாக கோயில்களில் உற்சவர்



விக்ரகங்களை பஞ்சலோகத்தால் அமைப்பர். ஆனால், தூய்மையான வெள்ளியால் ஆன விக்ரகம் இங்குள்ளது. இதை தேவலோக இந்திரனே தந்ததாக ஐதீகம். இப்பெருமானை திருமங்கையாழ்வார், வெள்ளியான் கரியான் மணிநிற வண்ணன் என்று போற்றுகிறார். இங்குள்ள தாயாருக்கு திருமாமகள், நிலமாமகள், குலமாமகள் ஆகிய பெயர்களுண்டு. **மகாமகக் கிணறு** என்னும் **சிம்மக்கிணறு** இங்குள்ளது. இதில் மாசிமகத்தில் நீராடுவது சிறப்பு. மாசிமகத்தன்று இங்கு தெப்பத்திருவிழா நடைபெறும். சௌம்யநாராயணரிடம் ஏதாவது வேண்டுகோள் வைத்து அது நிறைவேறியவர்கள், தெப்பக்குளத்தில் தீபமேற்றி வழிபடுவது

## தமிழ் மந்திரம்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

வழக்கமாகும். அந்த விளக்கை புத்திர பாக்கியம், திருமணம் போன்ற கோரிக்கைகளை வைப்பவர்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்று பூஜையறையில் வைத்துக்கொள்ளலாம். வேண்டுதல் நிறைவேறியதும், அடுத்த மாசிமகத்தன்று மீண்டும் அந்த விளக்குடன் மேலும் 3 அல்லது 5 அகல் விளக்குகளை ஏற்றி வைப்பது மரபாகும்.

**குளத்தில் நீராடும் ஆறு**

காவிரிநதி ஏழு கட்டங்களாக பாய்ந்து வளம் பெருக்குகிறது. தலைக்காவிரி, அகன்றகாவிரி, பஞ்சநதம், கும்பகோணம், மத்தியார்ச்சுனம், மயிலாடுதுறை, காவிரிப்பூம்பட்டினம் ஆகியன அவை. இவற்றில் நடு நாயகமாகத் திகழும் தலம் கும்பகோணம். ஒரு சமயம், வெள்ளத்தால் உலகம் அழிய இருந்த வேளையில், மீண்டும் உயிர்களை படைப்பதற்கான பீஜம் தாங்கிய அமுத கும்பத்தை பிரம்மா நீரில் மிதக்க விட்டார். அது வெள்ளத்தில் மிதந்து ஒதுங்கிய இடமே கும்பகோணம். மாசிமகத்தன்று கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயில் பிரதான வழிபாட்டுத் தலமாகத் திகழ்கிறது. இங்குள்ள தீர்த்தம் மகாமகத் தீர்த்தம். காசியில் ஓடும் புனித கங்கையும் தன் பாவம் தீர நீராடும் குளம் இது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் பெருமை பெற்ற தலம். இதே போல வட இந்தியாவில் கும்பமேளா என்ற பெயரில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள்.

**மாசிமக தலம்**

முன்னொரு சமயம், வெள்ளத்தால் உலகம் அழிய இருந்த வேளையில், படைப்புக்கலன்கள் தாங்கிய அமுதக்குடத்தை, பிரம்மா மேருமலையில் வைத்திருந்தார். பிரளய வெள்ளம் பெருக்கெடுத்து அதில் மிதந்த குடம் தென்பகுதி வந்து சேர்ந்தது. வேடனாக வந்த சிவபெருமான், திருவிடைமருதூரில் தங்கினார். பாணம் ஒன்றை எடுத்து குடத்தைக் குறிவைத்தார். பாணம் எய்த இடம் பாணாத்துறை ஆயிற்று. இவ்வூர் கும்பகோணத்துக்கு வடகிழக்கே உள்ளது. குடம் உடைந்து ஐந்து இடங்களில் சிதறியது. வடமேற்கே சுவாமிமலையிலும், தென்மேற்கே தாராசுரத்திலும், தென்கிழக்கே திருநாகேஸ்வரத்திலும், கிழக்கே திருவிடைமருதூரிலும், வடகிழக்கே கருப்பூரிலும் அமுதம் சிதறி விழுந்தது. இத்தலங்களை "பஞ்சகுரோசத் தலங்கள் என்று குறிப்பிடுவர். "குரோசம்" என்றால் கூப்பிடு தூரம். அருகருகே இந்த தலங்கள் உள்ளதால், இப்பெயர் பெற்றன

**குடத்தின் வடிவில் குளம்**

கும்பகோணம் மகாமகக்குளதை மேலிருந்து பார்த்தால் குடம்போல காட்சியளிக்கும். இக்குளத்தில் புனித நீராடினால் அமுதக் குடத்திற்குள்ளேயே நீராடியது போலாகும். பொதுவாக ஒருவரின் பாவம் புண்ணியதீர்த்தம் எதில் நீராடினாலும் நீங்கும் என்பது சாஸ்திர விதி. புண்ணியத் தலங்களில் பிறந்தவர்கள் செய்த பாவம் கங்கையில் நீராடினால் நீங்கும். ஆனால், காசியில் பிறந்தோர் கும்பகோணத்தில் நீராடினால் தான் பாவம் விலகும். கும்பகோணத்தில் பிறந்தவர்கள் எங்கும் செல்லத் தேவையில்லை. மகாமகக்குளத்தில் நீராடினாலேயே விலகிவிடும். இதனை "கும்பகோணேக்ருதம் பாவம் கும்பகோணே விநச்யதி" என்பர்.

**Spiritual Notebook - Rudhraa**

**பிப்ரவரி**

14 - வசந்த பஞ்சமி
17 - ரத சப்தமி
18 - அஷ்டமி
21 - ஏகாதசி
23 - சனி பிரதோஷம்
25 - பௌர்ணமி, மாசி மகம்

**மார்ச்**

07 - ஏகாதசி
09 - சனி பிரதோஷம்
10 - மகாசிவராத்திரி

Penmai.com

Online Tamil Book Store / Cds DVDs










- வரலாற்றுப் புதினங்கள்
- சுயமுன்னேற்றம்
- இலக்கியம்
- குழந்தை வளர்ப்பு
- உடல் நலம்
- தாய்மை மற்றும் பிரசவகாலப் புத்தகங்கள்
- கதைகள்
- நாவல்கள்
- போட்டித் தேர்வு
- சமையல்
- ஆன்மீகம் மற்றும்
- பிரபல எழுத்தாளர் புத்தகங்கள்

**Buy Now**

Free shipping across India for purchase above Rs. 500*

@ one place
www.MyAngadi.com

# கௌரி விரதம்

...Sumathisrini

## ஒருக்காலும் கணவனைப் பிரியாதிருக்க காரடையான் நோன்பு!

மாசியும் பங்குனியும் கூடும் வேளையில் நோற்கப்படுவது தான் காரடையான் நோன்பு. இந்த நோன்பை காமாட்சி நோன்பு, கௌரி விரதம், சாவித்திரி விரதம் என்றும் சொல்வார்கள்.

கணவனும் மனைவியும் மனமொத்த தம்பதியராக வாழ்ந்து இல்லற தர்மங்களை கடைபிடிப்பது சிறப்பானதாகக் கூறப்படுகிறது. மனைவி, மக்களை பாதுகாத்து அற வாழ்வு நடத்தி வரும் குடும்பத் தலைவன் நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் இருக்க வேண்டும். இல்லற தர்மத்தை சிறப்பாக கடைபிடிக்கிற வகையில் தான் தீர்க்க சுமங்கலியாக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிற வகையில் சுமங்கலிப் பெண்கள் இருக்கும் விரதமே காரடையான் நோன்பு.

இந்த நோன்பு பூஜையை செய்வதால், கணவன், மனைவி இடையே இருக்கும் பூசல்கள் மறையும். ஜாதகத்தில் அஷ்டம ஸ்தான கிரக தோஷங்கள் நீங்கும். பிரிந்தவர் ஒன்று சேருவார்கள். குழந்தை பாக்கியத் தடை நீங்கி வம்சம் துளிர்க்கும் என்பது ஐதீகம்.

சாவித்திரி விரதத்தின் சிறப்பை புராணம் விளக்குகிறது. நெடுநாட்கள் பிள்ளைப்பேறு இல்லாமலிருந்த அசுபதி மன்னன், மகப்பேறு வேண்டி தான, தர்மங்கள் செய்து வந்தான். அதன் பயனாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. சாமுத்திரிகா லட்சணங்கள் அனைத்தும் கொண்டிருந்த அக்குழந்தைக்கு சாவித்திரி என்று பெயரிட்டனர். அவளுக்கு எட்டு வயதாகும்போது அங்கு வந்த நாரதர், அவளது எதிர்காலத்தைப் பற்றி கூறிச்



சென்றார். தாய், தந்தையரை தெய்வமாக மதிக்கும் சத்யவான் என்பவனை அவள் மணந்து கொள்வாள் என்றும், சத்யவான் 21 ஆண்டுகள் வரைதான் வாழ்வான் என்றும் கூறியிருந்தார்.

சாவித்திரி சத்யவானையே மணந்து, அவனது வாழ்நாள் அதிகரிக்க பல விரதங்களையும் நோன்புகளையும் அனுஷ்டித்தாள். சத்யவானும் சாவித்திரியும் வேற்று நாட்டு அரசனால் நாடு கடத்தப்பட்டு ஒரு கானகத்தில் வசித்து வந்தனர். நாரதர் கூறியிருந்தபடி சத்யவானின் இறுதிநாள் வந்தது. அன்று சாவித்திரி தடுத்தும் கேளாமல் அவன் விறகு சேகரிக்கக் காட்டுக்குப் புறப்பட்டான். சாவித்திரியும் உடன் சென்றாள். நண்பகல் வேளையில் சத்யவான் சாவித்திரியின் மடியில் தலைவைத்து படுத்திருந்தபோது, எமதர்ம ராஜன் அவன் உயிரைப் பறித்துச் சென்றான். சாவித்திரியின் கற்புத் திறத்தால் எமதர்மனின் உருவம் அவள் கண்களுக்குத் தெரிந்தது. அவள் தன் கணவனின் உடலைக் கீழே கிடத்தி விட்டு, எமனைப் பின்பற்றிச் சென்றாள்.

Penmai.com

அவளது காலடி ஓசை கேட்டுத் திரும்பிய எமனின் பாதங்களில் விழுந்து சாவித்திரி வணங்கினாள். அவளை 'தீர்க்க சுமங்கலி பவ' என்று எமன் வாழ்த்தினான். சாவித்திரி எமனை வேண்டி பல வரங்களைப் பெற்றாள். அதில் வம்சவிருத்தி அருளும்படி வேண்டிய வரம் எமனைத் திகைக்க வைத்தது. சாதுர்யமாக தன் கணவனின் உயிரை அவள் மீட்டதை அறிந்தான் எமன். சாவித்திரியின் பதிபக்தியை மெச்சிய எமன், "இதுவரை என்னை யாரும் பார்த்தது இல்லை. உன் கற்பின் மகிமையால் நீ வெற்றி பெற்று விட்டாய். நீ என்னிடம் கேட்டுப் பெற்ற வரங்கள் அனைத்தும் நிறைவேறும். உலகம் உள்ளளவும், உன்னை நினைத்து மாசியும் பங்குனியும் சேரும் சமயத்தில் விரதமிருப்பவர்களுக்கு உன் ஆசி கிட்டும். அவர்கள் மனமொத்த தம்பதிகளாக வாழ்வார்கள்" என ஆசி கூறி அனுப்பினான்.

சாவித்திரி காட்டில் கணவனை விட்டுச் சென்ற இடத்திற்குத் திரும்பி வந்து, அவன் உடலைத் தன் மடியில் கிடத்தினாள். சிறிது நேரத்தில் தூக்கத்திலிருந்து விழிப்பது போல் சத்யவான் விழித்தெழுந்து, "உன்னைப் போன்ற பெண் ஒருத்தி என்னை மீட்டு வந்ததாகக் கனவு கண்டேன்" என்று கூறினான். அவன் உயிரை எமன் எடுத்துச் சென்றதையும், எமனுடன் போராடி அவன் உயிரையும், மேலும் பல வரங்களையும் பெற்று வந்த விவரத்தையும் சாவித்திரி கூறினாள்.

சாவித்திரியும் சத்யவானும் தங்கள் குடிலுக்குத் திரும்பி வந்தனர். சாவித்திரி எமனிடம் பெற்ற வரத்தின்படி சத்யவான் மீண்டும் தன் நாட்டைப் பெற்றான். அவனது பெற்றோர்கள் கண்பார்வை பெற்றனர்.

சாவித்திரி அனுஷ்டித்து வந்த நோன்பு அவளது காலம் வரை கௌரி நோன்பு எனக் கூறப்பட்டது. அதன் பின்னர் 'சாவித்திரி நோன்பு' என்ற பெயர் பெற்றது. சாவித்திரி காட்டில் இருந்து இந்த நோன்பை மேற்கொண்டபோது அங்கு அவளுக்குக் கிடைத்த காராமணி, கார் அரிசி ஆகியவற்றைக் கொண்டு காரடை செய்து நிவேதனம் செய்தாள். அதனால் இந்த நோன்பு நோற்கும் பெண்கள் நிவேதனத்தில் காரடை வைத்து,"உருகாத வெண்ணெயும் ஓரடையும் நான் தருவேன், ஒருக்காலும் என் கணவர் என்னைப் பிரியாதிருக்க வேண்டும்' என வேண்டி நோன்புக் கயிறு கட்டிக் கொள்வார்கள்.

திருமணமான பெண்களுக்கு மாங்கல்ய பாக்கியம் நிலைக்க, கணவரை நோய் நொடியின்றி காக்க இந்த நோன்பு கவசமாக இருக்கிறது. இந்த நோன்பை நோற்பதன் பலனாக சாவித்திரி நூறு பிள்ளைகளுடன் சௌபாக்கியவதியாய் பல்லாண்டு காலம் வாழ்ந்தாள் என்பது புராணம். அவளது சரித்திரத்தை நோன்பு தினத்தில் படிப்பதால் சகல சௌபாக்கியங்களும் பெறலாம்.

'மாசிக் கயிறு பாசி படியும்' என்பார்கள். அதாவது, காரடையான் நோன்பு இருந்து அணிந்துகொள்கிற மஞ்சள் சரடானது பாசி படிகிற அளவுக்கு பழையதானாலும்கூட, கழுத்திலேயே நிலைத்திருக்கும். பெண்கள் தீர்க்க சுமங்கலியாக இருப்பார்கள் என்பது ஐதீகம்.

**காரடையான் நோன்பு நோற்கும் முறை:**
தேவியைப் பிரார்த்தனை செய்து படத்தின் முன்னால் கோலம் போட்டு இலை/தட்டு வைத்து, அதில் அடை, சிறிது வெண்ணை, வெற்றிலைப் பாக்கு, மஞ்சள் கயிறுகளையும் வைத்து விட வேண்டும். பிறகு கீழ்க்கண்ட ஸ்லோகத்தைச் சொல்லி பிரார்த்தனை செய்து ஒரு கயிற்றை அம்பாளின் படத்திற்கு சாத்திவிட்டு மற்றதைத் தான் அணிய வேண்டும். தீர்க்க சுமங்கலிகளாக இருக்கும் வயதான பெண்களை வணங்கி அவர்கள் கையால் சரடு அணிவது சிறப்பு. பிறகு அம்பாளுக்கு நைவேத்யம் செய்து, கற்பூர ஆரத்தி காண்பித்து பூஜையை முடிக்க வேண்டும்.

**மஞ்சள் கயிற்றை கட்டிக் கொள்ளும்பொழுது சொல்ல வேண்டிய ஸ்லோகம்.**
தோரம் கிருஷ்ணாமி சுபகே ஸஹாரித்ரம்
தராமி அஹம்!பர்த்து:ஆயுஷ்ய
ஸித்யர்த்தம் ஸுப்ரீதாபவ ஸர்வதா.

# குலம் செழிக்க வைக்கும் பங்குனி உத்திரம்

Rudhraa



ஆண்டின் நிறைவான மாதமாக வரும் பங்குனி மாதம் குடும்ப ஒற்றுமையை உருவாக்கும் புனித மாதமாக அமைகின்றது. பங்குனி மாதத்தில் உத்திர நட்சத்திரமும், பவுர்ணமியும் சேரும் நாள் நட்சத்திரத்தால், பவுர்ணமியின் பலன் கூடுதலாக அமையும் நாளாக அமைகின்றது. ஒவ்வொரு மாதத்தின் பவுர்ணமி வெவ்வேறு சிறப்புகளை நமக்கு தருவதாக அமைகின்றது. அதில் பங்குனி பவுர்ணமி குடும்ப ஒற்றுமையை உணர்த்தும் நாளாக அமைவது தனிச்சிறப்பு.

பொதுவாக `பங்குனி உத்திரம்' என நட்சத்திரத்துக்கு சிறப்பு தரும் பவுர்ணமி நாள் என்றவுடன் அனைவரது உள்ளமும் குதூகலம் அடையக் காரணம் முருகனுக்கு விழா எடுக்கும் நாள் என்ற சிறப்பைப் பெறுகின்றது. தமிழ் கடவுள் சுப்பிரமணியின் ஆலயங்கள் அனைத்தும் விழாக்கோலம் அடையும் தினம் என்று மட்டுமே பலர் அறிந்து வைத்திருப்போம்.
இந்நாளில்தான் தெய்வத் திருமணங்கள் நடைபெற்றுள்ளது என்று நமது புராணங்கள் நமக்கு தெளிவுபடுத்துகின்றன. எனவே தான் பங்குனி மாதத்தில் நம் குடும்பங்களில் திருமணச் சடங்குகளை நாம் நடத்துவதில்லை.

**தெய்வத்திருமணங்கள்:**
பங்குனி உத்திரத் திருநாளில் ஆண்டாள் நாச்சியார் ஸ்ரீரங்க மன்னரை கரம்பிடித்த நாள் ஆகும். இதுபோலவே ராமர் சீதாதேவியை மணம் செய்த நாளும் பங்குனி உத்திரத் திருநாள் ஆகிறது. ரதியின் வேண்டுதலுக்கு இணங்கி மன்மதனை சிவபெருமான் எழுப்பித்தந்த நாள் பங்குனி உத்திரம் என்பதால் இந்நாள் ஹோலி என்னும் காமன் பண்டிகையாகப் போற்றப்படுகிறது.

மஹாபாரதம் அர்ச்சுனன் பிறந்த தினம் பங்குனி உத்திரம் என்று கூறுவது மட்டுமல்லாமல், அர்ச்சுனனுக்காக அவன் மூலம் உலகுக்கும் கீதை கிடைத்ததைப் போற்றும் நாளாகவும் பங்குனி உத்திரம் சிறப்பு பெறுகின்றது. சிவன் சக்திதேவியை கரம் பிடித்த நாள் பங்குனி உத்திர நன்னாள் என ஆகமங்கள் தெரிவிக்கின்றது. எனவே பல சிவாலயங்களில் திருக்கல்யாண உற்சவங்கள் சிவன் பார்வதிக்கு நடத்தப்படும் நாளாக அமைகின்றது. ஸ்ரீரங்கத்திலும், ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் நடைபெறும் பங்குனிப் பெருவிழாக்கள் இறைவனின் கருணையை ஒருநிலைப்படுத்துவதாக அமைகின்றது.

**சபரியும் உத்திரமும்:**



சபரிமலை சாஸ்தா அய்யப்பன் அவதார தினம் பங்குனி உத்திரம் என்பதால் சபரிமலையில் 'ஆராட்டுவிழா' என்னும் தீர்த்தவாரி நிகழ்ச்சி மிகவும் விமரிசையாக நடைபெறுகின்றது. இறைவன் நீராட்டப்படும் நதியில் நாமும் நீராடினால் புனிதப்படுத்தப் படுகின்றோம். பல ஆலயங்களில் நடைபெறும் பங்குனி பிரம்மோற்சவங்கள் நமது கலாச்சாரப் பண்புகளையும், நம் நாகரிகத் தன்மையும் நமக்கும், உலகுக்கும் தெரிவிப்பதாக அமைகின்றன.

**குல வழிபாடு:**
பங்குனி மாதத்திற்கு உண்டான தனிச்சிறப்பு நம்மை ஒன்று பட வைப்பதாக அமைகின்றது. பங்குனி உத்திரம் பல குடும்பங்களின் குல தெய்வங்களை தேடிச் சென்று வழிபடும் நன்நாளாக அமைகின்றது. பங்குனி உத்திரம் அன்று நாம் நம் குலதெய்வங்களை வழிபட உகந்த நாளாக அமைகின்றது.

இந்நாளில் நமது குலதெய்வக் கோவில்களுக்குச் சென்று வழிபாடு செய்வது நம் குலம் சிறக்க உதவுகின்றது. நாம் நம் குல தெய்வங்களை இந்த நாளில் சென்று வழிபாடு செய்தால் நமது மூதாதையரின் பரிபூரண ஆசிகள் நமக்கு கிடைக்கின்றது. அது மட்டுமா... இன்று இருக்கும் பரபரப்பான சூழ்நிலையில் நாம் யார் எதற்காக பிறந்திருக்கின்றோம் என்றே நமக்கு புரிவதில்லை என புலம்புகின்றோம். நம் குலதெய்வக் கோவிலுக்கு செல்வதன் மூலம் நமது சொந்தங்கள் எத்தனை லட்சம் பேர், அவர்கள் வாழ்ந்து வரும் சூழ்நிலைகள், அவர்கள் செய்து வரும் சமூக, ஆன்மீகப் பணிகளை தெரிந்து கொள்வதன் மூலம், நமது குல மக்களின் சிறப்புகளையும் சொந்தங்களையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைப்பதால் வேலை வாய்ப்பில் உதவி, திருமண பந்தங்கள் பற்றிய விபரங்கள் தெரிந்து நம் சமூகத்துடன் இணைய, என குல தெய்வ வழிபாடு நமக்கு நம் குலச் சிறப்பையும், பெருமையையும் உணர்த்தும் நல்ல நாளாக பங்குனி உத்திரம் அமைகின்றது.

**திருமண ஸ்தலம்:**
முருகப் பெருமானின் அவதார நோக்கமான சூரனை சம்ஹாரம் செய்ததற்கான பரிசாக இந்திரன் தன் மகள் தெய்வானையை முருகனுக்கு மணம் முடித்துத் தந்த நாள் பங்குனி உத்திரம் அன்று தான் என்பதால் இத்திருமணம் நடந்த திருப்பரங்குன்றம் முருகப்பெருமானின் அறுபடை வீட்டில் தனித்தன்மை பெற்றதாக அமைகின்றது. திருப்பரங்குன்றம் முருகனின் திருமணம் நிகழ்ந்த ஸ்தலமாக மைந்துள்ளது. இங்கு நடைபெறும் திருக்கல்யாண உற்சவம் காணும் பேற்றினை அனைவரும் பெறும் வண்ணமே அனைத்து ஆலயங்களிலும் முருகப்பெருமானுக்கு திருக்கல்யாண உற்சவம் நடத்தப்பட்டு இறைவனின் பரிபூரண கருணை அனைவருக்கும் கிடைக்கும்படியாக செய்யப்படுகின்றது.

**அரோகரா... அரோகரா:**
நாம் முருகனை 'அரோகரா' என அழைக்கின்றோம். ஒவ்வொரு மனிதனையும் சுற்றி ஒரு ஆரோ வட்டம் உள்ளது. இந்த ஆரோ வட்டத்தின் வளைவு நம்மைச் சுற்றியுள்ள ஆரோவைத் தூண்டும் செயலில் நாம் இருந்தால் நல்ல பண்புகள் நம்மை வந்தடையும். இதைத்தான் 'அரோ அரா' என முருகனை விளிப்பதன் மூலம் நாம் பெறுகின்றோம்.

அதில் அடுத்து வரும் சித்திரை மாதம் அக்கினியின் தன்மையை அதிகப்படுத்தும் என்பதை சூரியனின் நட்சத்திரமான உத்திரத்தில் அரோ அரா போடும்போது அக்கினித் தாக்கத்தில் இருந்து நம்

குலத்தையும் முதலில் நம்மையும் காத்துக் கொள்ள அரோ அரா எனும் பாதுகாப்பு வளையத்தை நமக்கு ஒரு மாதம் முன்பாக அமைத்துக் கொண்டு வாழ்வாங்கு வாழ வழி வகுக்கின்றது பங்குனி உத்திரம்.

**விரத பலன்கள்:**
பங்குனி உத்திரத்திற்கு முந்தைய நாளில் இருந்து விரதம் இருந்து நமது குலக்கோவில்களுக்கு சென்று வழிபட வேண்டும். நம்மாலான உதவியை வயதானவர்களுக்குச் செய்வதன் மூலம் பெரியவர்களின் பரி பூரண ஆசிகள் நம்மை வாழ வைக்கும். தெய்வத்திருமணங்களை தரிசிப்பதே நம் வீட்டில் மங்கள விழாக்கள் நடக்க வேண்டியதை நாம் சிந்திப்பதற்காக அமைந்தவைகள் ஆகும். இந்தத் திருமண உற்சவத்தில் கலந்து கொண்டு இறைவனை தரிசிக்க திருமணம் கூடி வரும்.

இறைவன் அவதரித்த ஆராட்டு விழாக்களை இன்று நினைப்பதன் மூலம் குழந்தை பாக்கியம் உண்டாகும். பங்குனி உத்திர விரதம் இருந்து நாராயணனை லட்சுமிதேவி அடைந்ததைப்போல் நம் வீட்டுப் பெண்கள் கடைப்பிடிக்கும் விரதத்தின் மூலம் வற்றாத செல்வம் உண்டாகும். கலைமகள் பிரம்மாவை அடைந்த நாள் பங்குனி உத்திரம் என்பதால் இந்நாளில் குழந்தைகள் ஆலயம் சென்று வணங்குவதன் மூலம் கல்வியின் சிறப்பைப் பெறுவார்கள். கல்வியும், செல்வமும் சேர்வதன் மூலம் சிறந்த தொழில் அதிபர்களாகவும், சிறந்த வேலையைப் பெறுபவர்களாகவும் நாம் அமைகின்றோம். லாபம் பெருகும், நிம்மதி தொடரும். உத்யோக உயர்வு, கல்வியில் மேன்மை என அனைத்து யோகமும் கிடைப்பதுடன் சொந்தங்களின் அனுசரனையும் அமைந்து குடும்ப ஒற்றுமையுடன், குடும்ப பாரம்பரிய ஒற்றுமையும் உண்டாகும்.

**அறுபடை வீடுகள்:**
பங்குனி உத்திரம் பழனி, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், சுவாமிமலை போன்ற அறுபடை வீடுகள் மற்றும் எண்கண், சிக்கல் போன்ற முருகன் ஆலயங்களில் மிக விமர்சையாக நடைபெறுகின்றது. சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில், நடைபெறும் மச்சக்காவடி, சேவற்காவடி, கற்பகக் காவடி உலகப் பிரத்தி பெற்றது. எனவே நாம் நம்மூர் அருகில் உள்ள முருகன் கோவில்களுக்குச் சென்று பங்குனி உத்திர நன்னாளில் இறைவனை வணங்கி நன்மைகள் பெறுவோம்.

**Spiritual Notebook - Rudhraa**

11 அமாவாசை
14 காரடையான் நோன்பு
17 கார்த்திகை
23 ஏகாதசி
24 பிரதோஷம்
26 ஹோலி, பங்குனி உத்திரம்
27 பௌர்ணமி
29 புனித வெள்ளி
31 ஈஸ்டர்

06 ஏகாதசி
08 சிவராத்திரி

## தமிழ் மந்திரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.



Penmai.com

உன்னைச் சரணடைந்தேன்...

# ஏகப்பத்தினி விரதனின் ஸ்ரீராம நவமி

*...Sumathisrini*

மனிதன் உலகில் எப்படி வாழ வேண்டும் என்பதை மக்களுள் ஒருவராக வாழ்ந்து உலகத்துக்கு உணர்த்திய அவதாரமே ஸ்ரீ ராமாவதாரம்.

ஸ்ரீராமன் பிறந்தது நவமி திதியில் தான். எனவே, அவன் பிறந்த புனிதத் திருநாளை ராம நவமியாகக் கொண்டாடுகிறோம். ஸ்ரீராமன், நவமி திதியில் அவதரிக்கும் போது, புனர்பூச நட்சத்திரத்தில் நான்காம் பாதத்திலும், ஐந்து கிரகங்கள் உச்சத்திலும் இருந்தன. கடக லக்னத்தில் நண்பகல் வேளையில், ராமவதாரம் நடந்தேறியது. ஸ்ரீ ராமர் இந்நட்சத்திரத்தில் அவதரித்ததால் இந்நட்சத்திரத்தின் நான்கு பாதங்களும் தோஷமற்றது.



**தர்மம் காக்க அவதரித்த ராமன்:**
தர்மம் அழிந்து, அதர்மம் தலை எடுக்கும் போதெல்லாம் மண்ணுலகையும், மக்களையும் காக்க மகாவிஷ்ணு அவதாரங்கள் எடுத்தார் என்கின்றன புராணங்கள். இதில் ஏழாவதாக எடுத்த ராம அவதாரம் மனித அவதாரமாக இருந்ததால் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

முந்தைய அவதாரங்களான மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம் வாமனர், பரசுராமர் ஆகியவை, நீர்வாழ்வனவாகவும், விலங்காகவும், விலங்கும், மனிதனும் இணைந்தும் காணப்படும். இந்த ராம அவதாரத்தில் தான் மனிதர்கள் படும் அனைத்து இன்னல்களையும் இறைவனும் அனுபவித்து அதன் மூலம் மக்களுக்குப் பாடம் புகட்டியிருக்கிறார்.

**அவதாரச் சிறப்புகள்:**
ரகு குலத்தில் தசரத சக்கரவர்த்திக்கு மகனாக உதித்த ராமன், சீதாதேவியை மணந்து ஏகபத்தினி விரதனாக இருந்தார். தந்தை செய்து கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றினார். அரக்கன் ராவணனை சம்ஹாரம் செய்து மக்களைக் காத்தார். இவரது சிறப்புகளை விளக்கும் ராமாயணம் நமது இதிகாசங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது. இது ராம அவதாரத்தைப் பற்றியும், அவர் செய்த சாதனைகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

**ராம நவமி கொண்டாட்டம்:**
ஸ்ரீராம நவமியை, வட மாநிலங்களில் பத்து நாட்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். தென் பகுதியிலும் வைணவ ஷேத்திரங்களில் உற்சவங்களோடு ராம நவமி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஸ்ரீராம நவமிக்கு பத்து தினங்களுக்கு முன்பே, ராமாயணம் படிக்கத் துவங்கி, ஸ்ரீராம நவமி அன்று, ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகத்துடன் நிறைவு செய்ய வேண்டும். ஸ்ரீ ராமரின் காவியம் படிப்பது, ராமரின் பெருமைகளைப் பிறர் சொல்லக் கேட்பது போன்றவை நமக்கு சிறந்த புண்ணியத்தைக் கொடுக்கும். இந்த

நாட்களில் ஸ்ரீராமரை வழிபட்டு விரதம் மேற்கொள்வர். பஜனைகள், இராமாயணச் சொற்பொழிவுகள் நடைபெறும்

**நீர்மோர் பானகம்:**
ஸ்ரீராமர் விசுவாமித்திர முனிவருடன் இருந்த போதும், கானக வாழ்க்கை மேற்கொண்டிருந்த போதும் தாகத்திற்கு நீர் மோரும் பானகமும் பருகினார் என்பதை நினைவுபடுத்தும் விதமாகவே அவை இரண்டும் ஸ்ரீராமபிரானுக்கு நிவேதனம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது.

வைஷ்ணவ ஆலயங்களில் ஸ்ரீராமருக்கு பட்டாபிஷேக விழா சிறப்பாக நடைபெறும். வீடுகளில் ஸ்ரீராமர் பட்டாபிஷேகப் படத்தை வைத்துப் பூஜை செய்து, வடை, பருப்பு, நீர்மோர், பானகம், பாயசம் நிவேதனம் செய்து வழிபடுவார்கள். ஸ்ரீராமர் படம் அல்லது விக்ரகத்துடன் ராமாயணப் புத்தகத்தையும் வைத்துப் பூஜிப்பார்கள்.

**ராம நாமத்தின் மகிமை:**
'ராம' என்ற மந்திரம், 'ஓம் நமோ நாராயணாய' என்ற எட்டெழுத்து மந்திரத்திலுள்ள (ஓம் என்பது ஒரே எழுத்து) 'ரா' மற்றும் 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரத்திலுள்ள, 'ம' என்ற பீஜாக்ஷரங்களை இணைத்து உருவாக்கப்பட்டது.
பீஜாக்ஷரம் என்றால், உயிர்ப்புள்ள எழுத்து என்று பொருள். "ஸ்ரீராம ஜெயராம ஜெய ஜெயராம" என்னும் ராம தாரக மந்திர ஜெபம் செய்வதால் தொடர்ந்து வெற்றிகள் ஏற்படும்.



பகவானின் ஆயிரம் நாமங்களுக்கு இணையானது ராம நாமம். ஸ்ரீராம நவமியன்று ராமநாமம் சொல்வதும், ராமநாமம் எழுதுவதும் நற்பலனைத் தரும். பகவான் நாமம் இதயத்தைத் தூய்மைப்படுத்தி உலக ஆசைகள் என்னும் தீயை அணைக்கிறது. இறைஞானத்தைத் தூண்டுகிறது. அறியாமை, காமம், தீய இயல்புகளைச் சுட்டுப் பொசுக்குகிறது. உணர்ந்தோ உணராமலோ உச்சரித்தாலே பகவான் அருள் கிட்டும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

ராம நாமத்தைச் சொல்லி ஸ்ரீராம நவமி கொண்டாடுவோம். தசரத மைந்தனின் அருள் பெறுவோம்.

**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே!**
**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே!!**

**Spiritual Notebook**

**ஏப்ரல்**
14 தமிழ்ப்புத்தாண்டு
16 சஷ்டி
19 ராமநவமி
23 பிரதோஷம்
25 பௌர்ணமி
24 மகாவீரர் ஜெயந்தி
25 சித்ரா பவுர்ணமி

**மே**
6 ஏகாதசி
8 மாத சிவராத்திரி
9 அமாவாசை

## தமிழ் மந்திரம்

பித்தா பிறை சூடீ பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் -
வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே.

# சிறப்புகள் நிறைந்த சித்திரை

*...Parasakthi*

சித்திரைத் திங்களின் பிறப்பு, தமிழ் நாட்டில் `இளவேனில்காலம்' என்னும் வசந்த காலத்தின் பிறப்பு. இப்பருவத்தில் தே, மா, பலா, வாழை போன்ற பழங்கள் செழித்துக் கொழிக்கும்.

மனித வாழ்க்கை என்பது இனிப்பும், கசப்பும் கலந்ததே. இதை எடுத்துக் காட்டுவதைப் போலவே, வசந்த காலத்தில் மாமரங்களில் மாந்தளிர்களும், மலர்களும் பூத்துக் குலுங்கும். அதே போல் வேப்ப மரங்களிலும் வேப்பம் பூக்கள் பூத்துக் குலுங்கும்.

சித்திரைத் திங்களின் முதல் தினத்தை மிக முக்கியமானப் பண்டிகையாக தமிழ் மக்கள் கொண்டாடுகின்றனர். பங்குனித் திங்களின் கடைசி நாளில் வீட்டை நன்றாகக் கூட்டி தூய்மை செய்து, தேவை இல்லாத குப்பைகளைக் களைந்து வீட்டை சுத்தப்படுத்துவர். சித்திரை முதல் நாளில், வீட்டு வாசலில் சாணம் தெளித்து, வண்ணக் கோலங்கள் இட்டு அழகுப் படுத்துவர்.

வாயிற்படிகளை சுத்தம் செய்து, சாணம் போட்டு, மஞ்சள் மற்றும் குங்குமம் இட்டு, நிலைவாயிலில் மாவிலைத் தோரணங்கள் கட்டப்படும். இவ்வாறு மஞ்சள் பூசி, மெழுகி, கோலமிட்டால் வீட்டில் திருமகள் வாசம் செய்வாள் என்பது தமிழ் மக்களின் நம்பிக்கையாகும்.

மஞ்சள் மற்றும் குங்குமம் இரண்டும் நோய்க்கிருமிகளாகவும், துஷ்ட தேவதைகள் வாசல்படியைத் தாண்டி வராமல் தடுக்கும் சக்திகளாகவும் விளங்குகின்றன.

அதே போல் சித்திரை முதல் நாளில் புத்தாண்டுத் தமிழ் பஞ்சாங்கம் ஒன்றும் வாங்கி, அதற்குச் சந்தனம் மற்றும் குங்குமம் இட்டு பூஜையில் வைத்து பூஜிக்க வேண்டும் என்பது மரபு.

இந்தத் தினத்தில் இனிப்பு, கசப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு என அறுசுவைகளில் உணவுகளை சமைத்து விருந்து படைப்பார். அந்நாளில் வேப்பம்பூ பச்சடியும், மாங்காய் பச்சடியும் செய்வது தான் சிறப்பு.

இது தொன்றுதொட்டுத் தொடர்ந்து வரும் தமிழக மரபாகும். அன்றைய தினத்தில் பானகம், நீர் மோர், பருப்புவடை ஆகியவற்றை நைவேத்தியம் செய்வது கூடுதல் சிறப்பு.

### சித்திரையின் சிறப்புகள்:

சித்திரை, தமிழ் புத்தாண்டின் ஆரம்ப மாதம். "சித்திரா" என்னும் சொல் பிரகாசத்தையும் வெளிச்சத்தையும் குறிக்கும் சொல்லாகும். புத்தாண்டின் ஆரம்பத்தையும் ஒளிர வைக்கும் பிரகாசமான மாதமே சித்திரை.

பனி குறைந்து வெயில் வரத் தொடங்கும் பொழுது வசந்தத்தின் ஆரம்பமாக மல்லிகை மணக்கும். மாமரம் பலன்களைக் கொடுக்கும். வெள்ளரிக்காய் தாகம் தீர்க்கும். கிருணி, தர்பூசணி போன்ற பல கனிகள் நம்மைக் குளிர வைக்கும். நோய் தீர்க்கும் வேப்பம் பூக்கள் இம்மாதத்தில் மட்டுமே கிடைக்கும். வடநாட்டில் சித்திரை வருடப்பிறப்பை வைசாகி என்றும், மேஷ சங்கராந்தி என்றும் குறிப்பிடுவர்.

சித்திரை மாதத்தை மேஷ மாதம் என்றும் சொல்வார்கள். சித்திரை மாதப்பிறப்பை பித்ரு தினம் என்றும் சொல்வர். நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒருநாள். இந்த பித்ரு தினத்தில் தர்ப்பணம் செய்வது மிகவும் விஷேசம் மற்றும் சிறப்பு ஆகும்.

சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமி சித்திரா பௌர்ணமி எனப்படும். இது ரொம்ப விஷேசமான நாள் ஆகும். இந்தச் சமயத்தில் மதுரையில் சித்திரைத் திருவிழா நடைபெறும். இந்தச் சித்திரைத் திருவிழா காண்பதற்கு அறிய கண்கொள்ளாக் காட்சியாகும்.



சித்திரை சுக்கிலபட்ச அஷ்டமியில் அம்பிகை அவதரித்ததாக தேவி பாகவதம் கூறுகிறது. சித்திரையில் அம்மன் கோவில்களில் பால்குடங்கள் எடுப்பது, திருவிளக்கு பூஜை செய்வது போன்ற இறைவழிபாடுகள் நடக்கின்றன.

சித்திரை மாதத்தை 'வசந்த ராகம்' என்றும் கூறுவர். சித்திரை மாதத்தில் வளர்பிறை காலத்தில் மூன்றாவது பிறை தோன்றும் நாளே அட்சயத்திருதி என்று அழைக்கப்படுகிறது. அந்நாள் பொன், வெள்ளி போன்றவைகள் வாங்க ஏற்ற தினமாகக் கருதப்படுகிறது. அந்நாளில் தொட்டது அனைத்தும் துலங்கும். மேலும் மேலும் செல்வங்கள் சேரும் என்பது நம்பிக்கை.

சித்திரை மாதத்தில் வரும் திருதியை தினம் விஷ்ணுபகவான் மீனாக அவதாரம் எடுத்த தினமாகும். சித்திரை மாத சுக்கில பஞ்சமி தினம் லட்சுமி தேவி பூமிக்கு வந்த தினமாகும். எனவே அன்று லட்சுமி பூஜை செய்தால் வளமான வாழ்வு கிடைக்கும்.

சித்திரை மாதத்தில் சுக்கிலபட்ச வெள்ளிக்கிழமைகளில் பார்வதியை வழிபட்டால் குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். சித்திரா பௌர்ணமியன்று நெய்தீபம் ஏற்றி குபேரன் மனைவி சித்திரா தேவியை வழிபட்டால் செல்வம் பெருகும். சித்திரா பௌர்ணமியன்று பெண்கள் கோவிலுக்குச் சென்று வழிபட்டால் மாங்கல்ய பலம் நீடிக்கும். சித்திரா பௌர்ணமி தினத்தன்று உப்பு இல்லாத உணவை ஒரு நேரம் சாப்பிட்டு விரதம் இருந்தால் ஆயுள் பலம் கூடும்.

சித்திரை வெள்ளிக்கிழமைகளில் விரதம் இருக்கும் பெண்கள் அம்பிகைக்கு சர்க்கரை நிவேதனம் செய்தால் இனிய வாழ்வு உண்டாகும்.

சித்திரை மாத பரணி நட்சத்திர நாளில் பைரவரை நினைத்து விரதம் இருந்தால் காரியத் தடைகள் விலகும். அன்று பைரவருக்கு தயிர் சாதம்

நிவேதனம் செய்வது கூடுதல் சிறப்பு.

விண்ணுலக கணக்கரான சித்திரகுப்தன் பிறந்தது சித்திரை மாதம், சித்திரை நட்சத்திரம் பௌர்ணமியுடன் கூடிய நாள். அன்றைய தினம் 'சித்திர குப்தம் மகா ப்ரக்கியம் லேகினி பத்ர தரிசனம்! சித்திரா ரத்னாம் பரதாரம் மத்யஸ்தம் சௌர்வ தேஹினாம்!!' என்ற சுலோகத்தைக் கூறி வழிபட்டால் நம்முடைய பாவங்கள் நீங்கும் என்பது ஐதீகம்.

சித்திரை திங்கள் அமாவாசையன்று தான் திருசெங்காட்டங்குடியில் சிவனார் கபாலிருத்திர பசுபதியாக வந்து சிறு தொண்டரிடம் பிள்ளைக்கறியைக் கேட்டு திருவிளையாடல் புரிந்தார்.

ஆதிசங்கரர், ஸ்ரீராமானுஜர், மகாவீரர் ஆகியோர் பிறந்ததும் இந்த சித்திரை மாதத்தில் தான். எந்த மாதத்திற்கும் இல்லாத சிறப்புகள் சித்திரை மாதத்துக்கு மட்டுமே இருக்கிறது. "விஷுக்கனி காணல்" - "கனி காணுதல்" - "சித்திரைக் கனி"

"விஷுக்கனி காணல்" என்பது சித்திரையின் மற்றொரு சிறப்பு ஆகும். "கனி காணுதல்" "சித்திரைக் கனி" என்றும் இதனைக் குறிப்பிடுவர்.

சித்திரை மாதம் பிறப்பதற்கு முந்தைய நாள் இரவிலேயே, இரவு சாப்பாடு முடிந்தபிறகு பூஜை அறையை தூய்மை செய்து கோலமிட்டு அழகுப்படுத்துவர்.

ஒரு பெரிய தாம்பாளத்தில் மா, பலா, வாழை, கொய்யா, மாதுளை, ஆரஞ்சு, திராட்சை போன்ற பல வகைப் பழங்களுடன் வீட்டிலுள்ள பொன் மற்றும் வெள்ளி நகைகள், ஆபரணங்கள், பணம், நிலைக்கண்ணாடி, வெற்றிலை, பாக்கு, தேங்காய், மலர்கள் முதலிய மங்கலப் பொருள்களை வைத்து, ஒரு மனையின் மீது கோலமிட்டு, பூஜைக்குரிய தெய்வத்தின் முன் வைப்பர்.

மறுநாள் காலை அதாவது சித்திரை மாதப் பிறப்பன்று அதிகாலையில் முதன் முதலாக வீட்டிலேயே வயது முதிர்ந்த பெண் எழுந்து, பூஜை அறையில் உள்ள மங்கலப் பொருட்களில் கண் விழிக்க வேண்டும். தட்டில் உள்ள கண்ணாடியில் அங்குள்ள எல்லாப் பழங்களையும் மற்றவற்றையும் பார்த்த பிறகு குளித்து புத்தாடை உடுத்தி, பூஜை அறையில் உள்ள விளக்குகளையும், ஊதுவத்திகளையும் ஏற்றி பூஜை செய்ய வேண்டும்.

அதன் பின் அவர், வீட்டில் தூங்கும் ஒவ்வொருவரையும் தட்டி எழுப்பி, கண்களை மூடிய நிலையிலேயே பூஜை அறைக்கு அழைத்துச் சென்று, தாம்பாளத்தில் உள்ள கண்ணாடியில் தட்டில் பரப்பி வைக்கப்பட்டிருக்கும் பழங்களையும் நகைகளையும் முதன் முதலாக காணச் செய்து பின் தெய்வத்தை வணங்கச் செய்வது வழக்கம்.

இப்படிச் செய்வதால் இனிவரும் நாட்கள் முழுதும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் வீட்டில் மங்கலங்களும் செல்வங்களும் செழித்தும் இருக்கும் என்பது நம்பிக்கை.



# உன்னைச் சரணடைந்தேன்...

## அக்னி நட்சத்திரம் பிறந்த கதை

...Vijigermany

அக்னி நட்சத்திர காலத்தில் அதிகாலை துயிலெழுந்து நீராடியபின் சூரிய பூஜையும், சூரிய நமஸ்காரமும் செய்வது சிறந்தது. குடை, விசிறி, காலணிகள் தானம் செய்யலாம். அத்துடன் அன்னதானமும், ஆடைதானமும் செய்வது நல்லது. தண்ணீர் பந்தல் அமைத்து தண்ணீர், நீர்மோர் போன்றவற்றைத் தருவது நற்பலன் தரும்.

அக்னி நட்சத்திர நாட்களில் நோய்கள் பல பரவக்கூடிய வாய்ப்பு உள்ளது. அக்னிக் காற்று நோய் பரப்பும் தன்மை கொண்டது. அதனால் தினமும் குடத்தில் நீர் நிரப்பி மஞ்சள் கரைத்து அதனை வேப்பிலைக் கொத்துகளால் நனைத்து வீடு முழுதும் தெளிக்கலாம்.
நரசிம்மரை வழிபட்டு தயிர்சாதம், நீர்மோர், பானகம் படைத்து தானம் செய்யலாம். விஷ்ணு நாமத்தை 108 முறை ஜபிக்கலாம். சீதளா தேவி ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்வதும் நல்லது.



சரி, அக்னி நட்சத்திரம் பிறந்த கதை என்னவென்று பார்ப்போம். முன்னொரு காலத்தில் சுவேதகி யாகத்தில் பன்னிரண்டு வருடங்கள் இடைவிடாமல் நெய் ஊற்றி யாகம் செய்தனர். தொடர்ந்து அக்னி தேவன் அந்த யாக நெய்யை உண்டதால் உடலில் கொழுப்பு அதிகரித்து நலமிழந்தான். அதற்கு மருந்து காண்டவக் காட்டை அழித்து உண்பதுதான் என்று ஆலோசனை கூறப்பட, காண்டவ வனத்தை நோக்கிச் சென்றான் அக்னிதேவன்.

அதனை அறிந்து அக்காட்டில் வசித்த உயிரினங்கள், தாவரங்கள் அனைத்தும் வருணனிடம் உதவி வேண்டின. எனவே வருணன் இடைவிடாது மழை பெய்தான். அதனால் அக்னியால் காட்டை அழிக்க முடியவில்லை. எனவே அக்னி தேவன் திருமாலிடம் உதவி வேண்டினான். திருமால், அர்ச்சுனனிடம் அக்னிக்கு உதவச் சொன்னார். அர்ச்சுனன் தன் கணைகளால் அந்தக் காட்டை மறைத்து சரக்கூடுகட்டி தீ அணையாது எரிய உதவினான். அப்போது திருமால் அக்னிக்கு ஒரு நிபந்தனை விதித்தார். "உனக்கு இருபத்தோரு நாட்கள் அவகாசம் தருகிறேன். அதன்பின் நீ காட்டை அழிக்கக் கூடாது" என்றார்.

எனவே அக்னி 7 நாட்கள் மெதுவாக எரிந்து, பின் 7 நாட்கள் வேகமாக எரிந்து, கடைசி 7 நாட்கள் வேகம் குறைந்து உண்டபின் திரும்பினான். அதுவே அக்னி நட்சத்திர காலம். இதுதான் அக்னி நட்சத்திரம் பிறந்த கதை.

இந்த நாட்களில் முருகனையும் மீனாட்சியையும் வழிபடுவதுடன், பரணிக்குரிய துர்க்கையையும், ரேவதிக்கு உரிய பிரம்மனையும், கிருத்திகைக்கு உரிய அக்னியையும் வழிபாடு செய்வதும் நல்லது.

எளிய, எல்லோராலும் இயன்ற வழி, இக்காலத்தில் அகமும் புறமும் தூய்மையுடன் இருப்பதும், பிறர் மனம் குளிரும் வண்ணம் நடப்பதும், இயன்ற அளவில் தருமம் செய்வதும், மனம் உருகி இறைவனை வழிபடுவதும், கடவுள் அருள் மழையில் நம்மை நனைக்கும் என்பது நிச்சயம். இறைவன் கருணை மழையில் நனைந்துவிட்டால் கத்திரி வெயிலும் நம்மை வாட்டாது குளிரும். வாழ்வும் மலரும்.

# அக்ஷய திருதியை

...Sumathisrini



சித்திரை மாத வளர்பிறைக் காலத்தில் மூன்றாம் நாளாகிய திருதியை தினம், குறைவடையாத விருத்தியைத் தரும் சிறப்பு நாளாகக் கருதப்படுகின்றது. இதனை அக்ஷய திருதியை என்று அழைப்பர்.

சயம் என்றால் குறைவடைதல் எனவும், அட்சயம் என்றால் குறைவடையாதது எனவும் பொருள்படும். அன்று ஒவ்வொருவரும் தமக்கு சகல செல்வங்களையும் பெருக்குவதற்காக மஹாலட்சுமியை வழிபடுவர்.

அன்றைய தினம் பொன்னையும் வேறு தமக்குப் பிடித்தமான பொருளையும் வாங்கிக் குவிப்பர். ஏழைகள் கூட அன்றைய தினம் ஒரு குண்டுமணியளவு பொன்னை வாங்கிச் சேர்த்தால், மஹாலட்சுமியின் நல்லருளால் நாளடைவில் தமக்கு வேண்டியளவு பொன்னும், மணியும், பொங்கிவழியச் செய்வாள் என்பது நம்பிக்கை.

வசதி படைத்தவர்கள் பொற்காசுகளையும், பொற்பாளங்களையும் வாங்கி வங்கிகளில பத்திரப்படுத்துவர்.

இந்த நாள் இந்து மும்மூர்த்திகளில் காக்கும் கடவுளான இறைவன் விஷ்ணுவால் ஆளப்படுவதாகும். இது வழமையாக இந்து முனிவரான பரசுராமரின் பிறந்த நாளாகவும் கொண்டாடப்படுகிறது, அவர் இறைவன் விஷ்ணுவின் ஆறாவது அவதாரமாவார்.

ஹிந்து இதிகாசங்களின்படி, இந்த நாளில் திரேதாயுகம் தொடங்கியது. பகீரதன் பிரயத்தனத்தால் கங்கை பூமிக்கு வந்ததும் அக்ஷய திருதியை அன்று தான். அரக்கர்களாகிய சும்ப - நிசும்பனை அவதாரம் நிகழ்ந்தது அட்சய திருதியை அன்றே.

பாண்டவர்களிடம் அட்சய பாத்திரம் இருந்தது. அள்ள அள்ளக் குறையாத செல்வத்தைக் கொடுக்கக் கூடிய இப்பாத்திரத்தை சூரியபகவான் பாண்டவர்களுக்குக் கொடுத்தார். இந்நிகழ்ச்சி நடந்த நாள் அட்சய திருதியை. அம்பாள் வதம் செய்ததும் அட்சய திருதியை தினத்தில் தான். புராண முனிவராம் வேத வியாசர், விநாயகரின் துணையுடன் மகாபாரதம் எழுதத் துவங்கியதும் இந்தத் திருநாளில் தான்.

நண்பன் குசேலனுக்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா குபேர சம்பத்து அருளியதும் அட்சய திருதியையில் தான். அடுத்த பிறவியில் குசேலன் குஷாவந்தி தேசத்தின் மன்னரானார்.



ஆதிசங்கரர் பொன்மழை பெய்யச் செய்ததும் இந்நாளே. இந்த நாளிலில் தான் திரௌபதிக்கு கிருஷ்ணர் வஸ்திரம் அளித்தார். மதுரை மீனாட்சியை சுந்தரேஸ்வரர் மணந்தார். பிரம்மதேவன் பூமியைப் படைத்தார். காசி அன்னபூரணி சிவபெருமானுக்கு அன்னபிட்சை அளித்தாள். ஐஸ்வர்ய லட்சுமி அவதரித்தாள்.

ஜைன மதத்தைச் சேர்ந்த முதல் தீர்த்தங்கர் ரிஷபதேவ சுவாமி, தன் ஆறு மாத உபவாசம் முடிந்து, உணவு தேடி அலைந்து, ஏழு மாதமும் ஒன்பது நாளும் ஆனபிறகு தான் அவருக்கு உணவு கிடைத்தது. அவர் முதன்முதலாகக் கரும்புச்சாறு குடித்து விரதத்தை பூர்த்தி செய்தது இந்தத் திருநாளில் தான். பொதுவாக இந்த நாளில் கடவுள் வாசுதேவரை நெல் அரிசியுடன் வணங்கியும் உண்ணா நோன்பிருந்தும் அனுசரிப்பர். வேதப்புத்தகங்கள், இந்த நாளில் அறிவு பெறுதல் அல்லது கொடையளித்தல் நல்ல பலனளிக்கும் எனக் கூறுகின்றன. இது புதிய வணிகத்தினையோ அல்லது முயற்சியையோ துவங்க வெகு அதிர்ஷ்டமுள்ள நாளாகக் கருதப்படுகிறது.

மக்கள் இந்த நாளில் உண்ணாநோன்பும் பூஜைகளும் அனுசரிக்கின்றனர். விசிறி, அரிசி, உப்பு, நெய். சர்க்கரை, காய்கறிகள், புளி, பழம், துணிகள் ஆகியவற்றை தர்மம் செய்கின்றனர்.

இந்த நாளில் விஷ்ணுவை வணங்குகின்றனர். தீபாராதனை செய்யும்போது சிலையின் மீது அல்லது அருகில் துளசி தீர்த்தம் தெளிக்கப்படுகின்றது.

பெங்காலில், அக்ஷய திருதியை நாளில், "ஹல்கதா" எனும் விழா கொண்டாடப்படுகிறது. அது கணேஷ் மற்றும் லக்ஷ்மியை வணங்கி புதிய கணக்குப் புத்தகத்தை எழுதத் தொடங்கும் நாளாகும். பெங்காலிகள் இந்த நாளில் பல சமயச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் செய்கின்றனர்.

அக்ஷய திருதியை அன்று, பிருந்தாவனத்தில் தாமோதர் கோயில் மற்றும் ராதாகிருஷ்ணர் கோயிலில் சந்தனக்காப்பு சாத்துவார்கள். ராஜஸ்தானில் அட்சய திருதியை தினத்தை 'அகாதீஜ்' என்று கொண்டாடுகின்றனர். உத்தரப் பிரதேசத்தில் 'சுகல் திருதியா' என்று பெயர். கர்நாடகாவில் 'அக்ஷய தடிகே' என்பார்கள்.

செல்வத்திற்கு அதிபதியான கடவுளர் குபேரரே செல்வமிக்க கடவுள் என நம்பப்படுகிறார். இந்த நாளில் குபேரர் கூட விஷ்ணுவின் மனைவியும் செல்வத்திற்கான தெய்வமான லக்ஷ்மியை வணங்குவார் என லக்ஷ்மி தந்தரம் கூறுகிறது.

இந்த நாளில், குபேர லக்ஷ்மி பூஜை நடத்தப்படுகிறது. அதில் லக்ஷ்மி உருவப்படத்துடன் குபேரரின் அடையாளமான சுதர்ஷன குபேர யந்தரமும் ஒன்றாக வைக்கப்பட்டு வணங்கப்படுகிறது.

இந்த நாள் ஜாட் விவசாய சமூகத்திற்கும் மிக மங்களகரமான நாளாகும். விடியற்காலையில் ஜாட் குடும்பத்தின் ஓர் ஆண் நிலத்திற்கு மண்வெட்டியுடன் செல்கிறார். நிலத்திற்குச் செல்லும் வழியில் எதிர்ப்படும் அனைத்து விலங்குகளும் பறவைகளும் மழை மற்றும் பயிர்களுக்கு சகுனங்களாகவும் அறிகுறிகளாகவும் கருதப்படுகின்றன. அக்ஷய திருதியை திருமணங்களுக்கு ஏற்ற காலமாகவும் கருதப்படுவதால் அந்நாளில் பெரும் எண்ணிகையிலான திருமணங்களும்



Online Tamil Book Store / Cds DVDs







ஆன்மீகப் புத்தகங்கள் | பூஜை & விரத முறைகள் | புராணக் கதைகள் & இதிகாசப் புத்தகங்கள்

Buy Now

@ one place
www.MyAngadi.com

Free shipping across India for purchase above Rs. 500*



நடத்தப்படுகின்றன. அது அன்பூஜா முஹூரத்தாக கருதப்படுகிறது.

அட்சய திருதியை அன்று ஆலிலையில் மிருத்யுஞ்ஜய மந்திரத்தை ஜபித்து, அதை நோயாளிகளின் தலையணையின் அடியில் வைத்தால் நோய் விரைவில் குணமாகும் என்பது நம்பிக்கை.

அக்ஷய திருதியை தினத்தன்று லட்சுமி குடியிருக்கும் பொருட்களை வாங்க வேண்டும் என்பதே ஐதீகம். அந்த வகையில் பார்த்தால் அன்று குறிப்பாக வாங்க வேண்டிய பொருட்கள் **மஞ்சளும், முனை முறியாத (கைக்குத்தல்) பச்சரிசி, வெள்ளி, கல்லுப்பு** ஆகியவை தான்.

அக்ஷய திருதியை என்றால் தங்கம் வாங்கித்தான் கொண்டாட வேண்டும் என்ற அவசியம் இல்லை. வீட்டில் பெண்கள் அதிகாலை எழுந்து குளித்து, குத்துவிளக்கேற்றி, மகாலட்சுமி படம் அல்லது அரிசி நிறைந்த செம்பு அல்லது நீர் நிறைத்து அதில் வாசனைத் திரவியங்களான பச்சை கற்பூரம், ஏலம் போட்டு வைத்து, வாசனை மலர்களால் தெரிந்த மந்திரம் கூறி, பாயசம் நைவேத்தியம் வைத்து , மகாலட்சுமியை வணங்கி, பின் வீட்டிற்கு சுமங்கலிகளை அழைத்து, முடிந்த வரை தட்சிணை வைத்து, தோலுரிக்காத மட்டையுடன் கூடிய தேங்காயை வைத்து மஞ்சள், குங்குமம் தந்து வணங்கினாலே மகாலட்சுமி மகிழ்ந்து இல்லம் வருவாள்.

அட்சய திருதியைத் திருநாளில் செய்யப்படும் தானங்களும் பன்மடங்கு பலனைப் பெற்றுத்தரும். அட்சய திருதியையன்று தான தர்மங்கள் செய்தால் எமவேதனை கிடையாது. நலிந்தவர்களுக்கு உதவி செய்தால் மறுபிறவியில் ராஜயோக வாழ்க்கை அமையும். ஆடைகள் தானம் செய்தால் நோய்கள் நீங்கும்; பழங்கள் தானம் செய்தால் உயர் பதவிகள் கிடைக்கும்; மோர், பானகம் அளித்தால் கல்வி நன்கு வளரும்; தானியங்கள் தானம் கொடுத்தால் அகால மரணம் ஏற்படாது; தயிர் சாதம் தானம் அளித்தால் பாவ விமோசனம் ஏற்படும்; முன்னோருக்கு தர்ப்பணம் செய்தால் வறுமை நீங்கும்.

அக்ஷய திருதியை தினம் "தொட்டதெல்லாம் துலங்கும்" என்று அனைவரும் போற்றும் உன்னத நாள். அன்று தொடங்கும் வீடு வாங்கும் பணி, விவாகப் பணிகள் செவ்வனே தங்கு தடையின்றி முடியும் என்பது ஐதீகம்.

ஆனால் உண்மையில், அக்ஷய திருதியை தினத்தன்று நிரம்பி வழியும் நகைக்கடைகளில் அலைமோதிக் கொண்டு, உள்ளே சென்று ஒரு குண்டுமணி





தங்கமாவது வாங்க வேண்டும் என்று எந்த சாஸ்திரமும் சொல்லவில்லை. சென்ற சில பத்தாண்டுகளில் வணிக நோக்கத்தில் கிளப்பி விடப்பட்ட மாயை இது. ஒரே நாளில் சந்தைக் கடைபோல முண்டியடித்துக் கொண்டு வாங்கி தங்கத்தின் விலையை ஏற்றாதீர்கள். எதுவானாலும் தேவை என்றால் மட்டுமே வாங்குவதை வழக்கமாகக் கொள்ளுங்கள். இது உங்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது.

தேவி பாகவதத்தில் மகாவிஷ்ணுவே மகாலட்சுமியைப் போற்றிச் சொன்ன சில ஸ்லோகங்கள் எளிய தமிழ் விளக்கத்துடன் இங்கே தரப்பட்டுள்ளது. அட்சய திருதியை தினத்தில் அகம் முழுக்க அலைமகளை நினைத்து இந்தத் துதியைச் சொல்லி வழிபடுங்கள் அல்லது இதன் எளிய தமிழ் அர்த்தத்தை மட்டுமாவது சொல்லுங்கள்.

**யன் மாயாசக்தி ஸம்ஸப்தம் ஜகத் சர்வம் சராசரம்**
**தாமசிதாம் புவநாதிதாம் ஸமராம: கருணார்ணவாம்**

இந்த உலகின் இயக்கத்தையே தன் மாயா சக்தியால் அசைவின்றி நிற்கச் செய்யும் அரிய ஆற்றலை தன்னகத்தே கொண்டு இயங்குபவள். தன்னால் மயங்கிய அண்டங்களையெல்லாம் மீண்டும் இயங்க வைக்கும் புவனங்களின் தாய் அவள்.

**யதக்ஞாநாத் பவோத்பத்தி: யதக்ஞாநாத் பவநாஸநம்**
**ஸம்வித்ரூபாம்சதாம் தேவீம் ஸ்மராம: ஸா ப்ர சோதயாத்**

அஞ்ஞானத்தால் எந்த தேவியின் பெருமையை அறியாமல் விட்டவர்கள் அழிவைத் தாங்களே தேடிக்கொள்கிறார்களோ, எவளின் அருமையை உணர்ந்து போற்றித் தொழுபவர்கள், பலர் போற்றும் வகையில் வாழ்கிறார்களோ, அந்த தேவியின் அருளை வியந்து நெஞ்சாரப் போற்றுகின்றேன்.

**மாதர்நதாஸ்ம புவநார்த்தீஹரேப்ரஸீத**
**மந்நோ விதேஹி குரு கார்யமிதம் தயார்த்ரே**
**பாரம் ஹரஸ்வ விநிஹத்ய ஸுராரி வாக்கம்**
**மஹ்யா மஹேஸ்வரி ஸதாம் குரு சம்பவாநி**

தாயே வணங்கிப் பணிகிறேன். புவனத்தின் கஷ்டங்களைத் தீர்ப்பவளே போற்றி. எங்கள்பால் அன்பு வைத்து இன்னல்களைத் தீர்ப்பாயாக. துன்பச் சுமைகளைக் குறைக்கின்றவளே போற்றி. நல்லோரின் எதிரிகளை அழித்து நன்மைகளைத் தருபவளே போற்றி. எங்களுக்கு இன்பத்தைத் தரும் மஹேஸ்வரியே போற்றி.

**மஹாலக்ஷ்ம்யை ச வித்மஹே**
**ஸர்வ சக்த்யை ச தீமஹி**
**தந்நோ தேவீ ப்ரசோத யாத்**

மகாசக்தியாகவும், உயிர்களை உய்விப்பவளாகவும் நன்னெறியில் நம்மை நடத்திச் செல்பவளாகவும் உள்ள தேவி எங்களைக் காத்திடட்டும். எங்கள் செயல்களை அவளே ஊக்குவிக்கட்டும்.

**ஸஹஸ்ரதள பத்மஸ்த கர்ணிகா வாஸிநீம் பராம்**
**சரத் பார்வண கோடீந்து ப்ரபாம் முஷ்டிகராம் பராம்**

ஆயிரம் இதழ் தாமரையில் அமர்ந்தவளே! கருஞ்சிவப்பு நிற ஆடை உடுத்தியவளே! கோடிக்கணக்கான சரத் கால சந்திரனைப் போல் ஜொலிப்பவளே... எழிலார்ந்த அன்னையே... உன் திருவடிகளைப் போற்றுகிறேன்.

**ஸ்வ தேஜஸா ப்ரஜ்வலந்தீம் ஸுகத்ருஸ்யாம் மநோ ஹராம்**
**ப்ரதப்த காஞ்சந்நிப சோபாம் மூர்த்திமதீம்ஸதீம்**

சுயமான அவள், தன் ஒளியால் ஒப்பில்லா மணியாகப் பிரகாசிப்பவள். தவறில்லாத இன்பத்தைத் தரும் மனோகரமானவள். மாசில்லா பொன்னுக்கும் மேலானவள். ஜோதியே உருவானவள். கற்பில் சிறந்தவள். அப்படிப்பட்ட அலைமகளுக்கு வணக்கம்.

**ரத்ந பூஷண பூஷாட்யாம் சோபிதாம் பீதவாசஸா**
**ஈஷத் தாஸ்யாம் ப்ரஸந்தாஸ்யாம்**
**சச்வத் ஸுஸ் திரயௌவனாம்**
**ஸர்வ சம்பத் ப்ரதாத்ரீம் ச**
**மஹாலக்ஷ்மீம் பஜே சுபாம்**

ரத்னமயமான ஆபரணங்களை அணிந்து ஒளிர்பவளே. மங்களகரமான மஞ்சள் வண்ணப் புடவை உடுத்துபவளே. பணிபவர்களின் கோரிக்கைகளை ஒன்றுக்குப் பன்மடங்காகத் தருபவளே. குறையாத இளமையும், வளமுமுடையவளே. அனைத்துச் செல்வங்களையும் தருபவளே. அன்னையாம் மஹாலக்ஷ்மியே, உனைப் போற்றி வணங்குகிறோம்.

(மகாலட்சுமி துதி நிறைந்தது)

**Spiritual Notebook**

**மே**
13 - அட்சய திருதியை
16 - சஷ்டி
21 - ஏகாதசி
22 - பிரதோஷம்
24 - பௌர்ணமி
28 - சங்கடஹர சதுர்த்தி
30 - சஷ்டி

**ஜூன்**
4 - ஏகாதசி
6 - பிரதோஷம்
6 - சிவராத்திரி
8 - அமாவாசை

## தமிழ் மந்திரம்

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும்; நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும்; நல்லனஎல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

# உன்னைச் சரணடைந்தேன்...

## வீட்டில் குபேர பூஜை செய்யும் முறை

...Rudhraa

சகல செல்வங்களையும் பெற, கடன்கள் அடைபட செய்ய வேண்டிய மிக எளிய குபேர யந்திர பூஜை.

| | | |
|---|---|---|
| 27 | 20 | 25 |
| 22 | 24 | 26 |
| 23 | 28 | 21 |



மேலே காணப்படும் யந்திரத்தை குபேர யந்திரம் என்கிறார்கள். இது குபேரன் தனக்கு ஏற்பட்ட சாபத்தினால் அனைத்தையும் இழந்து நின்றபோது லஷ்மி தேவியை வணங்கி பெற்றதாம். ஆகவே நாமும் அந்த எளிய குபேர பூஜையை செய்ய நமக்கு நல்லது கிட்டும்.

இந்த எளிய பூஜையை ஒருவருக்கு ஏற்பட்டுள்ள கடன்கள் தீரவும், செல்வம் பெருகவும் மட்டுமே செய்ய வேண்டும் என்பதல்ல. வருடத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறை அதை செய்ய வீட்டில் பணத் தட்டுப்பாடு இருக்காது என்பது உண்மை. இந்த பூஜைக்கு கஷ்டமான சொற்களைக் கொண்ட சம்ஸ்கிருத சுலோகம் கூற வேண்டும் என்பது முக்கியம் இல்லை. ஸ்லோகங்களே தெரியாதவர்களும் செய்யக் கூடிய மிக எளிய பூஜை இது. இதற்கு முக்கியம் நம்பிக்கை, செய்யும் முறை, செய்வதில் த்யானம் என்பவை மட்டுமே.

இந்த பூஜையைத் துவக்கும் முன் நமக்குத் தேவை ஒரே மாதிரியான நாணயங்கள். அவரவர் வசதிக்கு ஏற்ப நாணயங்களை எடுத்து வைத்துக் கொள்ளலாம். ஐந்து ரூபாய், ஒரு ரூபாய் என்ற மதிப்பு அதிகமான நாணயம் மட்டும் உபயோகிக்க வேண்டும் என்பது கட்டாயம் அல்ல. எட்டணா, நாலணா என எதுவாக இருந்தாலும் நம் உபயோகத்தில் உள்ள நாணையமாக அது இருக்க வேண்டும். அதுவே முக்கியம்.

நாம் பூஜையைத் துவக்கும் முன் முதலில் எந்த நாளில் பூஜை செய்ய உள்ளோம் என்பதை, அதாவது வெள்ளிக் கிழமையா அல்லது பௌர்ணமி தினத்திலா என்பதை முடிவு செய்து கொள்ள வேண்டும். அதன்படி நாம் முடிவு செய்துள்ள வெள்ளிக் கிழமைகளிலும் பௌர்ணமி போன்ற தினங்களிலும் காலை குளித்துவிட்டு கீழே உள்ளபடி கோலத்தை பூஜை அறையில்

கடவுளுக்கு முன்னால் போட வேண்டும்.

எண்களை வெள்ளை அரிசி மாவினாலும், கட்டங்களை நல்ல சிவப்பு குங்குமத்தினாலும், வார்த்தைகளை (ஸ்ரீ) மஞ்சள் பொடியினாலும் கீழே உள்ளபடிப் போட வேண்டும்.




பூஜை செய்பவரால் தொடர்ந்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் அவருடைய வீட்டில் உள்ள வாரிசுகள் அல்லது கணவர் அதைத் தொடர்ந்து செய்யலாம். ஆனால் அந்த நபர் அதே குடும்பத்தினராக இருக்க வேண்டும். ஒரு ரூபாய் நாணயம் உபயோகிக்க உள்ளீர்கள் என்றால் அனைத்திலும் ஒரு ரூபாய் நாணயம் உபயோகிக்க வேண்டும். அது போல எந்த நாணயம் பயன்படுத்துகிறீர்களோ அதே போன்ற நாணயத்தை ஒன்பது நாட்களும் பயன்படுத்த வேண்டும். அதாவது ஒரே மாதிரியான எண்பத்தியோரு நாணயத்தை முதலில் சேர்த்து வைத்துக் கொண்டே பூஜையை துவக்க வேண்டும்.

காலை குளித்துவிட்டு இந்த யந்திரத்தை பூஜை அறையில் மேலே கூறப்பட்டு உள்ளபடி தம் கைப்பட போட வேண்டும். ஒவ்வொரு கட்டத்திலும் தாம் ஏற்கனவே சேர்த்து வைத்துள்ள நாணயத்தை வைத்து தொடர்ந்து ஒன்பது தினங்கள், அதாவது வெள்ளிக் கிழமை என்றால் தொடர்ந்து ஒன்பது வெள்ளிக் கிழமை என பூஜிக்க வேண்டும். ஒன்பது வெள்ளிக் கிழமைகள் அல்லது ஒன்பது பௌர்ணமி என ஏதாவது குறிப்பிட்ட நாளில் துவக்கி, அதே தினங்களில் ஒன்பது நாட்கள் தொடர்ந்து பூஜை செய்ய வேண்டும். அந்த எண்களின் பக்கத்தில், எழுத்துக்கள் அழியாமல் இருக்குமாறு பார்த்துக் கொண்டு அந்த நாணயங்களை கட்டத்துக்குள் வைக்க வேண்டும். கீழே உள்ள மாதிரிப் படத்தைப் பார்க்கவும்.




குபேர யந்திரக் கோலம் போட்டு நாணயங்களையும் அதில் வைத்து முடித்ததும் யந்திரத்தின் முன் ஒரு சிறிய விளக்கு ஏற்றி வைத்து பூஜையை துவக்க வேண்டும்.

பூஜையில் கூற வேண்டிய மந்திரம் என்ன தெரியுமா? மிகவும் சுலபமாகக் கூறக் கூடிய சுலோகம் அது! 'தாயே, மகாலஷ்மி, என்னுடைய கடன்கள் விரைவில் தீர வேண்டும், தாயே மகாலஷ்மி எனக்கு வர வேண்டிய பணம் விரைவில் வர வேண்டும், தாயே மகாலஷ்மி எனக்கு நிறைய லாபம் வர வேண்டும், இப்படியாக எந்த பணப் பிரச்சனைக்காக வேண்டுகிறீர்களோ அதைக் கூறி விட்டு ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள நாணயத்தின் மீதும் பூக்களை போட வேண்டும். அப்படி பூக்களைப் போடும்போது எழுத்துக்கள் அழிந்து விடாமல் இருக்குமாறு கட்டத்தில் வைத்துள்ள நாணயத்தின் மீதே பூக்களை போட வேண்டும். படத்தைப் பார்க்கவும்.




அப்படி ஒன்பது முறை வேண்டிக்கொண்டு ஒவ்வொரு கட்டத்திலும் பூவை வைத்தப் பின் யந்திரத்துக்கு கற்பூரம் காட்டியப் பின் அந்தக் கோலத்தை வணங்கிவிட்டு பூஜையை முடித்து விடலாம். ஆக பூஜையில் நாம் கூற வேண்டியது மந்திரம் அல்ல, அது நம்முடைய பக்திபூர்வமான கோரிக்கைதான். வேறு சுலோகம் தெரியும் என்றால் கற்பூரம் காட்டும் முன்னால் அதை கூறிவிட்டு கற்பூரம் காட்டலாம். ஆனால் இந்த பூஜைக்கு வேறு சுலோகம் கூற வேண்டும் என்பது அவசியம் இல்லை. அப்படி சுலோகங்களைக் கூறினால் பலன் விரைவில் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை உண்டு. ஆனால் பூஜைக்கு தேவை நம்பிக்கையும் மேலே கூறப்பட்டு உள்ள த்யான மந்திரமும் மட்டுமே.

பூஜை முடிந்தப் பின் கோலத்தை உடனே அழித்து விடக்கூடாது. மறுநாள்தான் அதை ஒரு துணியினால் துடைத்து எடுக்க வேண்டும். மறுநாள் வரை அந்தக் கோலம் நாணயத்துடன் அப்படியே இருக்க வேண்டும். யந்திரத்தின் மீது நேரடியாக விளக்குமாற்றால் பெருக்கக் கூடாது. துணியினால் அதை அழித்தப் பின்னரே பெருக்கலாம். கோலத்தை துடைக்கும் முன்னால் அந்த ஒன்பது நாணயங்களையும் எடுத்து தனியாக வைத்து விட வேண்டும். ஒன்பது நாட்களும் உபயோகிக்கும் எண்பத்தியோரு நாணயங்களையும் பத்திரமாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அதை எந்தக் காரணத்தைக் கொண்டும் வேறு வகைக்கு செலவு செய்யக் கூடாது. சில்லறை வேண்டும் என்பதற்காக அதை மாற்றி வைத்துக் கொள்ளக் கூடாது. அது லஷ்மி தேவிக்கு தரப்படும் பூஜிக்கப்பட்ட காணிக்கை பணம் ஆகும்.

அதன் பின் அன்று மாலைக்குள்

Penmai.com

ஒன்பது சுமங்கலிகளுக்கு வெற்றிலை பாக்கு,பழம் தர வேண்டும். வீட்டிற்கு வரும்வகையில் சுமங்கலிகள் கிடைக்கவில்லை எனில் ஆலயத்திற்குச் சென்று அங்குள்ள ஒன்பது சுமங்கலிப் பெண்மணிகளுக்கோ அல்லது திருமணம் ஆகாத பெண்ணுக்கும் கூட வெற்றிலைப் பாக்கு, பழம் தரலாம். அவர்களும் கிடைக்கவில்லை என்றால் லஷ்மியின் சன்னதியில் அவர் முன் வைத்துவிட்டு வரலாம்.

பூஜை முடிந்த ஒன்பதாம் நாளன்று கண்டிப்பாக பூஜை செய்தவர் ஏதாவது ஒரு லஷ்மியின் ஆலயத்துக்குச் சென்று தம்முடைய அதே பிரச்சனையைக் கூறி அவளை அதைக் களையுமாறு வேண்டிக் கொண்டு வர வேண்டும். தனி லஷ்மி ஆலயம் இல்லை என்றாலும் கவலை இல்லை. வேறு எந்த ஆலயத்திற்காவதுச் சென்று லஷ்மியின் சன்னதிக்குச் சென்று வேண்டுதலை செய்த பின் ஒன்பது நாட்களும் பூஜை செய்து வைத்த எண்பத்தியோரு நாணயங்களையும் லஷ்மி தேவியின் உண்டியலில் போட வேண்டும். அதைப் போடும் முன்னால், தான் அவளுக்கு செலுத்தும் அந்தக் காணிக்கையைப் போல தனக்கும் பல மடங்கு செல்வம் தர வேண்டும் என லஷ்மி தேவியை மனமார வேண்டிக்கொள்ள வேண்டும். அவ்வளவுதான் பூஜை முடிந்தது. அடுத்த பூஜையை மீண்டும் எப்போது வேண்டுமானாலும் துவக்கலாம். சாதாரணமாக பூஜை செய்து முடியும் முன்னரே பலன் கிடைக்கும் என்கிறார்கள். ஆகவே வேண்டிய பலன் கிடைத்து விட்டாலும் ஒன்பது நாட்கள் அந்த பூஜையை செய்து முடிக்காமல் விடக்கூடாது. அதுவே பிரார்த்தனை செய்யும் முறை.

இந்த பூஜையை குறிப்பிட்ட காரணத்துக்காக மட்டுமே செய்ய வேண்டும் என்பதல்ல. வசதி உள்ளவர்கள் எந்த பிரச்சனைக்கும் அல்லாமல் தொடர்ந்து குறிப்பிட்ட தினத்தில் பக்தியுடன் செய்து வந்தால் வீட்டில் அமைதி நிலவும். பணப் பிரச்சனை இருக்காது. செல்வம் நிலைக்கும். அப்படிப் பொதுவாக செய்யும் பூஜையின்போது நாம் கூற வேண்டிய த்யான சுலோகம் "அம்மா, மகாலஷ்மித் தாயே, நீ எங்களுடைய வீட்டில் நிரந்தரமாகத் தங்கி எங்களைக் காத்தருள வேண்டும்" என்பதே.

Penmai.com



# குபேர மந்திரம்

ஓம் யக்ஷய குபேராய வைஸ்ரவணாய
தனதான்யாதிபதயே தனதான்ய
ஸம்ப்ருத்திம்மே தேகிதாபய ஸ்வாஹா.

# லக்ஷ்மி கடாக்ஷம் பெருக



...Kirthika99@Kaarkuzhali

வீட்டில் லக்ஷ்மி கடாக்ஷம் பெருக, செல்வம் பெருக, கீழ்கண்ட முறைகளை பின்பற்றலாம் என்பது முன்னோர் சொல்லக்

- அதிகாலை 5 மணிக்கு கொல்லைப்புற வாசலைத் திறந்து வைத்து அதன் பின்னரே தலைவாசலைத் திறக்க வேண்டும். அதிகாலை விழித்தவுடன் பசுவையாவது, தன் முகத்தையாவது, தன் வலது உள்ளங்கையையாவது முதலில் பார்த்துவிட வேண்டும்.

- செவ்வாய், வெள்ளியில் 5 முகம் கொண்ட குத்து விளக்கு ஏற்றி திருமகளை வழிபட வேண்டும்.

- வீட்டிற்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு குங்குமம், தண்ணீர் வழங்க வேண்டும். அவர்களுக்கு மஞ்சள் கிழங்கு கொடுப்பதால் பல ஜென்மங்களில் செய்த பாவங்கள் விலகி பாக்கியங்களும், பொருளும், சந்தோஷமும் பெருகும்.

- ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் மாலை குளித்து சத்யநாராயணரை துளசி, செண்பக மலர் இவைகளால் அர்ச்சித்து, பால், பாயஸம், கல்கண்டு, கனி வகை வைத்து வணங்கிய பின்னரே இரவு உணவு உண்ண வேண்டும்.

- வைரம், வெள்ளிப் பாத்திரங்கள் லக்ஷ்மி கடாட்சம் உள்ளவர்களுக்கேக் கிடைக்கும். ஒருவர் தனக்குச் சீராக அளிக்கப்பட்ட மேற்கூறியவற்றை தனது ஜீவித காலத்தில் விற்கவோ தன் பிள்ளைகளுக்கே கூட அன்பளிப்பாகவும் கொடுக்கக்கூடாது. தன் காலத்திற்குப் பின்னரே அவர்களுக்குச் சேரவேண்டும். முடிந்தால், அவர்களுக்கு புதியதாக வாங்கிக் கொடுக்கலாம்.



## தமிழ் மந்திரம்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

### Spiritual Notebook

**ஜூன்**

15 - சஷ்டி
19 - ஏகாதசி
21 - பிரதோஷம்
23 - பௌர்ணமி
26 - சங்கடஹர சதுர்த்தி

**ஜூலை**

3 - ஏகாதசி
5 - பிரதோஷம்
6 - சிவராத்திரி
7 - அமாவாசை

# Quran Verses

***...Nishahameetha***

Asalamualaikum (Va Rahmathullahi Barakkathaku)... May Peace Be Upon You...

Do not forget that waking up and seeing the truth at the moment of death does nobody any good. Allah has given us a clear warning about this:

Give from what We have provided for you before death comes to one of you and he says, "My Lord, if only You would give me a little more time so that I can give charity and be one of the righteous!" Allah will not give anyone more time, once their time has come. Allah is aware of what you do.

(Surat al-Munafiqun: 10-11)



Penmai.com



It was narrated that in the days that Musa (Alahi salaam) wandered with Bani Israel in the desert an intense drought befell them. Together, they raised their hands towards the heavens praying for the blessed rain to come. Then, to the astonishment of Musa (Alahi salaam) and all those watching, the few scattered clouds that were in the sky vanished, the heat poured down and the drought intensified.

It was revealed to Musa that there was a sinner amongst the tribe of Bani Israel whom had disobeyed Allah (Subhanahu wa ta'ala) for more than forty years of his life. "Let him separate himself from the congregation," Allah (Subhanahu wa ta'ala) told Musa (Alahi salaam). "Only then shall I shower you all with rain."

Musa (Alahi salaam) then called out to the throngs of humanity, "There is a person amongst us who has disobeyed Allah for forty years. Let him separate himself from the congregation and only then shall we be rescued from the drought." That man, waited, looking left and right, hoping that someone else would step forward, but no one did. Sweat poured forth from his brow and he knew that he was the one.

The man knew that if he stayed amongst the congregation all would die of thirst and that if he stepped forward he would be humiliated for all eternity.

He raised his hands with a sincerity he had never known before, with a humility he had never tasted, and as tears poured down on both cheeks he said: "O Allah, have mercy on me! O Allah, hide my sins! O Allah, forgive me!"

As Musa (Alahi salaam) and the people of Bani Israel awaited for the sinner to step forward, the clouds hugged the sky and the rain poured. Musa (Alahi salaam) asked Allah (Subhanahu wa ta'ala), "O Allah, you blessed us with rain even though the sinner did not come forward." And Allah (Subhanahu wa ta'ala) replied, "O Musa, it is for the repentance of that very person that I blessed all of Bani Israel with water."

Musa (Alahi salaam) wanted to know who that blessed man was and asked, "Show him to me O Allah!" Allah (Subhanahu wa ta'ala) replied, "O Musa, I hid his sins for forty years, do you think that after his repentance I shall expose him?"

Penmai.com

...Sumathisrini

# வளங்களை அள்ளித்தரும் ஆடிப்பெருக்கு!



தமிழகத்திலுள்ள நீர் நிலைகளில் ஆடி மாதத்தில் நீர் வரத்து அதிகமாகி பெருக்கெடுத்து ஓடும். நதிகளும் நீர் நிரம்பி காணப்படும். பயிர் செழிக்க வளம் அருளும் அன்னை காவிரிக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, ஆடி 18-ல் பதினெட்டாம் பெருக்கு விழா, நதிக்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் கொண்டாடப்படுகிறது. இதனை பதினெட்டாம் பெருக்கு என்றும் கூறுவார்கள். தென்மேற்கு பருவத்தில் ஆற்றின் நீர்பிடி இடங்களில் பெய்த மழையினால் ஆறுகளில் புதுப்புனல் பொங்கிவரும். இதனையே ஆற்றுப்பெருக்கு எனக்கூறுவர். உழவர்கள் இந்நாளில் நம்பிக்கையுடன் பட்டம் பார்த்து விதை விதைப்பர்.

"ஆடியிலே பெருக்கெடுத்து ஆடி வரும் காவேரி வாடியம்மா எங்களுக்கு வழித்துணையாக, எம்மை வாழவைக்க வேண்டுமம்மா சுமங்கலியாக" என்று காவிரி நதியை அன்னையாக பாவித்து பாடினார் கவிஞர் கண்ணதாசன். வீடுகளில் விரதமிருந்து பெண்கள், முளைப்பாரியை கைகளில் ஏந்திக் கொண்டு காவிரி ஆற்றுக்கு வருவார்கள். எல்லா வளமும் பெருக வேண்டும் என்று இளம்பெண்கள் பூஜை செய்து முளைப்பாரியை காவிரியில் விட்டு விட்டு கோவிலுக்கு சென்று வழிபடுவார்கள். விவசாயம் செழிக்க வேண்டி விவசாயிகள் காவிரி அன்னைக்கு மலர்தூவி வணங்குவார்கள்.

அது மட்டும் அல்லாமல் தங்கள் வீட்டில் பலவிதமான கலப்பு சாதங்கள் (தேங்காய் சாதம், சர்க்கரைப் பொங்கல், எலுமிச்சம்பழம் சாதம், தக்காளி சாதம், தயிர் சாதம்) செய்து அதை ஏதாவது ஆற்றங்கரையில் வைத்து குடும்பத்துடனும், நண்பர்களுடனும் சேர்ந்து குதூகலமாக உணவை சாப்பிடுவார்கள். காவிரியாற்றின் கரையில் திருச்சியில் இவ்விழா மிகவும் புகழ்பெற்றது.

**வீட்டிலேயே செய்யலாம் ஆடிப்பெருக்கு பூஜை:** காவிரிக்கரையோரம் உள்ளவர்கள் மட்டுமே ஆடிப்பெருக்கைக் கொண்டாட வேண்டும் என்பதில்லை. ஆடிப்பெருக்கு பூஜையை நம் வீட்டிலும் எளிய முறையில் செய்யலாம். ஒரு செம்பில் அரைத்த மஞ்சளை சிறிதளவு போடவேண்டும். நிறைகுடத்திலிருந்து அந்த செம்பில் நீர் எடுத்ததும், மஞ்சள் கரைந்துவிடும். திருவிளக்கேற்றி அந்த நீரை விளக்கின் முன் வைக்க வேண்டும். தண்ணீரில் உதிரிப் பூக்களைப் போட வேண்டும். கற்பூர ஆரத்தி அல்லது நெய்தீபம் காட்டி கங்கை, யமுனை, நர்மதை, காவிரி, வைகை உள்ளிட்ட புண்ணிய தீர்த்தங்களை மனதில் நினைத்து, முன்னொரு காலத்தில் எங்களை மூதாதையர் உங்களை புனிதமாகக் கருதி வழிபட்டதுபோல் எங்களுக்கும் அத்தகைய மனநிலையைத் தாருங்கள் என்று வேண்டுங்கள்.

காவிரியையும் தாமிரபரணியையும் நமக்களித்த அகத்திய முனிவரை மனதார வணங்குங்கள். பூஜை முடிந்ததும் செம்பிலுள்ள நீரைச் செடி, கொடிகளில் ஊற்றி விட வேண்டும். அன்று சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் செல்வம் கொழிக்கும் என்பது நம்பிக்கை.

**காவேரிக்கு பெருமாள் தரும் சீர்வரிசை:** இவ்வூருக்கு சகோதரர்கள் தங்கள் சகோதரிகளையும், மைத்துனர்களையும் வீட்டிற்கு வரவழைத்து சீர் கொடுக்கும் வழக்கம் இன்றும் இருக்கிறது. தம்பதியரை இங்குள்ள ஆதிமாரியம்மன் கோயிலுக்கும் அழைத்துச் செல்வர். இவள் சமயபுரம் மாரியம்மனின் சகோதரியாக கருதப்படுகிறாள். சாதாரண மக்களே, இவ்வாறு சீர்கொடுக்கும் போது, இங்கே கோயில் கொண்டிருக்கும் ரங்கநாதர் சும்மா இருப்பாரா! தன் தங்கை காவரிக்கு சீர் கொடுக்க அவர் அம்மா மண்டபப் படித்துறைக்கு எழுந்தருள்வார். அங்கு சுவாமிக்கு திருமஞ்சனம் நடக்கும். மாலை வரை பெருமாள் அங்கு வீற்றிருப்பார்.

பெருமாளின் சீதனமாக தாலிப்பொட்டு, பட்டு மற்றும் மங்களப் பொருட்கள் ஆற்றில் விடப்படும். காவிரிக்கு பெருமாள் சீர்வரிசை அளிக்கும் இக்காட்சியைக் கண்டால் கோடி புண்ணியம் கிடைக்கும் என்பது ஐதீகம்.

நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டத்தில் ஆடிப்பெருக்கு நாளில் கொல்லிமலை சென்று அங்குள்ள ஆகாயகங்கை நீர்வீழ்ச்சியில் நீராடி அரப்பளிசுவரரை தொழுவது வழக்கம். ஆடிப்பெருக்கு நாளில் தமிழக அரசு போக்குவரத்து கழகத்தினர் நாமக்கல், சேலம் மற்றும் ராசிபுரத்தில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்குவது வழக்கம்.

**காவிரியில் ராமன்:** ராமபிரான் அசுரர்களை வதம் செய்த பாவம் நீங்க, வசிஷ்ட முனிவரிடம் வழி கேட்டார். வசிஷ்டர், அறுபத்தாறு கோடி தீர்த்தங்களைத் தன்னிடம் கொண்ட காவிரிக்கு, தட்சிண கங்கை என்று பெயர். அந்நதியில் நீராடினால் உன் பாவ உணர்வுகள் நீங்கும் என்று கூறினார். அதன்படி ராமச்சந்திரன் காவிரியில் நீராடிய நாள் ஆடிப்பெருக்கு என்று ஒரு புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

**மங்களச் சரடு:** புதுமணத் தம்பதிகள் குடும்பத்தினருடன் வந்து படையலிட்டு சாமி கும்பிடுவார்கள். அதேபோல மணமாகாத பெண்களும் நல்ல கணவர் கிடைக்க வேண்டும் என்று வேண்டி பனை ஓலையில் செய்யப்பட்ட தோடுகளை வைத்தும், கருகமணி, காப்பரிசி வைத்தும் வணங்குவார்கள். பவானி கூடுதுறை, திருச்சி, கரூர், ஈரோடு, பவானி உள்ளிட்ட காவிரிப் பகுதிகளில் உற்சாகத்துடன் ஆடிப்பெருக்கு விழாவை மக்கள்



கொண்டாடுவார்கள். குழந்தை செல்வம், நீடித்த ஆயுள், வாழ்வில் சுபிட்சம் பெற ஆடிப்பெருக்கன்று பெண்கள் ஆற்றங்கரைக்குச் சென்று சிறப்பு வழிபாடு நடத்துவார்கள். சுமங்கலிப் பெண்கள் மாங்கல்ய பூஜை செய்து தாலிச்சரடை மாற்றிக் கொள்வார்கள். கன்னிப்பெண்கள் தங்களுக்கு விரைவில் திருமணம் நடக்க வேண்டி சிறப்பு பூஜைகள் செய்து கைகளில் மஞ்சள் கயிறுகளை கட்டிக் கொள்வார்கள்.

**அம்மனுக்குரிய மாதம்:** தமிழ் மாதங்களில் ஒன்றான `ஆடி' அம்மனுக்குரிய மாதமாக போற்றப்படுகிறது. பூமாதேவி அம்மனாக பூமியில் அவதரித்தது ஆடிமாதத்தில் என்பதால் இம்மாதத்தில் வரும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகள் அதிகம் முக்கியத்துவம் பெறுகின்றன.

தை மாதம் முதல் ஆனி மாதம் வரை பூமத்திய ரேகைக்கு வடக்கில் பயணம் செய்து வந்த சூரியன் அடுத்த ஆறு மாத காலத்திற்கு (ஆடி முதல் மார்கழி வரை) தன் பயணத்தை பூமத்திய ரேகைக்கு தெற்கில் தொடங்குகிறான். இக்காலம் தட்சிணாயண புண்ணிய காலம் என்று அழைக்கப்படுகிறது. இறைவனை அடைய அன்னை பராசக்தி கடும் தவம் இருந்தது ஆடி மாதத்தில் தான். இதை நினைவு கூரும் விதத்தில் `ஆடித்தபசு' நிகழ்ச்சி நெல்லை மாவட்டம் சங்கரன் கோவிலில் இன்றும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

முற்காலத்தில் அரியும், சிவனும் ஒன்று என்பதை உலகிற்கு உணர்த்துவதற்காக பார்வதி தேவி, புன்னை வனத்தில் தவம் இருந்தார். அவரது தவத்தைப் பாராட்டி சிவனும், விஷ்ணுவும் ஆடி மாத பவுர்ணமியன்று சங்கர நாராயணராக காட்சி அளித்தனர். அம்பிகை தவம் இருந்த இடம் சங்கரன் கோவில் ஆகும். இது திருநெல்வேலியில் இருந்து சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு சுவாமி சங்கரலிங்க மூர்த்தியாக எழுந்தருளி அம்பிகையை மணந்து கொண்டார். அம்மன் தவம் இருந்து பலனை அடைந்ததால் இங்கு பக்தர்களின் பிரார்த்தனைகள் நிறைவேறி நலன் பெறுகின்றனர். பார்வதி தேவியின் தவத்தை மெச்சிய பரமசிவன் ஆடிமாதம் அம்மன் மாதமாக இருக்க வேண்டும் என்று வரம் கொடுத்தார். காற்றும், மழையும் ஆடி மாதத்தில் அதிகமாக இருக்கும். காற்றை காளியும், மழையை மாரியம்மனும் கட்டுப்படுத்துகின்றனர். இதனால் அம்மன் அருள் வேண்டி ஆடி வெள்ளிக்கிழமைகளில் அம்பிகை வழிபாடு நடைபெறுகிறது.

**நகை வாங்க நல்ல நாள்:** அட்சய திரிதியையை விட, ஆடிப்பெருக்கு நன்னாள் நகை வாங்க உயர்ந்த நன்னாளாகக் கருதப்படுகிறது. இந்நாளில் நகை மட்டுமின்றி பிற பொருட்களும் வாங்கலாம். நாம் செய்கின்ற நற்செயல்களால், புண்ணியம் எப்படி பெருகுகிறதோ, அதுபோல் இந்நாளில் துவங்கும் சேமிப்பும் பல மடங்காய் பெருகும் என்பர். ஆடிமாதத்தில் பொதுவாக புதுத்தொழில் துவங்குவதில்லை என்பர். ஆனால், ஆடிப்பெருக்கு மட்டும் விதிவிலக்காகும்.

## Spiritual Notebook

**ஜூலை**

14 - சஷ்டி
19 - ஏகாதசி
20 - பிரதோஷம்
22 - பௌர்ணமி
25 - சங்கடஹர சதுர்த்தி

**ஆகஸ்ட்**

2 - ஏகாதசி
3 - ஆடிப் பண்டிகை
4 - பிரதோஷம்
5 - சிவராத்திரி
6 - அமாவாசை
9 - ரம்ஜான்

Penmai.com

# ஆடிப்பூர நாயகி ஆண்டாளுக்கு ஆராதனை

...Brindhapsyh



பெருமாளின் பக்தரான பெரியாழ்வார் தமக்கு
பூமாதேவியே புதல்வியாக அவதரித்த நன்நாளாம்
ஆடிமாதம் பூரநட்சத்திரம் கூடிய இந்நாளாம்
குழவி இல்லா ஆழ்வார் துளசி செடியடியில்
குழந்தையாக பூதேவியை கண்டெடுத்த பெருநாளாம்
ஆடிப்பூரம் எனும் இந்நன்நாளாம்

அள்ளி எடுத்திட்ட ஆழ்வாரும் அருமைபெயர் இட்டாரே
பூமாலை எனும்பொருள்பட கோதைஎன விளித்திட்டாரே
கண்ணன் கதைகளை கூறிக்கூறி வளர்த்திட்டாரே
கன்னிஇவளோ குழலனையே மனதில் வரித்திட்டாளே

பார்த்தசாரதியின் பரம பக்தையானாளே
பாலும் பழமும் வெறுத்திட்டாளே
பாவை நோம்பு எடுத்திட்டாளே
பாருக்கு திருப்பாவையை அளித்திட்டாளே

அரங்கனுக்கு தந்தை மாலை தொடுக்க - அதை
இரகசியமாய் தினமும் கோதை அணிந்து ரசிக்க- ஒரு நாள்
மாலையில் முடிகண்டு, மகளின் செயல் கண்டு மருண்டு
வேறொரு மாலையை அரங்கனுக்கு ஆழ்வார் சாற்றிட

மாதிவள் தோள் தழுவிய மாலையே தம்மனங்கவர்ந்த மாலையென
மாதவன் அருளிட, அடியவரும் பணிந்திட - அன்றுமுதல்
சூடிக்கொடுத்த சுடர்க்கொடியானாளே கோதையவள்
அரங்கனுக்கு நாயகியானாளே - திருவரங்கத்திலே

இன்று ஆடிப்பூரம் - அந்த அழகி
ஆண்டாளின் புகழைப் பாடுவோமே
அரங்கனின் அருளை பெறுவோமே!

## தமிழ் மந்திரம்

வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து
நாரண நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ நான்



# ரமலான் நோன்பு

...Nisha Hameetha

**ஈகைப் பெருநாளாம் ரம்ஜான் பண்டிகை**
அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்தஹு...

ஒவ்வொரு வருடத்திலும் அல்லாஹு தஆலா பல விஷேச தினங்களை ஏற்படுத்தி அவற்றில் செய்யும் நல்அமல்களுக்கு பன் மடங்கு நன்மைகளை தருகின்றான். அப்படிப்பட்ட நாட்களைக் கொண்டதுதான் ரமலான் மாதம் ஆகும். இதில் செய்யும் நன்மைகளுக்கு அதிக கூலிகள் கொடுக்கப்படுகின்றன. மற்ற மாதங்களில் செய்யும் அமல்களைவிட இம்மாதத்தில் நபி (ஸல்) அவர்கள் அதிகமான அமல்களைச் செய்வார்கள். இம்மாதத்தில் அல்லாஹ்வின் அருள் இறங்குகின்றது. நரகத்திலிருந்து விடுதலை கிடைக்கின்றது. அல்லாஹ் பாவங்களை மன்னிக்கின்றான். ரமலான் மாதத்தின் முதல் இரவிலேயே ஷைத்தான்களுக்கும் கெட்ட ஜீவன்களுக்கும் விலங்கிடப்படும். நரகத்தின் கதவுகள் மூடப்படும். சுவர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படும்.

உலக இஸ்லாமிய மக்கள் அனைவருக்கும் வழிகாட்டக் கூடிய அருள்மறை நூலான குர்ஆன் அருளப்பட்ட மாதமான ரமலான் மாதத்தில் தான். மனித குலத்திற்கு இறைவன் செய்த இந்த மகத்தான உதவிக்கு நன்றி செலுத்துவதற்காகவே இந்த மாதம் முழுவதிலும் நாங்கள் நோன்பு நோற்கிறோம். முஸ்லிம்களின் 5 கடமைகளான கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத் (தானம் செய்தல்), ஹஜ். இவற்றில் தொழுகைதான் மிகவும் முக்கிய கடமையாக திகழ்கிறது இதற்கு அடுத்த இடத்தை நோன்பு எனப்படும் விரதம் இருத்தல் கடமை பெற்றுள்ளது.

ரமலான் என அழைக்கப்படும் நோன்பு காலம் முஸ்லிம்களின் வசந்த காலம் என்றே கூறலாம். அந்த அளவிற்கு ரமலானின் மகத்துவத்தில் நன்மைகள் பொதிந்து கிடக்கின்றன. முஸ்லிம்களின் மாதங்களான 12 மாதங்களில் ரமலான் மாதத்திற்குதான் சிறப்பு தன்மைகள் பல உள்ளன. ஈதுல் பித்ர் என அழைக்கப்படும் ஈகைத் திருநாள், ரமலான் மாதத்தின் இறுதியில் கொண்டாடப்படுகிறது. ரமலான் வந்துவிட்டால், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தல் என்பதும், இல்லாதோருக்கு இருப்போர் உதவி செய்தல் என்பதும் அதிகரித்துவிடும்.

ரமலான் நோன்பை முதல் பிறை கண்ட பின்னர் தான் நோன்பை தொடங்குவோம். நோன்பு இருக்கும் 30 நாட்களும் சூரியன் உதிப்பதற்கு முன்பாக எழுந்து உணவு உண்ண வேண்டும். இந்த நேரத்தை சஹர் உடைய நேரம் என்று அழைக்கின்றோம். சூரியன் உதிக்கும் முன்பாக உணவு உண்ட பின்னர், சூரியன் மறையும் வரை தண்ணீர் கூட பருகக் கூடாது. சூரியன் மறைந்த பின்னரே நோன்பு திறக்க வேண்டும். நோன்பு திறத்தலை இப்தார் என்று அழைக்கின்றோம். நோன்பு திறக்கும்போது சரியான நேரத்தில் அதாவது சூரியன் அஸ்தமன நேரத்தை கணக்கில் கொண்டு நோன்பு திறக்க வேண்டும். தாமதம் கூடாது என்று சொல்லப்படுகிறது.

ஊர்விட்டு ஊர் செல்லும் பயணிகள், நோயாளிகளை தவிர அனைவருக்கும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. 7 வயது குழந்தைகளுக்கும் நோன்பு பிடிப்பதற்கு அனுமதி உண்டு. சிறுவர் - சிறுமிகள் நோன்பின்போது சோர்வடைந்தால், அந்த நேரத்தில் அவர்கள் நோன்பை திறந்து கொள்ளலாம். நோன்பு இருக்கும் நேரத்தில் ஐங்கால தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாகும். நோன்பு இருப்பவர்கள் ஐம்புலன்களையும் அடக்கி ஆள வேண்டும். புறம் பேசுதல், பொய் சொல்லுதல், பிறருக்கு துன்பம் விளைவித்தல் கூடாது. ஏழைகளின் பசியை உணரும் வகையில் நோன்பிருந்து, ரம்ஜான் கொண்டாட்டத்திற்கு முன்பு ஃபித்ரா எனும் தர்மத்தையும், ஜகாத்தையும் நபி (ஸல்) அவர்கள் கடமையாக்கியதன் மூலம், ஏழைகளும் பயன்பெறுகிறார்கள், அவர்களும் மகிழ்ச்சியாக ஈகைப் பெருநாளைக் கொண்டாடுவார்கள்.

ரமலான் மாதத்தில் 30 நாட்கள் நோன்பு நோற்று அடுத்த மாதமான ஷவ்வால் மாதத்தின் பிறை தென்பட்டதும் மறுநாளை ஈகைப் பெருநாளாம் ரம்ஜான் பண்டிகையை கொண்டாடுவோம்.

அதிகாலையிலேயே எழுந்து, குளித்து முடித்து, புத்தாடை அணிந்து, இறைவனை தொழுது முடித்து, உற்றார், உறவினர், நண்பர்களுக்கு வாழ்த்துக்களை சொல்லி, இனிப்புகளை வழங்கி எங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவோம். இவ்வருடம் ரமலான் மாதம் ஆங்கில மாதத்தில் ஜூலை அதாவது இம்மாதம் 10ஆம் தொடங்குகிறது.

பெண்மையில் உள்ள அனைத்து இஸ்லாமிய நண்பர்கள் மற்றும் சகோதர, சகோதரிகளுக்கு என் இதயம் கனிந்த ஈகைப் பெருநாளாம் ரம்ஜான் நல்வாழ்த்துக்கள். ஈத் முபாரக்!!!

Online Tamil Book Store / Cds DVDs

MY ANGADI .com










## Tamil & English Books

- Educational Books
- Parenting Books
- Pregnancy Books
- Stories & Novels
- Literature Books
- Historical Novels
- Competitive Exams Books
- Motivational Books
- Favourite Author's Books & Most Popular Books

**Buy Now »**

**@ one place**
**www.MyAngadi.com**

**Free shipping across India for purchase above Rs. 500***



# வற்றாத வளம் தரும் வரலக்ஷ்மி விரதம்

...Sumathisrini

வரங்களை அள்ளித் தரும் லக்ஷ்மியைக் குறித்து செய்யப்படும் விரதம் தான் வரலக்ஷ்மி விரதம்.

ஆவணி மாதம் பௌர்ணமிக்கு முன்பு வரும் வெள்ளிக்கிழமையன்று இந்த விரதம் வருகிறது. செல்வம் இல்லை என்றால் இந்த உலகில் எதுவும் நடக்காது. நம்முடைய பெண் தெய்வங்கள் தான் கல்விக்கும், செல்வத்திற்கும், வீரத்திற்கும் உரியவர்களாக விளங்குகிறார்கள். கல்விக்கு அதிபதி, நாமகளான சரஸ்வதி. செல்வத்திற்கு அதிபதி அலைமகளான லக்ஷ்மிதேவி. வீரத்திற்கு அதிபதி பார்வதி தேவி. இவளே துர்காதேவியும் ஆவாள்.



அருளும் - பொருளும் நமக்குத் தேவை. “அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு” என்கிறார் திருவள்ளுவர். அதனால் பொருளுக்குரிய லக்ஷ்மி தேவியை நாம் பிடித்துக் கொள்ள வேண்டும்.

**விரதம் மேற்கொள்ளும் முறை:**
முதல்நாளே, வீட்டை நன்றாக மெழுகித் துடைத்துக் கோலம் போட வேண்டும். வீட்டுக் கூடத்தில், சுவர் ஓரமாக ஒரு சுத்தமான பலகையை வைத்து, அதன் மேலும் கோலம் போட வேண்டும். ஒரு சுத்தமான செம்பின் மேல் மஞ்சள் தடவி, அதனுள் அரிசி, பருப்பு இரண்டையும் கலந்து கால்பங்கு நிரப்ப வேண்டும். அதனுள் கருகமணி, வளையல், சின்ன சீப்பு, குட்டிக்கண்ணாடி, எலுமிச்சம்பழம், மஞ்சள், குங்குமம் நிரப்பிய குங்குமச்சிமிழ், சில நாணயங்கள் (வெள்ளி, தங்கக்காசு இருந்தால் அதையும் போடலாம்), வெற்றிலை, பாக்கு அனைத்தையும் போட வேண்டும்.

கலசத்து மேல் மாவிலை செருகி, மஞ்சள் குங்குமம் பூசிய தேங்காயை அதற்கு நடுவில் வைக்க வேண்டும். மஞ்சள் ஒன்றை மஞ்சள் சரடில் கட்டி, அதைக் கலசத்தில் கட்ட வேண்டும். பிறகு அம்மன் முகத்தை (படமாகக் கிடைக்கும்) தேங்காயில் பதித்து, கருகமணி, பொட்டு, மாலை சார்த்த வேண்டும். கலசத்துக்கு வெண்பட்டு (உங்கள் வசதிக்கேற்ப சாதாரண ரவிக்கைத் துண்டு கூடப் போதும்) சாத்தி, பூமாலை போட வேண்டும். இந்தக் கலசத்தில் மஹாலட்சுமி எழுந்தருள்வதாக ஐதீகம். அதனால், கால்படாத இடத்தில் ஓரமாக நாம் வைத்திருக்கும் பலகை மேல், இந்தக் கலசத்தை வைத்து, அதன் முன்னால் விளக்கேற்றி, கற்பூரம் காட்டி, வெண்பொங்கல் நைவேத்தியம் செய்ய வேண்டும்.

மறுநாள் விரதத்தன்று காலையில் எழுந்து மஞ்சள் பூசி குளித்து, பூஜையறையில் சிறிய மண்டபம் மாதிரி அமைக்க

வேண்டும். ஒரு ஸ்டூல் போட்டு, அதன் கால்களில் பூ சுற்றி மேலே கோலம் போட்டு அலங்கரித்தால் கூடப் போதும். அதன் மேல், ஒரு நுனி வாழை இலையைப் போட்டு அதில் அரிசியைப் பரப்பி வைக்க வேண்டும்.



பிறகு நல்ல நேரத்தில் இரண்டு சுமங்கலி பெண்கள் சேர்ந்து, கலசத்தைப் பலகையோடு தூக்கி வந்து, அரிசி பரப்பிய இலையின் நடுவில் வைக்க வேண்டும். பூ, மாலை சாத்தி, விளக்கேற்ற வேண்டும். மெல்லிசான நூலில் மஞ்சள் தடவி, நோன்புச் சரடு தயாரிக்க வேண்டும். ஒவ்வொரு சரடிலும் ஒன்பது முடிச்சுகளைப் போட்டு அதன் நடுவில் ஒரு பூவையும் முடிந்து வைக்க வேண்டும்.

இந்தச் சரடுகளையும் கலசத்துடன் வைத்து, "என் வீட்டுக்கு வந்திருக்கும் வரலக்ஷ்மியே, என்றைக்கும் நீங்காமல் இருந்து வரம் கொடு தாயே" என்று வேண்டிக் கொண்டு, தீபாராதனை காட்ட வேண்டும். இனிப்புக் கொழுக்கட்டை (அடை) செய்து நைவேத்தியம் செய்ய வேண்டும்.

பிறகு, அம்மனைக் கும்பிட்டு, நோன்புச் சரடை எடுத்து வலது மணிக்கட்டில் கட்டிக் கொள்ள வேண்டும் (சுமங்கலிகள், கணவர் கையால் கழுத்திலும் கட்டிக் கொள்ளலாம்). இதற்குப் பிறகுதான் சாப்பிட வேண்டும். ரொம்பவும் வயதானவர்கள் கொஞ்சம் பால், பழம் சாப்பிடுவதில் தவறில்லை. அன்று முழுவதும் முழு மனதுடன் மஹாலக்ஷ்மியை நினைத்து லக்ஷ்மி ஸ்லோகம் சொல்ல வேண்டும். மற்ற சுமங்கலிப் பெண்களை அழைத்து பிரசாதத்தை அனைவருக்கும் தர வேண்டும்.

விரதத்தன்று மாலை (அல்லது) மறுநாள் காலை அம்மனுக்கு பூஜை செய்து, பால் நைவேத்தியம் செய்து, விரதத்தை நிறைவு செய்யலாம். பிறகு இந்தக் கலசத்துக்குக் கீழே பரப்பியிருந்த அரிசியை ஒரு துணியில் முடிந்து அரிசிப் பானையில் போட்டு வைக்க, அன்ன பூரணியுடைய அருள் என்றும் நிறைந்திருக்கும். கலசத்தில் வைத்த தேங்காயை, மறு வாரத்தில் வரும் வெள்ளிக்கிழமையன்று உடைத்து பாயசம் செய்து, சுவாமிக்கு பூஜை செய்து நைவேத்தியம் செய்ய வேண்டும். பிறகு, இந்தப் பிரசாதத்தை மற்ற சுமங்கலிப் பெண்களுக்கும் தர வேண்டும்.

சுமங்கலியாக நீண்டகாலம் வாழ்வதென்பது பெறுதற்கரிய பேறாகும். இந்த விரதத்தை அனுஷ்டிப்பதனால், கணவன் ஆரோக்கியத்தோடு நீண்ட நாள் உயிர் வாழும் பாக்கியம் கிடைக்கப் பெறுவதுடன், இல்லத்தில் செல்வம் கொழித்துக் களித்தோங்கும்.



கணவன் நீண்ட ஆயுளுடன் வாழ்வதால் மனைவியர் தீர்க்க சுமங்கலியாக வாழும் பாக்கியம் கிடைக்கப் பெறுகின்றனர். அதனால் இந்த விரதத்தை சுமங்கலிப் பெண்கள் எல்லோரும் விரும்பிப் அனுஷ்டிக்கின்றனர்.

கன்னிப் பெண்கள் இவ்விரதத்தை மேற்கொள்வதனால் சிறந்த கணவன் கிடைக்கப் பெற்று சிறப்பான குடும்ப வாழ்க்கை அமையப் பெறுவர் என ஆகமங்கள் கூறுகின்றன.

# ஜெயம் தரும் கிருஷ்ண ஜெயந்தி

...Sumathisrini

நம் பாரத நாட்டில் பல நூற்றாண்டுகளாக கலாச்சாரம், பண்பாட்டை பேணிக் காக்கும் வகையில் பல உற்சவங்கள், பண்டிகைகள், விரதங்கள், திருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இதன்மூலம் நம்மை வாழ வைக்கும் இறைவனுக்கும், இயற்கை சக்திகளுக்கும் நன்றியையும் பிரார்த்தனையும் சமர்ப்பிக்கின்றனர்.

அந்த வகையில் அதர்மத்தை அழிக்க பகவான் கிருஷ்ணன் பூலோகத்தில் வந்து பிறந்த நாளே கிருஷ்ண ஜெயந்தியாகக் கொண்டாடப்படுகிறது. ஆவணி மாதம் தேய்பிறை அஷ்டமியன்று, ரோகிணி நட்சத்திரத்தில் நள்ளிரவு நேரத்தில் சிறைக்குள் வசுதேவர்-தேவகிக்கு மகனாகக் கிருஷ்ணன் அவதரித்தார். பிறந்தபோது சங்கு, சக்கரம், தாமரை, கதாயுதம் ஏந்திய கைகளுடன் கிருஷ்ணன் காட்சியளித்தான்.

கிருஷ்ண அவதாரம் இந்துக்களுக்கு மிக முக்கியமானதாகும். ஏனெனில் போர்க்களத்தில் அர்ஜுனனுக்கு, கிருஷ்ணர் கொடுக்கும் உபதேசங்களே இந்துக்களின் புனித நூலான பகவத் கீதையானது. பகவத் கீதையில் அர்ச்சுனனுக்கு அருளிய உபதேசங்களுடன் இந்திய தத்துவ சாரங்களின் அடிப்படைகளை ஒன்று கலந்து கொடுக்கப்பட்டுள்ள நூல் பகவத் கீதையாகும்.



பகவான் கிருஷ்ணர் குழந்தை அவதாரமாக நம் வீட்டுக்கு வந்து அருள்பாலிப்பதே கோகுலாஷ்டமி பண்டிகையின் முக்கிய அம்சமும், நோக்கமும் ஆகும். அதனால்தான் கிருஷ்ண ஜெயந்தியன்று வீட்டை கழுவி சுத்தம் செய்து, அரிசி மாவால் கோலமிட்டு, மாவிலை தோரணங்களால் அழகுபடுத்துவர். வாசலில் தொடங்கி பூஜை அறை வரை குழந்தையின் கால் தடங்களை அரிசி மாவால் பதிப்பார்கள். ஆலிலை கிருஷ்ணன் தனது பிஞ்சு பாதங்களை அடிமேல் அடி வைத்து வீட்டுக்குள் தத்தித்தத்தி நடந்து வருவதாக ஐதீகம். அன்று பல கோவில்களில் உறியடித் திருவிழா நடைபெறும்.

கிருஷ்ணனின் படத்தை அலங்கரித்து, மாலைகளும், மலர்களும் சூடி அவனுக்கு பிடித்தமான வெண்ணெய், அவல், இனிப்பு வகைகள், சீடை, முறுக்கு, தேன்குழல், பொங்கல் போன்ற நைவேத்யங்கள் படைத்து அவரவர் குடும்ப வழக்கப்படி விரதம் இருந்து பூஜைகள் செய்து வழிபடுவர். அந்த நீல வண்ணக் கண்ணன் நம் இல்லம் வந்து அருள்புரிய மனதார வேண்டி பிரார்த்தனை செய்கின்றோம்.

கிருஷ்ண ஜெயந்தி வழிபாட்டை வீட்டில் குழந்தைகளுடன் கொண்டாடும் போது கிருஷ்ணரின் கதைகளைச் சொல்லி வழிபட்டால் குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்குவர். ராஜதந்திரம் அதிகரிக்கும், அரசியல் சாணக்கியத் தன்மை அதிகரிக்கும். பாடங்களை திட்டமிட்டு படிக்கும் புத்திசாலித்தனம் கூடும். எளிமையாகவும், சுருக்கமாகவும், புரிந்து கொள்ளும் ஆற்றல் அதிகரிக்கும்.

குழந்தை பாக்யம் இல்லாதவர்கள், புதுமணத் தம்பதியர், கருவுற்றிருக்கும் தாய்மார்கள் தங்களுக்கு புத்தி, யுக்தி, அறிவு ஆற்றல், ஆயுள், ஆரோக்யம் மிக்க சற்புத்திர பாக்யத்தை அருள வேண்டும் என்று அந்த ஆலிலைக் கண்ணனிடம் நெஞ்சுருகி பிரார்த்தனை செய்து கொண்டால் ஜாதகத்தில் உள்ள புத்திர தோஷம், புத்திர தடை போன்றவை நிவர்த்தியாகி சற்புத்திர பாக்கியத்தை பகவான் கிருஷ்ணன் அருள்வார்.

நாமும் கிருஷ்ண ஜெயந்தி அன்று நம் வீடுகளில் கண்ணனை அழைத்து வழிபட்டு ஏராளமான பலன்களைப் பெற்றிடுவோம்.

# வளமோடு வாழ
# விநாயகர் சதுர்த்தி வழிபாடு விரதமும் அதன் மகிமையும்

*...Parasakthi*

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்-கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா!"

**வளம் தரும் விநாயகர் சதுர்த்தி விரதம்**

இந்துக்களின் மூல முதற்பொருளாக விளங்குபவர் விநாயகப் பெருமான். இந்துக்களின் வாழக்கையில் அவரை துதித்தே அனைத்தையும் ஆரம்பிக்கின்றோம். குழந்தைகள் முதல் முதியவர் வரை அனைவருக்கும் பிடித்தமானவர் விநாயகர் இவரைப் பார்த்த மாத்திரத்திலேயே நம் மனதில் பக்தி தோன்றுகிறது.

'பிடித்து வைத்தால் பிள்ளையார்' என்று நம் கையாலேயே பிடித்து வைத்து நாம் பூஜை செய்வதால் நமக்குப் பிடித்தமான தெய்வமாக இருக்கிறார். நம் வினைகளைத் தீர்த்து வைப்பதால் விநாயகர் என்று போற்றுகிறோம். சிவ கணங்களுக்குத் தலைவராதலால் கணபதி என்றும் கணேசர் என்றும் வணங்குகிறோம்.



ஈசன் மகனான கணபதியைத் துதித்த பின்பே எந்தச் செயலையும் தொடங்குகிறோம். கேட்ட வரம் தரும் பிள்ளைக் குணம் கொண்டு, என்றும் எவர்க்கும் பிள்ளையாகத் திகழ்வதால் பிள்ளையாராகினார் அந்த கணேசன்.

**விநாயகர் சதுர்த்தி**

ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி தினமான விநாயகர் பிறந்த தினத்தை, 'விநாயகர் சதுர்த்தி' என்று விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள் இந்துக்கள். அவரவர் வீடுகளிலும் ஆங்காங்கேயுள்ள ஆலயங்களிலும் இவ்விழாவைக் கொண்டாடுவது மரபு. விநாயகரைப் பூஜித்து, விழா கொண்டாடி முடிந்ததும், அதற்கென்று செய்த அவரின் விக்ரஹத்தை (திருவுருவத்தை, மூர்த்தியை) விஸர்ஜனம் (நீரில் கரைத்தல்) செய்வதற்காக கடல், நதி, ஏரி, வாயக்கால், கிணறு என்று நீர் நிலைகளை நோக்கி எடுத்துச் சென்று அங்கே கரைத்த பின்னர் அவரவர் வீடு திரும்புவது வழக்கம்.

**விநாயகர் சதுர்த்தி வரலாறு - புராணக் கதைகள்**

விநாயகர் சதுர்த்தி விரதத்தை பார்வதி தேவியே மேற்கொண்டிருக்கிறார். தன் கணவரை அவமதித்து யாகம் நடத்திய தந்தை தட்சனிடம் நியாயம் கேட்கப் போனாள் பார்வதி என்ற தாட்சாயணி. ஆனால், தட்சனோ மிகவும் கர்வம் பிடித்தவன். மருமகனை அவமானப்படுத்தியது போதாதென்று, மகளையும் கேலி பேசினான்.

இந்த அவமானத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாத தாட்சாயணி, தட்சன் வளர்த்து வைத்திருந்த யாக குண்டத்தில் அப்படியே பாய்ந்துவிட்டாள்.

அதன்பிறகு, பர்வதராஜனுக்கு மகளாகப் பிறந்து பார்வதி என்னும் பெயருடன் வளர்ந்து வந்தாள். சிறு வயதிலிருந்தே கயிலைநாதன் தான் தன் கணவன் என்று தீர்மானமாக இருந்தாள். அவளுடைய அந்த எண்ணம் பலிக்க வேண்டும் என்றால், அவள்

விநாயகரை நினைத்து சதுர்த்தி விரதம் மேற்கொள்ள வேண்டுமென்று அவளுடைய தந்தையார் பர்வதராஜன் யோசனைச் சொன்னார்.

அவர் சொன்னபடியே, மண்ணால் ஒரு விநாயகர் விக்ரகத்தை உருவாக்கினாள் பார்வதி. கூடவே தங்கத்தாலும் ஓர் உருவம் செய்து இரண்டையும் பொற்கும்பம் ஒன்றின் பக்கத்தில் வைத்தாள். அந்த விக்ரகங்களுக்கு ஆகம விதிப்படி பூஜைகளை செய்தாள்.

ஆவணி மாத அமாவாசைக்கு அடுத்த சதுர்த்தியில் இப்படி பூஜையை ஆரம்பித்து, பௌர்ணமிக்கு அடுத்த சதுர்த்தி வரையில் தினமும் பூஜை செய்தாள்.

அதற்குப் பிறகு மண் பிள்ளையாரை, மேள தாளத்தோடு ஊர்வலமாக எடுத்துப் போய் நதியிலே இறக்கி விட்டாள். அந்த பதினைந்து நாட்களும் நியம நிஷ்டைகளை மீறாமல் இருந்த விரதத்தின் பலனாக, தான் ஆசைப்பட்டாற்போல கயிலைநாதனை கைப்பிடித்தாள்.

தமயந்தி நளனை மீண்டும் அடைந்ததும், கிருஷ்ணர் ஜாம்பவதியையும், சியமந்தகமணியையும் பெற்றுக்கொண்டதும், இராமன் சீதையை மீட்டதும், இந்திரன் அசுரப்பகையை வென்றதும், பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்ததும் இந்த விரத மகிமையினால்தான். இஷ்ட சித்திகளைப் பெற, நினைத்த காரியசித்தியைப் பெற விரும்புவோர் இவ்விரதத்தைக் கைக்கொள்ளலாம்.

தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவர் ஆதலால் விநாயகன் என்று திருநாமம் அவருக்கு! அந்த நாயகனைக் கொண்டாடும் திருநாள் தான் விநாயகர் சதுர்த்தி! தும்பிக்கையான் துணையிருப்பார்!

**விநாயகர் சதுர்த்தி விரதத்தைக் கடைபிடிப்பது எப்படி?**

இந்து மக்கள் கடைப்பிடிக்கும் விரதங்களில் விநாயகச் சதுர்த்தி விரதம் முக்கியமான ஒன்று. ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதச் சுக்கிலபட்ச சதுர்த்தித் திதியன்று விநாயகச் சதுர்த்தி கடைப்பிடிக்கப்படுகின்றது.

விநாயகச் சதுர்த்தி தினத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி மூஷிக வாகனனை முழு மனதோடு பிரார்த்திக்க வேண்டும்.
இந்த நாளில், அதிகாலையில் நீராடி, நித்ய கர்மங்களை நிறைவேற்ற வேண்டும். காலையில் எழுந்து வீட்டை சுத்தம் செய்து, மாவிலைத் தோரணம் கட்ட வேண்டும். பிறகு பூஜை நடைபெறும் இடத்தைச் சுத்தப்படுத்தி, மாக்கோலமிட்டு அலங்கரிக்க வேண்டும். ஒரு மனையில் (பலகையில்) கோலம் போட்டு ஒரு தலை வாழை இலையை நுனி வடக்கு நோக்கி இருக்குமாறு வைத்து பச்சரிசியை இலையில் பரப்பி நடுவில் களிமண்ணாலான பிள்ளையாரை வைத்து வழிபடுதல் வேண்டும்.

பூமியிலிருந்து உருவான எதுவும் பூமிக்கே திரும்பப் போகவேண்டும் என்ற தத்துவம்தான் களிமண் பிள்ளையார். களிமண் மட்டும்தான் என்றில்லாமல், உலோகம், கற்சிலை விக்ரகங்களையும் வைக்கலாம்.

மண்ணால் பிள்ளையார் விக்கிரகம் செய்து வைத்து வழிபடுவது விசேஷம்! அழகான வண்ணக் குடை அமைத்து, அதன் கீழ் விநாயகரை அமர்த்தி, பல வண்ண மலர்கள் சாற்றி அலங்கரிக்க வேண்டும். விநாயகருக்கு பிடித்தமான அருகம்புல், வெள்ளெருக்கு மாலை சார்த்தி, சந்தன-குங்கும திலகமிட்டு அலங்கரிக்கலாம்.

இனிப்புக் கொழுக்கட்டை, உப்பு கொழுக்கட்டை, அப்பம், சுண்டல், வடை, அவல், பொரி, நாவற்பழம், விளாம்பழம், வாழைப்பழம், கரும்புத்துண்டு, வெள்ளரிப்பழம், கொழுக்கட்டை ஒவ்வொன்றிலும் இருபத்தொன்று என்ற எண்ணிக்கையில் படைத்து நிவேதனம் செய்ய வேண்டும். இவை எல்லாவற்றையும் விட, விநாயகருக்கு மிகவும் பிடித்தமானது கொழுக்கட்டை. தேங்காய் பூர்ணத்தை உள்ளே வைத்து செய்யப்படும் மோதகத்தை படைத்தது வழிபடலாம். இதிலும் ஒரு தத்துவம் இருக்கிறது. மேலே இருக்கும் மாவுப் பொருள்தான் அண்டம். உள்ளே இருக்கும் வெல்லப் பூர்ணம்தான் பிரம்மம். அதாவது நமக்குள் இருக்கும் இனிய குணங்களை மாயை மறைக்கிறது. இந்த மாயையை உடைத்தால் அதாவது வெள்ளை மாவுப் பொருளை உடைத்தால், உள்ளே இனிய குணமான வெல்லப் பூர்ணம் நமக்குக்

கிடைக்கும். பிள்ளையாருக்கு பூக்களால் அலங்காரம் செய்து, படையலிட்டு, விநாயகர் துதி, விநாயகர் அகவல் போன்ற விநாயகர் பாடல்கள்களை பஜனை செய்து ஐங்கரனை வழிபடவும். விநாயகர் அஷ்டோத்திரம் சொல்லி வீட்டில் பூஜைகளை முடிக்கலாம்.

மாலையில் அவரவர் பகுதியில் உள்ள பிள்ளையார் கோயில்களுக்கு சென்று விசேஷ பூஜைகள், அர்ச்சனை, அபிஷேகங்களில் கலந்து கொள்ளலாம். அந்நாளில் விநாயகரை மனதாரப் பிரார்த்தித்து சிதறுகாய் உடைப்பது சிறப்பு.

வழிபாடு முடிந்தபின் குறிப்பிட்டதொரு நன்னாளில், விநாயகர் விக்கிரகத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்று நீர்நிலையில் சேர்க்கலாம்.
சிலர் இந்த விநாயகர் சதுர்த்திக்குப் பிறகும் தொடர்ந்து விரதத்தை அனுசரிப்பார்கள்.

அப்படித் தொடர்ந்து, பௌர்ணமிக்குப் பிறகு வரும் சதுர்த்தி தினத்தோடு விரதத்தை நிறைவு செய்வார்கள். விநாயகச் சதுர்த்தியன்று ஆரம்பிக்கும் பூஜையை புரட்டாசி மாதம் வளர்பிறை சதுர்த்தி வரை கடைப்பிடிப்பவர்களும் உண்டு.

இத்தனை நாள் விரதத்துக்குப் பிறகுதான் பிள்ளையாரை கிணற்றிலோ அல்லது ஏதாவது நீர்நிலையிலோ கொண்டுபோய் போடுவது வழக்கம். மறுநாள் ஏழைகளுக்கு அன்னதானம் அளித்து விரதத்தை நிறைவு செய்வார்கள். ஒருமாத காலம் கடைப்பிடிக்க முடியாதவர்கள், விநாயக சதுர்த்தியன்று ஒருநாள் மட்டுமாவது, உளமார்ந்த பக்தியுடன் விநாயகரை வழிபட, உன்னதப் பலன்கள் கிடைக்கும்.

## தமிழ் மந்திரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்று கின்றேனே.

**Spiritual Notebook - Rudhraa**

**ஆகஸ்ட்**
12 - சஷ்டி
16 - வரலக்ஷ்மி விரதம்
17 - ஏகாதசி
18 - பிரதோஷம்
20 - பௌர்ணமி, ஆவணி அவிட்டம்
24 - சங்கடஹர சதுர்த்தி
28 - கிருஷ்ண ஜெயந்தி

**செப்டம்பர்**
1 - ஏகாதசி
2 - பிரதோஷம்
3 - சிவராத்திரி
5 - அமாவாசை
9 - விநாயகர் சதுர்த்தி

## PILLAIYAR URUNDAI RECIPE

...Vijigermany

**Ingredients:**
Rice flour - 1 1/4 cup
Powdered jaggery - 3/4 cup
Water - 1 cup
Ghee - 1 1/2 tsp
Roasted gram dal - 1 tbsp
Broken cashew – 1 tbsp
Coconut – 1 tbsp
Cardamom powder – 1/4 tsp
Chopped almonds – For garnishing



**Method:**
- Boil the jaggery in water and filter.
- Fry the dal, cashewnuts and coconut in ghee.
- Add this to the boiling jaggery syrup.
- Add a pinch of cardamom powder.
- Reduce the flame, add rice flour and mix well ensuring that no lumps are formed.
- Make small balls, place them on a ghee-coated pan and steam for 10 minutes.
- Garnish with chopped almonds.

Penmai.com

# பூர்ண கொழுக்கட்டை

*...Angu Aparna*



**தேவையானப் பொருட்கள்:**
பதப்படுத்தப்பட்ட அரிசி மாவு - 1/4 கிலோ
தேங்காய்த் துருவல் - 1 கப்
வெல்லம் - 1/2 கப்
ஏலக்காய் பொடி - 1/4 டீஸ்பூன்
உப்பு - 2 சிட்டிகை
எண்ணெய் - 2 டீஸ்பூன்

**செய்முறை:**
**பதப்படுத்தப்பட்ட அரிசி மாவு:**
- 1 கிலோ பச்சரிசியைத் தண்ணீரில் ஒரு மணி நேரம் ஊற வைத்து நன்றாக கழுவி வடிகட்டி விட்டு, இதை ஒரு துணியில் உலர்த்தி நிழலில் காய வைக்கவும். அரிசி காய்ந்தவுடன் மிக்சியில் போட்டு அரைத்து எடுத்துக் கொள்ளவும்.
- பின் அரைத்த மாவை வெறும் வாணலியில் சில நிமிடங்கள் வறுத்து எடுத்த பின் சல்லடையில் சலித்துக் கொள்ளவும். (அரைத்த மாவை ஆவியில் 10 நிமிடம் வைத்து எடுத்தும் சல்லடையில் சலித்துக் கொள்ளலாம். சலிக்காவிட்டால் மாவு சிறு சிறு கட்டியாகி விடும்)

**மேல் மாவு**
- பதப்படுத்தி வைத்துள்ள அரிசி மாவை ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் எண்ணெய் சேர்த்து, அதோடு மிதமான சுடு தண்ணீரை தேவையான அளவு கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்துக் கட்டி இல்லாமல் கிளறி பூரி மாவு பதத்திற்குப் பிசைந்து கொள்ளவும்.

**பூர்ணம்**
- ஒரு வாணலியில் தேங்காய்த் துருவலைக் கொட்டி நன்றாக வறுத்துக் கொள்ளவும்.
- பின் வெல்லத்தை ஒரு பாத்திரத்தில் போட்டு சிறிது தண்ணீர் தெளித்து அடுப்பில் வைத்து பாகாக உருக்கிய பின்பு, வறுத்த தேங்காய் துருவலையும், ஒரு சிட்டிகை ஏலக்காய் பொடியையும் சேர்த்து நன்கு கிளறவும்.
- பாகு கொஞ்சம் கெட்டியானதும் அடுப்பிலிருந்து இறக்கி வைக்கவும்.

**கொழுக்கட்டை**
- ஒரு வாழை இலையை எடுத்து அதன் மீது ஒரு எலுமிச்சம் பழம் அளவு அரிசி மாவை வைத்து மெல்லியதாக வட்டமாக தட்டிக் கொள்ளவும்.
- தட்டிய மாவில் தேங்காய் பூர்ணத்தை ஒரு தேக்கரண்டி வைத்து இரண்டாக மடித்து, பூர்ணம் வெளியில் வராதவாறு ஓரத்தில் நன்றாக அழுத்தி மடிக்கவும்.
- பின் மடித்து வைத்துள்ள கொழுக்கட்டைகளை இட்லி பானையில் ஆவியில் சிறிது நேரம் வேக வைத்து எடுத்து சூடாகப் பரிமாறவும்.

**குறிப்பு:**
- பூர்ணத்திற்கு உடைத்த முந்திரி, உலர் திராட்சை போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.
- வாழை இலையில் சிறிது எண்ணெய் தடவிய பின்பு அரிசி மாவைத் தட்டினால் மாவு ஒட்டாமல் எடுக்க வரும்.
- அரிசி மாவை இரண்டாக மடிக்கும் போது வாழை இலையோடு சேர்த்து மடித்தால் சுலபமாக வரும். அரிசி மாவை மிகவும் மெல்லியதாகத் தட்ட வேண்டாம்.

Penmai.com

My அங்காடி MY ANGADI .com

Online Tamil Book Store / Cds DVDs







# Audio & Video CDs

**Buy Now**

Free shipping across India for purchase above Rs. 500*

@ one place
www.MyAngadi.com

# உன்னைச் சரணடைந்தேன்...

...Sumathisrini

# நலம் தரும் நவராத்திரி



மக்களின் பண்பாட்டை வளர்க்கும் சாதனங்களுள் விழாக்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இந்துக்கள் கொண்டாடும் சிறப்பான விழாக்கள் பல. அவற்றுள் முக்கியமானது நவராத்திரி. தமிழ்நாடு, ஆந்திர மாநிலங்களில் நவராத்திரி என்றும், கர்நாடகத்தில் தசரா என்றும், வட மாநிலத்தில் பூஜா விழா என்றும் பெயரிட்டு இவ்விழா கொண்டாடப்படுகின்றது. வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களும் ஆங்காங்கே கொண்டாடுவது வழக்கம்.

மகிசாசுரன் என்ற அரக்கன் மக்களை துன்புறுத்திய போது, தங்களைக் காப்பாற்றி அருளுமாறு அன்னை ஆதிபராசக்தியிடம் அனைவரும் முறையிட்டனர். அன்னை ஒன்பது நாட்கள் போரிட்டு பத்தாவது நாள் மகிசாசுரனை வதம் செய்து வெற்றி கொண்டாள். அந்நிகழ்ச்சியைக் கொண்டாடுவதே நவராத்திரி எனப் புராணங்கள் கூறுகின்றன. நவராத்திரி மாதக் காலத்தில் ஏற்படும் மாறுபாடான தட்ப வெப்பநிலை கடுமையான நோய்களை ஏற்படுத்துவதாகவும், கிரக நிலை சரியில்லாதவர்கள் அதிகம் பாதிப்பிற்குள்ளாவதாகவும், அக்கொடுமையினின்றும் விடுபட அரசர்கள் பெரிய வேள்வி நடத்தி, துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி பூஜை நடத்தி, நவராத்திரி விழா கொண்டாடி மக்களைப் பாதுகாத்ததாகவும் கூறப்படுகிறது. அந்த முறையில் தான் இன்றும் தொடர்ந்து இவ்விழாவினைக் கோயில்களிலும் வீடுகளிலும் கொண்டாடுகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் ஆறு ருதுக்களின் பருவ காலங்கள் ஆரம்பத்தை நவராத்திரி விழாவாகக் கொண்டாடி வந்தனர். வளர்ந்தும் பெருகியும் வரும் விஞ்ஞான உலகில் காலப்போக்கில் தற்போது வசந்தகால நவராத்திரியும், சாரதா நவராத்திரியுமே பெரும்பான்மையாகக் கொண்டாடப்படுகின்றன. பொதுவாக சக்தி ஆலயங்களில் இவ் விழா விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது.

நவராத்திரி வழிபாடு பெண்களுக்கே உரியது. எல்லா வயதுடைய, பருவத்தைச் சார்ந்த பெண்கள் நவராத்திரி வழிபாட்டில் ஈடுபடலாம். நவராத்திரி வழிபாட்டால் பெண் குழந்தைகள் பெறுவது மகிழ்ச்சியின் பயன். கன்னிகள் பெறுவது திருமணப் பயன். சுமங்கலிகள் பெறுவது மாங்கல்யப் பயன். மூத்த சுமங்கலிகள் பெறுவது மனமகிழ்ச்சி, மன நிறைவு; எல்லோரும் பெறுவது பரிபூரண திருப்தி.

புரட்டாசி மாத வளர்பிறைப் பிரதமையில் தொடங்கி விஜயதசமியில் நவராத்திரி முடிகிறது. முதல் ஒன்பது நாட்களில் முப்பெரும் தேவியரை வழிபடவேண்டும்.

முதல் மூன்று நாட்கள் **துர்க்கையின் வழிபாடு**.

Penmai.com

மக்களின் பண்பாட்டை வளர்க்கும் சாதனங்களுள் விழாக்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இந்துக்கள் கொண்டாடும் சிறப்பான விழாக்கள் பல. அவற்றுள் முக்கியமானது நவராத்திரி.
தமிழ்நாடு, ஆந்திர மாநிலங்களில் நவராத்திரி என்றும், கர்நாடகத்தில் தசரா என்றும், வட மாநிலத்தில் பூஜா விழா என்றும் பெயரிட்டு இவ்விழா கொண்டாடப்படுகின்றது. வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களும் ஆங்காங்கே கொண்டாடுவது வழக்கம்.

மகிசாசுரன் என்ற அரக்கன் மக்களை துன்புறுத்திய போது, தங்களைக் காப்பாற்றி அருளுமாறு அன்னை ஆதிபராசக்தியிடம் அனைவரும் முறையிட்டனர். அன்னை ஒன்பது நாட்கள்



போரிட்டு பத்தாவது நாள் மகிசாசுரனை வதம் செய்து வெற்றி கொண்டாள். அந்நிகழ்ச்சியைக் கொண்டாடுவதே நவராத்திரி எனப் புராணங்கள் கூறுகின்றன. நவராத்திரி மாதக் காலத்தில் ஏற்படும் மாறுபாடான தட்ப வெப்பநிலை கடுமையான நோய்களை ஏற்படுத்துவதாகவும், கிரக நிலை சரியில்லாதவர்கள் அதிகம் பாதிப்பிற்குள்ளாவதாகவும், அக்கொடுமையினின்றும் விடுபட அரசர்கள் பெரிய வேள்வி நடத்தி, துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி பூஜை நடத்தி, நவராத்திரி விழா கொண்டாடி மக்களைப் பாதுகாத்ததாகவும் கூறப்படுகிறது. அந்த முறையில் தான் இன்றும் தொடர்ந்து இவ்விழாவினைக் கோயில்களிலும் வீடுகளிலும் கொண்டாடுகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் ஆறு ருதுக்களின் பருவ காலங்கள் ஆரம்பத்தை நவராத்திரி விழாவாகக் கொண்டாடி வந்தனர். வளர்ந்தும் பெருகியும் வரும் விஞ்ஞான உலகில் காலப்போக்கில் தற்போது வசந்தகால நவராத்திரியும், சாரதா நவராத்திரியுமே பெரும்பான்மையாகக் கொண்டாடப்படுகின்றன. பொதுவாக சக்தி ஆலயங்களில் இவ் விழா விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது.

நவராத்திரி வழிபாடு பெண்களுக்கே உரியது. எல்லா வயதுடைய, பருவத்தைச் சார்ந்த பெண்கள் நவராத்திரி வழிபாட்டில் ஈடுபடலாம். நவராத்திரி வழிபாட்டால்

பெண் குழந்தைகள் பெறுவது மகிழ்ச்சியின் பயன். கன்னிகள் பெறுவது திருமணப் பயன். சுமங்கலிகள் பெறுவது மாங்கல்யப் பயன். மூத்த சுமங்கலிகள் பெறுவது மனமகிழ்ச்சி, மன நிறைவு; எல்லோரும் பெறுவது பரிபூரண திருப்தி.

புரட்டாசி மாத வளர்பிறைப் பிரதமையில் தொடங்கி விஜயதசமியில் நவராத்திரி முடிகிறது. முதல் ஒன்பது நாட்களில் முப்பெரும் தேவியரை வழிபடவேண்டும்.

முதல் மூன்று நாட்கள் **துர்க்கையின் வழிபாடு.**
இடை மூன்று நாட்கள் **லட்சுமி வழிபாடு.**
**கடை மூன்று நாட்கள் சரஸ்வதி வழிபாடு.**

**துர்கை:** இவள் நெருப்பின் அழகு. ஆவேசப் பார்வை. வீரத்தின் தெய்வம். சிவப்பிரியை. இச்சா சக்தி. 'கொற்றவை', 'காளி' என்றும் குறிப்பிடுவர். வீரர்கள் தொடக்கத்திலும், முடிவிலும் வழிபடும் தெய்வம். துர்கை, மகிஷன் என்ற அசுரனுடன் ஒன்பது இரவுகள் போரிட்டாள். இவையே 'நவராத்திரி' எனப்படும். அவனை வதைத்த பத்தாம் நாள் 'விஜயதசமி'. வங்காளத்தில் துர்கா பூஜை என்ற பெயரோடு கொண்டாடுகிறார்கள்.

மக்களின் பண்பாட்டை வளர்க்கும் சாதனங்களுள் விழாக்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இந்துக்கள் கொண்டாடும் சிறப்பான விழாக்கள் பல. அவற்றுள் முக்கியமானது நவராத்திரி. தமிழ்நாடு, ஆந்திர மாநிலங்களில் நவராத்திரி என்றும், கர்நாடகத்தில் தசரா என்றும், வட மாநிலத்தில் பூஜா விழா என்றும் பெயரிட்டு இவ்விழா கொண்டாடப்படுகின்றது. வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களும் ஆங்காங்கே கொண்டாடுவது வழக்கம்.

மகிசாசுரன் என்ற அரக்கன் மக்களை துன்புறுத்திய போது, தங்களைக் காப்பாற்றி அருளுமாறு அன்னை ஆதிபராசக்தியிடம் அனைவரும் முறையிட்டனர். அன்னை ஒன்பது நாட்கள் போரிட்டு பத்தாவது நாள் மகிசாசுரனை வதம் செய்து வெற்றி கொண்டாள். அந்நிகழ்ச்சியைக் கொண்டாடுவதே நவராத்திரி எனப் புராணங்கள் கூறுகின்றன. நவராத்திரி மாதக் காலத்தில் ஏற்படும் மாறுபாடான தட்ப வெப்பநிலை கடுமையான நோய்களை ஏற்படுத்துவதாகவும், கிரக நிலை சரியில்லாதவர்கள் அதிகம் பாதிப்பிற்குள்ளாவதாகவும், அக்கொடுமையினின்றும் விடுபட அரசர்கள் பெரிய வேள்வி நடத்தி, துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி பூஜை நடத்தி, நவராத்திரி விழா கொண்டாடி மக்களைப் பாதுகாத்ததாகவும் கூறப்படுகிறது. அந்த முறையில் தான் இன்றும்



# பித்ரு பூஜை, தர்ப்பணம் முதலியவை அவசியமா?

...Rudhraa

உலகங்களை உற்பத்தி செய்து பரிபாலித்து வரும் பகவானுடைய அரசாங்கம் தான் மிகப்பெரிய அரசு ஆகும். முப்பத்து முக்கோடி தேவர்களும் பித்ருக்களும் ஈசுவரனுடைய அரசாங்கத்தின் அதிகாரிகள் ஆவர். வடக்கில் உள்ள தேவலோகமும் தெற்கில் உள்ள பித்ரு லோகமும் அவர்களுடைய இருப்பிடம் என்று மறைகள் கூறுகின்றன.

இந்த இறைவனது அரசுக்கு நாம் செலுத்தும் வரிகள் - தேவர்கடனும் பிதிர் கடனும். நம்மையெல்லாம் காக்கின்ற அவ்வதிகாரிகளின் ஜீவனத்துக்கு என்ன வழி-வகை செய்துள்ளார், ஸர்வேசுவரன்?

நாம் செய்யும் தேவ யக்ஞங்களும் பித்ரு யக்ஞங்களுமே அவர்களைக் காப்பாற்றுகின்றன.

“தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஐம்புலத்து ஆ(று) ஓம்பல் தலை” என்பது திருவள்ளுவர் வாக்கு.

எனவே, பித்ருக்களின் ஆசி கிடைத்தால், நல்லது நடக்கும், அவர்களுக்கான கடமைகளைச் சரிவரச் செய்து, அவர்களின் ஆசிகளைப் பெறுதல் முக்கியம்.



# மகாளய அமாவாசை

*...Parasakthi*

**பாவ வினைகள் போக்கும் மகிமை மிக்க மகாளய அமாவாசை - மங்கலம் தரும் புண்ணிய வழிபாடு**

ஒரு வருடத்தை அயனம், பருவம், மாதம், பட்சம், வாரம், நாள், ராசி, திதி, யோகம், கரணம் எனக் கணக்கிட்டு ஒன்றுடன் ஒன்று சேரும் போதோ அல்லது தனித்தனியே சில மாதங்களில் வரும்போதோ பல முக்கிய விரதங்களையும், பூஜை, வழிபாடுகளையும் நம் முன்னோர்கள் கடைபிடித்ததோடு அன்றி இன்றைய தலைமுறையினருக்கு அவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தி குடும்பத்தினரையும் உறவினரையும் மகிழ்ச்சியுடனும், ஆசையுடனும் காண வருவார்கள் என் நம்பப்படுகிறது. அத்தருணத்தில் அவர்களை நினைத்து மனதார வழிபடும் போது நமது பிதுர்க்களின் பூரண ஆசிகளையும் அருளையும் பெற முடியும். .

சூரியன் கன்னி ராசிக்குள் புகுவதற்கு முன் வரும் பவுர்ணமிக்கு அடுத்த நாள் (பிரதமை திதி) முதல் அமாவாசைக்கு அடுத்து வரும் பிரதமை வரை உள்ள நாட்கள் மகாளயபட்சம் எனப்படும். பிதுர்களை வணங்கும் புண்ணிய காலம்




அத்தகைய மகிமைமிக்க வழிபாடுகளை நம்மை மேற்கொள்ளவும் வழிவகை செய்துள்ளனர். அத்தகைய புண்ணிய வழிபாடுகளில் ஒன்று தான் மகாளய அமாவாசை வழிபாடு.

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ராசிக்குள் சூரியன் பிரவேசிக்கிறது. இதன்படி ராசி சக்கரத்தில் தென்மேற்கில் உள்ள கன்னி ராசிக்குள் சூரியன் செல்லும் மாதமாகிய புரட்டாசி மாதத்தில் எமதர்மராஜன் நம்முடைய பிதுர்க்களை பூமிக்கு அனுப்புவதாக ஐதீகம்.
மகாளய அமாவாசை அன்று நமது முன்னோர்களும் இறந்து போன ரத்த சம்பந்த உறவுகளும் அவர்களுடைய

மஹாளயபட்சம் ஆகும். இந்த சமயத்தில் நம் முன்னோர்களை திருப்தி செய்யும் வகையில் தர்ப்பணம் செய்ய வேண்டியது அவசியம். இந்நாளில் தீர்த்தத் தலங்களுக்குச் சென்று எள், தண்ணீர் இறைத்து, அவர்களது தாகம் தீர்க்க வேண்டும். இந்த காலக்கட்டத்தில் வரும் பானி, மஹாபானி என்றும், அஷ்டமி, மத்பாஷ்டமி என்றும் திரயோதசி கஜச்சாயை என்றும் கூறப்படும். இந்த புண்ணிய தினங்களில் பித்ருக்கள் வழிபாடு மிகச்சிறந்ததாகும்.

முன்னோரின் பெயர்களை உச்சரித்து, காசி காசி என்று சொன்னபடியே, வீட்டு வாசலிலேயே எள்ளும் தண்ணீரும் விட்டு

கூட திதி பூஜையைச் செய்யலாம். பின்னர், பூஜையறையில் நம் முன்னோர்களை நினைத்து வழிபாடு செய்ய வேண்டும். இந்த எளிய பூஜை அளவற்ற நன்மைகளைத் தரக்கூடியது.

கருடபுராணம், விஷ்ணு புராணம், வராகபுராணம் போன்ற புராணங்களில் இந்நாளில் ஒருவருக்காவது அன்னதானம் செய்ய வேண்டும் என்றும் முடியாதவர்கள் காகத்திற்கு அன்னம் வைக்கலாம், பசுவுக்கு அகத்திக்கீரை, பழங்கள் கொடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மகாளய அமாவாசை தினத்தன்று அவரவர் குடும்ப வழக்கப்படி முன்னோர்களை எந்த வகையில் வேண்டுமானாலும் வழிபடலாம். இறந்தவர்களின் போட்டோவுக்கு வீட்டில் மலர் மாலைகள் சூட்டி, அவர்கள் விரும்பி சாப்பிட்ட உணவு வகைகளை படைத்து வணங்கலாம். முன்னோர்களின் படங்களுக்கு துளசிமாலையோ அல்லது துளசி இலையோ சமர்ப்பிக்க வேண்டும். துளசிவாசம் பெருமாளை சந்தோஷப்படுத்தும். இதனால் நம் பித்ருக்களுக்கு விஷ்ணு பகவானின் பரிபூரண ஆசி கிடைக்கும். முன்னோர்கள் விஷ்ணுவின் ஆசி பெற்ற மகிழ்ச்சியில் தமது வம்சத்தினரையும் மனதார வாழ்த்துவார்கள் என்பது ஐதீகம்.இறந்த அப்பா, அம்மாவுக்கு திதி, சிரார்த்தம் செய்யாமல் விட்டவர்கள், அப்பா, அம்மா இறந்த தேதி, திதி போன்றவற்றை மறந்தவர்கள் இந்த மகாளய அமாவாசையில் அவர்களை நினைத்து வணங்கலாம். துர்மரணம், விபத்து, அகால மரணம் அடைந்தவர்கள் ஆத்மா சாந்தியடைந்து முக்தி கிடைப்பதற்கு இந்த நாள் மிகவும் உகந்ததாகும். புரோகிதர்களை அழைத்து யாகம், ஹோமம் செய்து வணங்கலாம். மகாளய அமாவாசை நாளன்று கடல், ஆறு உள்ளிட்ட நீர் நிலைகளில் நீராடி முன்னோர்களுக்கு பித்ரு தர்பணம் அளிப்பது சிறப்பானதாக கருதப்படுகிறது.

இந்த மகளாய அமாவாசை வழிபாடு மூலமாக நம் முன்னோர்களின் ஆத்மாவையும் இறந்து போன குடும்பத்தவர்களின் ஆத்மாவையும் மரியாதை செய்து திருப்திப்படுத்தினால் திருமணத்தடை, புத்திரப்பேறு இன்மை, கடன்தொல்லை, மனக்கவலை, நவக்கிரக தோஷங்கள் என்று வாழ்வின் அனைத்து விதமான துன்பங்களும் விலகும். அத்தகைய ஈடு இணையற்றது மகாளய அமாவாசை வழிபாடு. இந்நாளில் பிதுர்களுக்கு தர்ப்பணம் செய்வதால் அவர்களது பரிபூரண ஆசி கிடைக்கும்.

முன்னோர்கள், மூத்தோர்கள், இறந்த தாய், தந்தையரை நினைவுகூர்ந்து நாம் செய்யும் வழிபாடுகள், தர்ம காரியங்கள் ஆகியவை அந்த ஆத்மாக்களுக்கு மகிழ்வளிக்கும் செயலாகும். இதனால், அவர்களது பரிபூரண ஆசி நமக்கும் நம் சந்ததிக்கும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

Penmai.com



# பிரதோஷ வழிபாடு

...Sudhavaidhi

ஒவ்வொரு பிரதோஷத்திலும் இறைவனை பூஜிப்பதற்கு முன் நந்தி தேவரை பூஜிப்பது நன்மை கிட்டும். எல்லோருக்கும் எல்லா நலன்களையும் பக்தியையும் வளர்க்க என்னிடமிருக்கும் நந்தி தேவன் எனக்கு இணையான பெருமையுடையவன் ஆதலால் நான் இரண்டாம் சிவவேடம் தரித்து பூவுலகில் கர்மத்தை பரவ செய்கிறேன் என்று சிவ பெருமான் கூறியுள்ளார்.

சிவன் திருமுன் இருக்கும் நந்தி தேவருக்கு, அருகம்புல் மாலையணிவித்து, நெய் விளக்கிட்டு வெல்லம் கலந்த அரிசி நிவேதனம் செய்யவேண்டும். பால், தயிர், தேன், பழங்கள், பஞ்சாமிர்தம், நெய், இளநீர், சர்க்கரை, எண்ணை, சந்தனம், வில்வம், மல்லிகைப்பு, செந்தாமரைப்பு, வெண்தாமரைப்பு, எலுமிச்சை, துளசி போன்றவற்றில் நன்மை கிட்டும். நந்தி தேவருக்கு தீபாராதனை முடிந்தபிறகு மூலவருக்கு தீபாராதனை நடைபெறும். நந்தி தேவரின் பின்பக்கத்திலிருநது இரண்டு கொம்புகளிடையே நின்று தீபாராதனையைப் பார்த்தால் சகலதோஷமும் துன்பமும் நீங்கி




## பிரதோஷ வழிபாடு

இன்பம் எய்துவர். மலடு நீங்கி மகப்பேறு பெறுவர். கடன் நீங்கி செல்வம் பெறுவர். நோய் நீங்கி நலம் பெறுவர். அறியாமை நீங்கி ஞானம் பெறுவர். பாவம் தொலைத்துப் புண்ணியம் பெறுவர். பிறவி ஒழிந்து முக்தி அடைவர். சகல சௌபாக்கியங்களையையும் பெற்று முடிவில் மோட்சத்தையும் சொர்க்கத்தையையும் அடைவர்.

எல்லாம் வல்ல இறைவனைப் போற்றி ஒவ்வொரு பிரதோஷ நாட்களிலும் விரதமிருந்து வழிபட்டு வருபவர்களுக்கு அனைத்து அரண்களும் கிடைக்கும் என்பதை ஓலைச்சுவடிகளின் ஆதாரங்களிலிருந்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிரதோஷ தகவல்கள்

பிரதோஷ வேளையில், கருவறை ஈசனை நந்தியின் இரு கொம்புகளுக்கிடையே தரிசிக்க வேண்டும். அங்கேதான் தேவர்களுக்கு சந்தியா நிருத்தத்தை ஈசன் ஆடிக்காட்டியருளினார்.

பிரதோஷ வேளையில் சமஸ்கிருத மொழி அறிந்தவர்கள் ஸ்ரீருத்ரத்தையும், தமிழ் மொழி அறிந்தவர்கள் நீலகண்டப் பதிகத்தையும் பாராயணம் செய்வது

விசேஷம்.

பிரதோஷ வேளையில் ஈசன் ரிஷபத்தின் மீது ஆலயவலம் வரும்போது, மூன்றாவது சுற்றில் ஈசான (வடகிழக்கு) திக்கில் நடைபெறும் வழிபாட்டை தரிசிப்பது சிறப்பான புண்ணியம் தரும்.

ஈசான திக்கில், ஈசன் ஆலகால விஷமருந்தி பின் எழுந்து ஆனந்த தாண்டவம் ஆடியபோது, கூடவே பூதகணங்களும் பூதநிருத்தம் ஆடின. இதற்கென பிரத்யேகமாக ராகம், தாளம், வாத்தியம் உண்டு.

பிரதோஷ நேரத்தில் ஈசனுக்கு வில்வ தளங்களால் மாலை தொடுத்து அணிவிப்பது பெரும் பாக்கியம் தரும்.

பிரதோஷ வேளை, ரஜ்னிமுக வேளை என்றும் அழைக்கப்படுகிறது. அதற்கு இரவின் முகம் என்பது பொருள்.

தோஷம் என்றால், குற்றமுள்ள என்று பொருள். பிரதோஷம் என்றால் குற்றமில்லாதது. குற்றமற்ற அந்த வேளையில் ஈசனைத் தொழ, நம் தோஷங்கள் நீங்கும்.

ஈசன் விஷத்தையுண்டு, சயனித்து, பிறகு எழுந்து முதன்முதலாக சந்தியா தாண்டவத்தை ஆடியது ஒரு சனிக்கிழமை மாலையில்தான் என்பதால் சனிப்பிரதோஷம் சிறப்பானது. நாம் யாருக்காவது கடன் கொடுக்க வேண்டியிருந்தால் அதில் ஒரு சிறு தொகையை சனிப்பிரதோஷ வேளையில் தர, நம் கடன்கள் சீக்கிரம் அடைபடும் என்பார்கள்.

தினமும் மாலைவேளையை தினப்பிரதோஷம் என்றும், வளர்பிறை, தேய்பிறை, திரயோதசி நாட்களில் வரும் பிரதோஷம் பட்சப் பிரதோஷம் என்றும், மகாசிவராத்திரிக்கு முன் வரும் பிரதோஷம் மகாபிரதோஷம் என்றும் அழைக்கப்படுகின்றன.

மகாசிவராத்திரிக்கு முன்வரும் பிரதோஷம் சனிக்கிழமையன்று வந்தால் அது சனி மகாபிரதோஷமாகும். அன்று ஈசனை தரிசித்தால் ஆயிரம் மடங்கு பலன்கள் கிட்டும்.

தொடர்ந்து பதினான்கு ஆண்டுகள் பிரதோஷ தரிசனம் செய்பவர்களுக்கு சிவலோக பதவி கிட்டும்.

பிரதோஷ வேளையில் ஈசன் ஆடும் தாண்டவத்திற்கு அம்பிகை பாட, நான்முகன் தாளம்போட, சரஸ்வதி வீணைமீட்ட, நரநாராயணர்கள் மத்தளம் இசைக்க, இந்திரன் புல்லாங்குழல் வாசிக்க, லட்சுமி கஞ்சிரா இசைக்க, ஏழுகோடி இசைக்கருவிகளை கந்தர்வர்கள் மீட்டுவதாக ஐதீகம்.

பிரதோஷ காலங்களில் ஈசனின் கருவறை கோமுகம் அருட்சக்தியோடு துலங்குவதால் அதை பக்தியுடன் வணங்க வேண்டும்.

ஆலகால விஷத்தைக் கண்டு பயந்த தேவர்கள் முன்னும் பின்னுமாக ஓடியதை நினைவுறுத்தும் வகையில் பிரதோஷ வேளையில் சோமசூக்தப் பிரதட்சிணம் செய்யப்படுகிறது. அது அனந்தகோடி பலனைத் தரும் என்பர்.

ஈசன் பாற்கடலிலிருந்து வெளிவந்த ஆலகால விஷத்தை உண்டபோது அதன் உஷ்ணம் அவரைத் தாக்காமலிருக்க அசுவினி தேவர்கள் மயில் பீலி ஆலவட்டத்தை வீசினர். அதன் நினைவாக இன்றும் பிரதோஷ வேளையில் பல ஆலயங்களில் ஈசனுக்கு மயில் பீலி விசிறிகளால் வீசுகின்றனர்.

Penmai.com

# பட்டீஸ்வரத்து துர்க்கை அம்மா

...Brindhapsych @ Brindha

ஆடிவெள்ளிக்கிழமை அரக்கு வர்ண பட்டாடையில்
ஆபரண அலங்காரத்துடன் பட்டீஸ்வரத்து துர்க்கைஅம்மா

உன் காந்தக் கண்ணொளியை காணக் கண் கூசுதம்மா
உன் மூக்குத்தி மின்னொளியில் விண்ணகமே தெரியுதம்மா
உன் குமிழ்இதழ் சிரிப்பில் என் கவலையெல்லாம் பறக்குதம்மா
உன் செஞ்சாந்துப் பொட்டழகில் என்நெஞ்சமெல்லாம் நிறையுதம்மா
உன் சுருள்கேசக் குழலழகில் மருள் கூட விலகுதம்மா
உன் பட்டுப்பாத தரிசனத்தில் என் பாவமெல்லாம் போகுதம்மா

செவ்வரளி, சாத்துக்குடி, எலுமிச்ச பழமாலை இவையாவும் என்னதவம்
செய்தனவோ அன்னையிவள் திருத்தோளை அலங்கரிக்க

நான் குங்குமமாய் பிறந்திருந்தால் நின்
குமுத பாதம் அடைந்திருப்பேன் எப்போதோ
மல்லிகையாய் பிறந்திருந்தால் நின்
மலர்க்ரீடம் அலங்கரிப்பேன் எப்போதும்
மஞ்சளாய் பிறந்திருந்தால் நின் திருமேனி
மேவியிருப்பேன் எந்நாளும்
பாலாய் பிறந்திருந்தால் அபிஷேக
பொருளாக பயன் அடைந்திருப்பேன்
பன்னீராய் பிறந்திருந்தால் உன்மீதே
வாசம் செய்துருப்பேன் என் ஆயுள் உள்ளவரை

பெண்ணாக பிறந்து விட்டேனடி இப்புவிதனிலே
புலம்புகிறேன் பேதையாக-
உன் கடைக்கண் பார்வையால்
என் இடர் களைவாயோ? இன்னல் நீக்குவாயோ
இனிமை சேர்ப்பாயோ?
சோதரியே, மாதரியே சுந்தரியே
கற்பகமே நின பொற்பாதம் சரணடைந்தேன்
பட்டீஸ்வரத்து துர்க்கை அம்மா.

## தமிழ் மந்திரம்

திகடசக்கரச் செம் முகம் ஐந்துளான்
சகடச் சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணியா உறை
விகடச் சக்கரன் மெய்பதம் போற்றுவோம்.

## Spiritual Notebook - Rudhraa

**செப்டம்பர்**

11 - சஷ்டி
15 - ஏகாதசி
16 - ஓணம்
17 - பிரதோஷம்
19 - பௌர்ணமி
24 - சங்கடஹர சதுர்த்தி
25 - சஷ்டி
30 - ஏகாதசி

**அக்டோபர்**

2 - பிரதோஷம்
3 - சிவராத்திரி
4 - மகாளய அமாவாசை
5 - நவராத்திரி ஆரம்பம்

Penmai.com

My அங்காடி
MY ANGADI .com

Traditional Tanjore Paintings Collection



Call us @ 83441-43220

Traditional Paintings @ www.MyAngadi.com

Buy Now

Free shipping across India.

International Shipping also Available.

For Advertisements Please Contact

support@penmai.com or

call us at 8344 143 220

Submit your works or questions to
Penmai.com

Write us your feedback to
admin@penmai.com

For advertisement
please contact 8344 143 220

Penmai.com

*Our special and sincere thanks to all the content provider in this eBook.*

*Designing: Karthikeyan & Parasakthi*

*For Advertisement Please contact,*
*support@penmai.com or call us at 8344143220*

*Shared contents.*
*Credit goes to the rightful owner of the article*

*Write us your feedback to support@penmai.com*